கல்கி

KALKI 20-7-75 60 காசு



5 x 120 = 1047/90

இது உண்மை! தவணைத்
தொகை கட்டி முடிந்த பின்
ரொக்கமாக கொடுக்கிறோம்.





எங்கள் ரெக்கரிங்
டெபாஸிட்டு திட்டம்
உங்கள் வருங்கால
தேவைகளை நிறைவேற்ற உதவுகிறது.

மாதத்தவணை ரூ	தவணைகளுக்குப்பின் கிடைக்கும் தொகை 12 மாதங்கள் ரூ	24 மாதங்கள் ரூ	36 மாதங்கள் ரூ	48 மாதங்கள் ரூ	60 மாதங்கள் ரூ	61 மாதங்கள் ரூ
5	62.80	131.00	208.25	291.30	382.55	401.50
10	125.60	262.00	416.50	582.60	765-10	803.00
50	628.00	1310.00	2082.50	2913.00	3825.50	4015.00
100	1256.00	2620.00	4165.00	5826.00	7651.00	8030.00
500	6280.00	13100.00	20825.00	29130.00	38255.00	40150.00
1000	12560.00	26200.00	41650.00	58260.00	76510.00	80300.00

மாதத்தவணை ரூ	தவணைகளுக்குப்பின் கிடைக்கும் தொகை 72 மாதங்கள் ரூ	84 மாதங்கள் ரூ	96 மாதங்கள் ரூ	108 மாதங்கள் ரூ	120 மாதங்கள் ரூ
5	498.75	615.80	745.40	888.95	1047.90
10	997.50	1231-60	1490.80	1777.90	2095.80
50	4987.50	6158.00	7454.00	8889.50	10479.00
100	9975.00	12316.00	14908.00	17779.00	20958.00
500	49875.00	61580.00	74540.00	88895.00	104790.00
1000	99750.00	123160.00	149080.00	177790.00	209580.00

ரெக்கரிங் டெபாஸிட்டுகள் 240 மாதங்கள் வரை ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

''நீங்கள் மேலும்
சேமிக்க நாங்கள்
உதவுகின்றோம்''

TNSC BANK

மற்ற விவரங்களுக்கு எங்களை அல்லது உங்கள்
அருகாமையிலுள்ள எங்கள் கிளைகளை அணுகவும்.


தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்

379, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோட், சென்னை-600001
தந்தி: 'URBANK' போன்: 20367 (3 லைன்கள்)
டெலக்ஸ்: MS 7225

TNSCB : 123/75

கிளைகள்: அண்ணா நகர், அண்ணா சாலை (காமதேனு), அண்ணா சாலை (அண்ணா சிலை), அசோக் நகர், பெஸண்ட் நகர், எழும்பூர், காந்தி நகர், கிரீன்வேஸ் ரோடு, ஜவஹர் நகர், கெல்லிஸ், தங்கசாலை, மைலாப்பூர், மைலாப்பூர் குளம், நுங்கம்பாக்கம், புரசைவாக்கம், ராயப்பேட்டை, ராஜா அண்ணாமலைபுரம், சாந்தோம், சாஸ்திரி நகர், ஷெனாய் நகர், தியாகராய நகர் & திருவல்லிக்கேணி

ஜான்ஸன்ஸ் வழங்குகிருர்கள்
பல-பயனுள்ள cotton bud



இதோ அதன் உபயோகங்கள்




மேக்-அப்பை சீராக்குகிறது அல்லது நீக்க உதவுகிறது.




நுட்பமான சாதனங்களை சுத்தம் செய்கிறது.



குழந்தையின் மூக்கை சுத்தம் செய்கிறது—நன்றாக, மென்மையாக.



சிறிய காயங்களின் மீது மருந்தை ஒற்றி எடுக்க உதவுகிறது.



காதுகளை பத்திரமாக சுத்தம் செய்கிறது–குழந்தையின் காதுகளையும் உங்கள் காதுகளையும்.

ஜான்ஸன்ஸ் Cotton Bud-ஐ இன்னும் எத்தனையோ வழிகளில் நாள்தோறும் உபயோகிக்கலாம். உங்கள் வீட்டில் எப்பொழுதும் ஜான்ஸன்ஸ் Cotton Bud இருக்கட்டும்.

அது சுத்தமானது • பத்திரமானது.
சுகாதாரமானது • சௌகரியமானது.



புதிது!
வளையக்கூடிய
பிளாஸ்டிக் தண்டு


பத்திரமாக சுத்தம்
செய்வீர்- ஜான்ஸன்ஸ்
Cotton Bud—ஆல் சுத்தம் செய்வீர்

கல்கி

ராக்ஷஸ ஆடி 4
ஜூலை 20, 1975

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.





தலைமுறைத் தலைமுறையாக தாய்மார்கள் நம்பிக்கையுடன் தேர்ந்தெடுப்பது...







ஜம்மியின் லிவர்க்யூர்

நம்பகமான குடும்ப நிவாரணி

ஆம். ஜம்மியின் லிவர்க்யூர் எழுபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக குடும்பத்-தலைவிகளால் போற்றி பாதுகாக்கப்படும் ஓர் நம்பகமான குடும்ப நிவாரணி. பாட்டிமார்களின் காலங்களிலிருந்து பயன்படுத்தப்பட்டு வரும் கைகண்ட மருந்து.

பரிசோதனைக்குட்பட்ட ஜம்மியின் லிவர்க்யூர்-ஈரல் குலைக்கட்டி மற்றும் பலவித காரணங்களால் ஏற்படும் ஈரல் சம்பந்தப்பட்ட எல்லாவிதமான வியாதிகளுக்கும் உடனடி நிவாரணமளிக்கும்.



தயாரிப்பாளர்கள்:

ஜம்மி பார்மஸுட்டிகல்ஸ்
சென்னை-600026.

ஜம்மியின் லிவர்க்யூர்-ஓர் ஒப்பற்ற குடும்ப நிவாரணி.

Criterion JP 3191TM

கடற்கரைக் கூட்டம்

கடற்கரை மணலை எண்ணுவது முடியாத காரியமென்றால் சென்ற ஆறும் தேதி மாலை அங்கு கூடியிருந்த மக்களின் தலைகளை எண்ணுவதும் அசாத்தியம்தான்.' ஐந்து லட்சம் என்பது குறைந்த பட்ச மதிப்பீடு.

இந்த மாபெரும் கூட்டம் ஜனநாயகத்தைக் காப்பதாகவும் மக்களின் சுதந்திரங்களைப் பேணுவதாகவும் பிரமாணம் எடுத்துக் கொண்டபோது புயல் வீசும் கடல் அலைகளுடைய பேரிரைச்சல் நினைவுக்கு வந்தது. மனத்தில் நம்பிக்கையும் துளிர்விட்டது. ஐந்து லட்சம் மக்களின் இந்த உறுதியை ஐம்பது கோடி மக்களுடைய மனத்தின் பிரதிபலிப்பாகவே கொள்ளலாம்.

கல்கி

மலர் 34

இதழ் 51.

'நெருக்கடி நிலைப் பிரகடனத்துக்குப் பிறகும் எல்லாரும் வழக்கம் போல்தான் காலையில் எழுந்து அலுவலகத்துக்குப் போகிறார்கள், திரும்பி வருகிறார்கள், சாப்பிடுகிறார்கள், தூங்குகிறார்கள். இப்போது என்னவாகிவிட்டது?' என்று சிலர் அறியாமையால் கேட்கிறார்கள். வேறு சிலர், நெருக்கடி நிலைப் பிரகடனத்தால் ஏற்பட்டுள்ள நன்மைகளைச் சுட்டிக்காட்டுகிறார்கள்.

நியாயம்தான். நன்மைகள் ஏற்பட்டே இருக்கின்றன.

கடமையாற்றுவதில் முன்னைவிட இப்போது சிரத்தை அதிகரித்திருக்கிறது. அனைவரும் நேரத்தில் காரியாலயத்துக்குப் போகிறார்கள். தாமதமின்றி அலுவல்களைக் கவனிக்கிறார்கள். கடத்தல்காரர்கள் மீது முன்னைக் காட்டிலும் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கள்ளமார்க்கெட்காரர்களும் பதுக்கல் பேர்வழிகளும் கலக்கமடைய ஆரம்பித்திருக்கிறார்கள். விலைவாசிகள் இறங்காவிட்டாலும் 'இதோ இறங்கிவிடுவேன்' என்று பயமுறுத்திக்கொண்டிருக்கின்றன! வேலைநிறுத்தம் என்ற பேச்சு அதிகம் அடிபடவில்லை. அதில் யாராவது இறங்கினாலும் நெருக்கடி நிலையைக் காரணம் காட்டித் தடுத்துவிட முடியும். ஆனந்தமார்க்கிகள், ஆர். எஸ். எஸ். போன்ற புரட்சி இயக்கங்களுக்குத் தடைவிதித்தாகிவிட்டது. கம்யூனிஸ்டுகளில் தீவிரவாதிகளும் நக்ஸலைட்டுகளும் தேசத்துரோகிகளாகக் கருதப்பட்டு ஒழிக்கப்படுகின்றனர். கல்லூரிகளில் ராகிங்குக்கு மங்களம் பாடியாகிவிட்டது. அரசுத் துறைத் தொழிலகங்களுக்கு உற்பத்தி இலக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. இருபது அம்சத் திட்டம் ஒன்றைப் பிரதமர் அறிவித்திருக்கிறார்.

இவையெல்லாம் நல்லனதாம். வரவேற்கப்பட வேண்டியவைதாம். ஆனால் இவை போதுமா?

இன்று நாட்டை எதிர்நோக்கியுள்ள மிகப் பெரிய பிரச்னை என்ன? மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்பதுதான். இதற்கு என்ன வழி?

மன்னர் மானியம் ஒழிக்கப்பட்டால் மண் குடிசையில் வாழ்பவன் நிலை உயருமா? பாங்குகள் தேசிய மயமானால் தரித்திர நாராயணன் விடைபெற்றுப் போய்விடுவானா? நகர்ப்புறச் சொத்துக்களுக்கு உச்சவரம்பு கட்டிவிட்டால் நலிவுற்றிருக்கும் நல்லானின் கஷ்டம் விடியுமா?

ஒரு நாளும் விடியாது. இவையெல்லாம் மக்களின் சிந்தனையைக் குழப்பி அவர்களை ஒரு மிதப்பிலே வைத்திருக்கத்தான் உதவுமேயன்றிச் சராசரி இந்தியனின் வாழ்க்கைத்தரம் இதுபோன்ற நடவடிக்கைகளால் உயரப் போவதில்லை.

பிறகு அவன் நிலை உயர என்ன வழி?

நாட்டில் விவசாய–தொழில் உற்பத்தி பெருக வேண்டும். வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்க வேண்டும். ஏற்றுமதி ஏராளமாக வேண்டும். அந்நியக் கடன்கள் குறைய வேண்டும். இங்கே செல்வம் கொழிக்க வேண்டும். அப்போது சாமானியன் வாழ்விலும் தானாகவே சுபிட்சம் நிலவும்.

சரி, உற்பத்தியைப் பெருக்க என்ன யோசனை? இரண்டு மார்க்கங்கள் உள்ளன. ஒன்று ருஷ்ய அல்லது சீனக் கம்யூனிஸ

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

முறை. சகலத்தையும் அரசுடைமையாக்கி விட்டு மக்களை இயந்திரங்களாக்கி உழைக்க வைக்கும் இந்த முறை ஜனநாயகத்திலும் மக்கள் சுதந்திரத்திலும் பற்றுள்ள நமக்கு ஏற்றதல்ல என்பதைக் கூறத் தேவையில்லை.

மற்றொரு மார்க்கம் ராஜாஜி காட்டிய சுதந்திரப் பொருளாதாரம். இது எளிய சுலபமான வழி என்பதோடு இதில் வெற்றி பெறுவது நிச்சயம் என்பதற்கு நிரூபணங்களும் இருக்கின்றன. ஜப்பான், மேற்கு ஜெர்மனி முதலிய நாடுகள் அதைக் கண்ணுக்கு மெய்யாக உணர்த்துகின்றன.

சுதந்திரப் பொருளாதாரத்தில் தொழில் வளப் பெருக்கத்துக்கு இரு அம்சங்கள் முக்கியம். ஒன்று தொழில்களில் முதலீடு பெருக வேண்டும். மற்றது அந்த முதலீட்டை ஆற்றலுடன் நிர்வகித்து உற்பத்தியைப் பெருக்கும் வழிகளில் ஞானம் வேண்டும். இங்கேதான் டாட்டாக்களும், பிர்லாக்களும், கோதாரிகளும், மபட்லால்களும், மகாலிங்கங்களும், அருணாசலங்களும் தேவைப்படுகிறார்கள். இவர்களைப் போன்ற பற்பல சிறிய, பெரிய தொழிலதிபர்கள் மீது பொறாமையை வளர்ப்பது எளிது; ஆனால் இவர்களிடம் உள்ளது போன்ற ஆற்றலை மந்திர மாயத்தால் உற்பத்தி செய்ய முடியாது.

எனவேதான் ராஜாஜி சொன்னார்: ''தொழிலதிபர்களைச் சுதந்திரமாக இயங்க விடுங்கள்; கண்ட்ரோல்களையும் கட்டுப்பாடுகளையும் நீக்குங்கள்; பர்மிட் லைசென்ஸுகளை ஒழியுங்கள்; வரிகளைக் குறைத்து மக்களின் பணம் தொழில்களில் முதலீடாக ஏற்ற சூழ்நிலை உருவாக்குங்கள்'' என்று.

தொழிலதிபர்களுக்கும் அவர் சொன்னார்: ''உங்களிடம் உள்ள செல்வத்துக்கு உங்களைத் தர்மகர்த்தாவாக எண்ணிக் கொள்ளுங்கள். தொழில் விஸ்தரிப்புக்கு லாபத்தைப் பயன்படுத்துவதுடன் தொழிலாளர் நலனுக்கும் சமூக நலனுக்கும் பயனுக்குங்கள்'' என்று.

அரசாங்கத்துக்கு அவர் மேலும் சொன்னார்: ''நிர்வாகம் பண்ணுவதுடன் நிறுத்திக் கொள்ளுங்கள். தொழில் வளப் பெருக்கத்துக்கு மின் உற்பத்தி; விவசாயப் பெருக்கத்துக்குப் பாசன வசதிகள் போன்ற அடிப்படைத் தேவைகளை மட்டும் கவனியுங்கள். சமூக நலத் திட்டங்களை அமுல்படுத்துங்கள். டம்பாச்சாரித் திட்டங்களை வகுத்துப் பண வீக்கத்தை அதிகரிக்காதீர்கள்.''

ராஜாஜியின் யோசனைகளை அரசும் தொழிலதிபர்களும் ஏற்றுக் கைகோர்த்து நடந்தால் நாட்டில் துரிதமான பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். அப்போது பதுக்கல், கள்ள மார்க்கெட் அசுரர்களுடன் யுத்தம் செய்ய வேண்டாம். ஏனெனில், அவர்கள் தாமாகவே மடிந்து போய்விடுவார்கள்! கள்ளக் கடத்தல்காரர்களுடன் கடல் போர் புரிய வேண்டாம். ஏனெனில் அவர்கள் தாமாகவே இங்கு லாபமில்லை எனக் கண்டு வேறு தேசத்தை நாடிச் சென்றுவிடுவார்கள்! சுபிட்சம் நிலவும் சுதந்திர நாட்டில் தீவிர கம்யூனிஸ்டுகள், நக்ஸலைட்டுகள் ஆகியோர் மக்கள் மீது ஆதிக்கமோ செல்வாக்கோ பெற முடியாது. புரட்சிக்கும் வன்முறைக்கும் யாரும் மக்களைத் தூண்ட மாட்டார்கள். தூண்டினாலும் அதை மக்கள் லட்சியம் பண்ணமாட்டார்கள். வயிற்றுக்கில்லாத போதுதானே வன்முறையில் நாட்டம் செல்லும்?

இந்த நோக்கில்தான் கடற்கரைக் கூட்டத்தில் மக்கள் எடுத்துக் கொண்ட ஜனநாயகப் பிரதிக்ஞையும் சுதந்திரச் சூளுரையும் அர்த்தமுள்ளதாகிறது. அரசியல் சாசனம் மக்களுக்கு உறுதி கூறுகிற எல்லாச் சுதந்திரங்களையும் மதிக்கக்கற்றுத் தடைகளை அகற்றினால்போதும், நாட்டில் சுபிட்சம் தன்னால் பெருகும்.

இவ்வளவுக்கும் மேலாக அதிமுக்கியமான விஷயம் ஒன்று உண்டு. அதுதான் உழைப்புக்கு அஞ்சாமை. பொருளாதாரத் திட்டம் எந்த வர்ணத்தைப் பூசிக் கொண்டிருந்தாலும் 'சரி,' கடினமான உழைப்பு மக்களிடம் இல்லையெனில், தேசம் முன்னேறவே முடியாது.

அதைப் பிரதமர் வலியுறுத்தியது வரவேற்கத்தக்கது.

ராஜாஜி சிந்தனை

சாசனம் உறுதி அளித்த சுதந்திரம்

1947ல் நமக்குச் சுதந்திரம் கிடைத்தது. 1950ல் மக்களின் உரிமைகளும் சுதந்திரங்களும் அரசியல் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டன. ஆனால் 1951 முதல் நாம் சாசனம் உறுதி அளித்த சுதந்திரங்களை ஒவ்வொன்றாக இழந்து வந்திருக்கிறோம்.

ஒழுங்கான வாழ்க்கை முறை நிலவ அரசாங்கக் கட்டுப்பாடு அவசியம்தான். ஆனால் அது ஓர் அளவோடு நிற்க வேண்டும். சர்வாதிகாரமாக மாறக் கூடாது. பிரஜையின் லட்சியத் தீர்மானங்களும் அவனது குணநலன்களும் நன்றாகச் செயல்படத் தாராளமாக இடமளிக்கப்பட வேண்டும். இந்த நிலையில் அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் இயல்பான சமூக நலனுக்குரிய கருவியாகக் கருதப்படுமேயன்றிக் கொடுங்கோன்மையாக மாறாது. ஆனால் கட்டுப்பாடுதான் பிரதானம், சுதந்திரம் அபூர்வமான காரியம் என்றுவிட்டால் நிலைமை தலைகீழாகி விடுகிறது. கொடுங்கோன்மை மனப்பான்மை சகஜ நிலையாகிச் சுதந்திரத்துக்கு அவ்வப்போது அனுமதியும் லைசென்ஸும் வழங்குவதாக ஆகிறது. இந்த லைசென்ஸை எந்தக் கணமும் வெளியே இருந்து ஒரு சக்தி பறித்துவிடலாம் என்றால் அந்தச் சக்திக்கும், அடிமைப்படுத்தும் அந்நிய ஆட்சிக்கும் இடையே வித்தியாசமே ஏதும் கிடையாது.

—சுயராஜ்யா, ஜூலை 27, 1963



'தமிழ்த் துரோகி'யின் தமிழ்த் தொண்டு!

தமிழ்ப் பெரும் புலவர் திரு தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், இந்திய சாகித்ய அகாடெமியின் 'சிறப்பு உறுப்பின'ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை அறிந்து தமிழ் கூறும் நல்லுலகம் பெரு மகிழ்வு எய்தும்.

தெ. பொ. மீ. யின் தனிச் சிறப்பு அவர் தமிழ்ப் பெரும் புலவராக மட்டுமின்றி, ஆங்கிலம், தெலுங்கு, ஸம்ஸ்கிருதம், பிரஞ்சு, ஜெர்மன் முதலிய பல மொழிகளையும் நன்கு கற்றறிந்திருப்பதுதான். தமிழில் பேரார்வம் கொண்டிருந்த போதும் நாட்டுப் பற்று அவரை விடவில்லை. விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றார். சென்னை நகர மன்றத்தில் பல காலம் கவுன்ஸிலராகப் பணியாற்றிச் சென்னை நகரத்தில் பாதாளச் சாக்கடை அமைக்கப் பாடுபட்டார். சிந்தாதிரிப் பேட்டையில் மகளிர் உயர்நிலைப் பள்ளியும் சிறுவர் பள்ளியும் செவ்வனே நடத்தி வந்தார்.

சிறந்த சைவ நெறிப் பற்றுடையவர். நித்திய பூஜை செய்பவர். அதோடு பிற சமய தத்துவங்களையும் நெறிகளையும் நன்கு உணர்ந்தவர்.

தமிழ் மக்கள் என்றென்றும் கடமைப் பட்டவர்களாக வாழ வேண்டிய வகையில் அவர் செய்துள்ள மகத்தான தமிழ்ப் பணி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் '' மொழி இயல்'' (Linguistics) ஆராய்ச்சித் துறை நிறுவிப் பல ஆண்டுகள் பல மாணுக்கர்களுக்கு வழி காட்டியமைதான்.

தமிழ்மக்களின் சரித்திரத்தைக் கல்வெட்டு, சிற்பம், செப்பேடு, மெய்கீர்த்தி ஆகியவற்றை மட்டும் வைத்துக் கணித்தால் போதாது. அது முழுச் சரித்திரம் ஆகாது. அவர்கள் பேசும் மொழி, சொற்களின் பொருள் எவ்வகையில் எல்லாம் மாறுபட்டு வந்திருக்கின்றன என்பதையும் ஆராயவேண்டும். இதை வலியுறுத்தி வழிகாட்டியவர் திரு தெ. பொ. மீ.

உதாரணமாக, நாற்றம் என்ற சொல் இன்று துர்க்கந்தம் என்ற பொருளில் நிலவுகிறது. ஆனால் பழம் இலக்கியங்களில் நல்ல வாசனை என்ற பொருளிலேயே கையாளப்பட்டு வந்திருக்கிறது. இப்படியொரு சொல் பொருள் மாறுபாடு கொள்ள வேண்டுமானால் அதற்கு எத்தனையோ காலம் பிடித்திருக்க வேண்டும். அதற்கான காரணங்கள் யாவை போன்ற விஷயங்களை ஆராய்வதே ''மொழி இயல் துறை.''

இத்துறையில் ஈடுபட்டவர்கள் அண்டை அயல் மொழிகளிலும், நல்ல பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

அண்மையில் திரு தெ. பொ. மீ. அவர்களைப் பாராட்ட சாகித்ய அகாதமி ஏற்பாடு செய்த கூட்டத்தில் முன்னாள் ஆந்திர பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஸ்ரீ கே. ஆர். சீனிவாசய்யங்கார் தெ. பொ. மீ.யின் பல தரப்பட்ட பணிகளையும் புலமையையும் அவரது அளப்பரிய அடக்கத்தையும் பாராட்டிப் பேசிய போது அவையோர் மெய்சிலிர்த்தனர்.

தொடர்ந்து திரு கி. வா. ஜ. வும் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தமும், திரு நா. பார்த்தசாரதி அவர்களும் பேசினார்கள்.

கடைசியில் பேசிய தெ. பொ. மீ. அவர்கள் தமக்கு வாழ்க்கையில் திரு. வி. க., தீரர் சத்தியமூர்த்தி, எஸ். சீனிவாசய்யங்கார், ஸர் சி. பி. ராமஸ்வாமி அய்யர் போன்ற பெரியோர்களின் கூட்டுறவு கிடைத்ததை நன்றிப் பெருக்குடன் நினைவுகூர்ந்தார்.

அப்பேச்சினிடையே தம்மை ஒரு காலத்தில் தமிழுலகம் ''தமிழ்த் துரோகி'' என்று கூறியதையும் நகைச் சுவையுடன் வெளியிட்டார்.

ஆனால் அவரைப் போல் தமிழ் அன்னைக்கு அழியாத தொண்டு புரிந்த வித்தகர் யாருண்டு என்று இன்று தமிழ்கூறும் நல்லுலகமே வியக்கிறது.

—எஸ்.வி.எஸ்.

படம்: தெ. பொ. மீக்கு மாலை அணிவித்துச் சிறப்பு உறுப்பினருக்குரிய பட்டயத்தை வழங்குகிறார் திரு கே. ஆர். சீனிவாச அய்யங்கார்.

என்ன சேதி?

திரு ராஜன்

'மெய்' பத்திரிகையின் ஆசிரியர் திரு வி. பி. வி. ராஜன் அகில இந்திய பத்திரிகை ஆசிரியர் மகாநாட்டுக்கு வரும் ஆண்டுத் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.



பொருளாதார ரீதியிலும் அரசியல் ரீதியிலும் ஒரு சிரமமான கட்டத்தில் இன்று இடர்ப்பட்டுக் கொண்டிருக்கின்றன, பத்திரிகைகள். இந்தச் சூழலில் திரு ராஜன் பதவி ஏற்பதால் பெரிய பொறுப்புக்களைத் தாங்க வேண்டியவராகிறார்.

எனினும் சதா சிரித்த முகமாக விளங்கி அன்பு இதயத்தை வெளிப்படுத்தும் திரு ராஜன் உறுதியான உள்ளத்தையும் உடையவராதலால் பிரச்னைகளுக்கு நல்ல தீர்வு காண்பதில் பெருமளவு வெற்றிபெறுவார் என நம்பலாம்.

அகில இந்திய பத்திரிகை ஆசிரியர் மகாநாடு முதன் முதலாக சுதேசமித்திரன், ஹிந்து பத்திரிகைகளின் ஆசிரியர்களாக விளங்கிய திரு சி. ஆர். சீனிவாசன், திரு கே. சீனிவாசன் ஆகியோரால் தோற்றுவிக்கப்பட்டது. திரு கே. சீனிவாசன் தலைமை ஏற்று நடத்தியபிறகு நீண்டகால இடைவெளிக்குப் பின் மீண்டும் தலைமைப் பதவி தமிழகத்துக்கு வந்து சேர்ந்திருக்கிறது.

இந்த அரிய பெருமையைப் பெற்றுள்ள திரு ராஜனை வாழ்த்துகிறோம்.

கருச் சிதைவு

கருச் சிதைவு இன்று இந்தியாவில் சட்ட பூர்வமாக அனுமதிக்கப்படுகிறது. பிரிட்டனில் கருச் சிதைவை அனுமதிப்பது பற்றிப் பலமான வாதப் பிரதிவாதங்கள் நடக்கின்றன. ஜூன் 28ந் தேதி 'ஸ்பெக்டேட்டர்' இதழில், ஒரு கடிதம் பிரசுரமாகியுள்ளது. அதன் சுருக்கம் :

கருச் சிதைவு பற்றி முக்கியமான கேள்வி அது ஓர் உயிரைப் பறிக்கிறதா என்பதே. இதற்குப் பதில் 'நமக்குத் தெரியாது' என்பது தான். சிலர், 'என் அபிப்பிராயத்தில் கருச் சிதைவு உயிரைப் பறிக்கவில்லை. என் அபிப்பிராயம் தவறாக இருக்க முடியாது' என வாதாடுகிறார்கள். இது எப்படி இருக்கிறதென்றால், கொலம்பஸ்ஸைப் பார்த்து 'என் அபிப்பிராயத்தில் உலகம் தட்டையானது, என் அபிப்பிராயம் தவறாக இருக்க முடியாது. எனவே, அலைகின் எல்லைக்குப் போகாதே. கீழே விழுந்துவிடுவாய்' என்று கூறுவதுபோல் இருக்கிறது !

நமது அபிப்பிராயம் ஏன் தவறாக இருக்கக் கூடாது ? நிச்சயம் தவறாக இருக்கக் கூடும். பூமி தட்டை இல்லை என்பது நிரூபணமானது போல் கருச் சிதைவு உயிரைக் கொல்லும் என்பதும் உண்மையாகக் கூடும். கருச் சிதைவு உயிரைப் பறிக்கிறதா இல்லையா என்ற உண்மையை அறிய ஆயிரம் ஆண்டுகள் கூட ஆகலாம். அது வரை கருச் சிதைவுக்கு உடன்படும் பெண் தன் குழந்தையைக் கொல்லத் தானே அனுமதி வழங்கும் மாபெரும் குற்றத்துக்கு ஆளாகக் கூடியவளாகவே விளங்குகிறாள்.

அரசுத்துறை

சென்ற ஆண்டில் அரசுத்துறைத் தொழிலகங்கள் சில லாபம் கண்டிருக்கின்றன. மகிழ்ச்சி தரும் விஷயம்தான். ஆனால் ஆய்ந்து பாராமல் அளவுக்கு மீறி ஆனந்தப்பட்டுவிட வேண்டியதில்லை என எச்சரிக்கிறார் திரு ஆர். வெங்கடராமன். கப்பல் கார்ப்பொரேஷன், அரசாங்க வர்த்தக கார்ப்பொரேஷன், சுரங்கப் பொருள்கள் வர்த்தகக் கார்ப்பொரேஷன் போன்ற சில நிறுவனங்களின் லாபங்கள் வேறு பல நிறுவனங்கள் அடைந்துள்ள நஷ்டங்களை ஈட்டு நிரப்புவனவாக உள்ளன. அல்லாத பட்சத்தில் மொத்தம் அரசுத் துறைத் தொழிலகங்களில் முதலீடு ஆகியுள்ள ஐயாயிரம் கோடிக்குப் பெறப்பட்டுள்ள லாபம் மிகக் குறைவே.

இது போக, அரசுத் துறைத் தொழிலகங்கள் பல ஏகபோகங்களாக இருப்பதால் அவற்றுக்குச் சில அனுகூலங்கள் உண்டு. போட்டா போட்டி கிடையாது. விலைகளை இஷ்டப்பட்டபடி நிர்ணயிக்கலாம்.

ஆக லாபம் மட்டும் இவற்றின் இயக்கத் திறனுக்கு அத்தாட்சியாகிவிடாது. திறமைக் குறைவை விலை உயர்வு மூலம் ஈடுகட்டி விடலாம்.

எனவே, உற்பத்தி ஆற்றல் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறதா, விலைவாசிகள் சர்வதேச நோக்கில் நியாயமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளனவா ? என்றெல்லாமும் பரீட்சித்துப் பார்க்க வேண்டும்.

சரித்திர நிகழ்ச்சி

ருஷ்ய சரித்திரத்தில் ஒரு முக்கிய நிகழ்ச்சி; அமெரிக்கச் சரித்திரத்தில் மறக்கக் கூடாத நிகழ்ச்சி ; விண்வெளி சரிதத்தில் அதிவிசேஷ நிகழ்ச்சி; உலக சரிதத்தில் உவகை தரும் நி க ழ் ச் சி. — ஜூலை 15ந் தேதி நடக்கப் போகிறது !

அன்று இரு ருஷ்ய விண்வெளி வீரர்களும் மூன்று அமெரிக்க விண்வெளி வீரர்களும் தனித் தனியே தத்தமது நாடுகளிலிருந்து ராக்கெட்டுகளில் புறப்பட்டுச் சென்று விண்வெளியை அடைவார்கள். பின்னர் அமெரிக்க, ருஷ்ய விண்கலங்கள் விண்ணில் ஒன்றோடு ஒன்று இணையும். இடையே உள்ள கதவுகள் திறக்கப்பட்டு நேசக் கரங்கள் நீளும். இரு விண்கலங்களிலும் உள்ள காப்டன்கள் கைகுலுக்குவார்கள். பிறகு விண்வெளி விஞ்ஞான ஆராய்ச்சிகளை இரு குழுவினரும் இணை சேர்ந்து தொடர்வார்கள்.

ருஷ்ய அமெரிக்க நட்புறவை வலுப் பெறச் செய்து அதன் மூலம் உலக அமைதிக்கும் பெரும் துணை புரியும் இந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற வாழ்த்துகிறோம். விண்வெளி வீரர் ஐவருக்கும் ஜெயவிஜயீபவ எனக் கூறி வழியனுப்புகிறோம்.

முருகப்பெருமான் 19

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள்

சுப்பிரமணியரின் ஓர் அவதாரமான குமாரில பட்டரை ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் நேரில் சந்தித்து வாதத்தில் ஜயித்தார்; இன்னொர் அவதாரமான ஞான சம்பந்தரைப் பற்றி 'ஸௌந்தரிய லஹரி'யில் சொல்லிப் புகழ்ந்திருக்கிறார். காலக் கணக்கு பார்க்கிறவர்கள், இது சம்பந்தரைப் பற்றியது இல்லை, ஆசார்யாள் தம்மையே சொல்லிக் கொண்டார் என்றும் சொல்கிறார்கள். அது எப்படியானாலும் அந்த சுலோகத்தின் தாத்பரியத்தைச் சொல்கிறேன். (தவ ஸ்தன்யம் மன்யே.)

''ஹிமகிரி குமாரியான அம்மா, உன்னுடைய க்ஷீரம் என்பது உன் இருதயத்திலிருந்தே வருகிற அமிருதம். அது பானம் பண்ணின குழந்தைக்கு அருளைப் பொழிந்தது மட்டுமில்லை; இந்த அருளை அந்தக் குழந்தை லோகத்துக்கெல்லாம் தருவதற்காக, அதற்கு மேலான வாக்சக்தியையும் உன் க்ஷீரம் தந்துவிட்டது. இந்த க்ஷீரம் சாரஸ்வதமானது — சரஸ்வதீமயமானது. பிரவாகமாக வருகிற உன் க்ஷீராம்ருதத்தைப் பானம் பண்ணிய குழந்தை, பிரவாகமாகக் கவிதை செய்துவிட்டது. பரம கிருபையோடு நீ அதைத் தமிழ்க் குழந்தைக்கு (த்ரவிட சிசு:)க் கொடுத்தாய். அந்தக் குழந்தை மகா பெரிய கவிகளுக்கெல்லாம் பெரியவராகி, எல்லோர் மனசையும் வசீகரித்துவிட்டது'' என்று ஆசார்யாள் சொல்கிறார்.

ஆதியில் முருகக் கடவுள் சங்கப் புலவராக இருந்தார். பிறகு புலமையோடு பக்தி, ஞானம், வைதிகம், சைவம் எல்லாவற்றையும் சேர்த்துத் திராவிட தேசத்தை ரட்சிப்பதற்காக ஞானசம்பந்தராக வந்தார். குமாரில பட்டர் செய்த அதே வைதிக தர்ம ஸ்தாபனத்தைத்தான் இவரும் செய்தார். ''நான்மறை ஞானசம்பந்தன்'' என்றே தம்மைச் சொல்லிக் கொள்கிறார்.

அவரைப் பற்றி ஏதோ கொஞ்சம் உங்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். குமாரில பட்டர் பேரைச் சிலராவது கேட்டிருப்பீர்கள். இப்போது யாருக்குமே தெரியாத இன்னொரு சுப்பிரமண்ய அவதாரத்தைப் பற்றிச் சொல்லப் போகிறேன். ரொம்ப சமீப காலம் வரையில் எனக்கே இது தெரியாது.

சரியாகச் சொன்னால், இது சுப்பிரமண்ய அவதாரம் இல்லை. சுப்பிரமண்யராக வருவதற்கு முன்னால் அவர் யாராக இருந்தார் என்று இந்தக் கதை சொல்கிறது. இது எப்படி எனக்குத் தெரிய வந்தது என்பதே ஒரு கதை மாதிரிதான்.

★

வியாசர் 'பிரம்ம சூத்திரம்' என்று பரமாத்ம தத்வத்தைப் பற்றி விசாரணை செய்து எழுதியிருக்கிறார். அதில் மூன்றாவது அத்தியாயம், மூன்றாவது பாதத்தில், முப்பத்திரண்டாவது சூத்திரம், ''ஓர் அதிகாரத்துடன் அவதரித்தவர்களுக்கு அதிகாரம் உள்ள வரையில் சரீரத்தில் இருப்பு உண்டு'' என்று சொல்கிறது. இதற்குப் பாஷ்யம் பண்ணும் போது நம் ஆசார்யாள், ''பிரம்மாவின் மானச புத்திரரான ஸனத் குமாரர்கூட, தானே ருத்திரனுக்கு வரம் கொடுத்துவிட்டு, அதற்காக ஸ்கந்தனாகப் பிறப்பெடுத்தார்'' என்று திருஷ்டாந்தமாகச் சொல்லியிருக்கிறார்.

ஸனத் குமாரராவது, பரமேசுவரனுக்கு வரம் தருவதாவது, இது எந்தப் புராணத்திலிருக்கிறது என்று எனக்குத் தெரியாமலே இருந்தது. பல பண்டிதர்களை விசாரித்துப் பார்த்தும் தெரியவில்லை. ஆஞ்சநேய ஸ்வாமிகளும் ரொம்ப விசாரித்துவிட்டு, ''தினெட்டுப் புராணங்களையும் பார்த்துத் தமிழில் சுருக்கிப் போட்டிருக்கிற (ஸ்ரீவத்ஸ) சோமதேவசர்மாவிடம் இந்தக் காரியத்தைக் கொடுத்தார். சர்மா எனக்கு பிக்ஷை பண்ண வந்தபோது, பெரிய பிக்ஷையாக இந்த 'டிஸ்கவரி'யைச் சொன்னார். 'திரிபுரா ரஹஸ்யம்' என்ற கிரந்தத்தில் மாகாத்மிய கண்டம் முப்பத்தேழாம் அத்தியாயத்தில் இது நீள நெடுகப் பெரிய கதையாகச் சொல்லியிருக்கிறது.

கதைக்கு வருகிறேன் :

பிரம்மாவின் மனசிலிருந்து உதித்தவர் ஸனத்குமாரர். அவர் பிரம்மஞானி. சுகாசாரியார் மாதிரி, உள்ளும் புறமும் எல்லாம் ஒன்று என்று ஸதாகாலமும் உணர்ந்திருந்தவர்.

இப்படிப்பட்டவருக்கு விசித்திரமாக ஒரு நாள் சொப்பனம் வந்தது. சொப்பனத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் சண்டை நடந்தது. அதில் ஸனத்குமாரர் தேவசேனாபதியாக யுத்தம் செய்து, அசுரர்களை எல்லாம் சம்ஹாரிக்கிறார்.

விழித்தெழுந்ததும் அவருக்கே ஆச்சரியமாக இருந்தது. தகப்பனாரான பிரம்மாவிடம் போய்ச் சொப்பனத்தைச் சொல்லி அதற்கென்ன அர்த்தம் என்று கேட்டார்.

''குழந்தை ! நீ பூர்வ ஜன்மத்தில் வேத அத்யயனம் செய்தாய். அதில் தேவாசுர யுத்தம் என்று வருவது உன் மனசில் ஆழப் பதிந்துவிட்டது. வேத யக்ஞங்களால் ஆராதிக்கப்பட்டு அநுக்கிரகம் செய்கிறவர்கள் தேவர்கள். இவற்றை அழிக்க நினைக்கிறவர்கள் அசுரர்கள். உனக்கு வேதத்தில் இருந்த ஆழ்ந்த பிடிமானத்தால், 'அசுரர்களையெல்லாம் நாமே சம்ஹாரம் செய்துவிடமாட்டோமா ?' என்று ஆவேசப்பட்டாய். அந்த நினைப்புத்தான் இந்த ஜன்மாவிலும் தொடர்ந்து வந்து சொப்பனமாக வெளியாகி இருக்கிறது'' என்றார் பிரம்மா.

(தொடரும்)

1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள் கட்டுரைகளிலிருந்து தொகுத்தது.



ரா. வீ.

கரும்பாயிரத்துக்குப் பெருங் குறை, காதலித்துக் கல்யாணம் செய்து கொள்ளவில்லையே என்று! அவன் பார்த்த திரைப் படங்களில் எல்லாம் காதலனும் காதலியும் எத்தனை சுலபமாகக் காதலித்து இடையில் வரும் வில்லனுக்கும் சரியான அடி கொடுத்து முடிவில் கதையைக் கல்யாணமாக முடித்து மகிழ்ந்தார்கள்; ரசிகர்களையும் மகிழ்வித்தார்கள்! அப்படித் தானும் ஏன் முயன்று பார்க்கக் கூடாது? வாழ்க்கையில் நடப்பதைத்தான் கதையில் காட்டுகிறார்கள் என்றால் கதையில் நடப்பதுவும் வாழ்க்கையில் நடக்கலாம் அல்லவா?

இப்படி முடி போட்டவன் ஒரு முடிவுக்கு வந்தான், திரைப்பட ஃபார்முலாவைப் பின்பற்றிக் காதலித்துப் பார்த்து விடுவது என்று!

மனம் உண்டானால் மார்க்கம் உண்டு என்பது எவ்வளவு உண்மை! மனத்துக்கேற்ற மங்கையை மாம்பலம் ரங்கநாதன் தெருவில் தேடி அலைந்தபோது, பின்னழகி ஒருத்தி—ஏன், பின்னழகியும் கூடத்தான் - கட்டால் வாயில் சரியச் சரிய அன்ன நடை நடந்து அவன் மனத்தை அலைபாய வைத்தாள். பின்னழகு மட்டும் போதாது, முன்னழகையும் பார்த்து விடவேண்டும் என்ற ஆவல் உந்தவே, முன்னேறித் திரும்பிப் பார்த்தான். அத்தனை சினிமா அழகிகளின் அழகையும் ஒன்றுசேர்த்து வைத்தால்கூட அவள் அழகுக்கு உறை போடக் காணாது என்பதைக் கண்டவன் அப்பொழுதே அவள் மீது மனத்தைப் பறி கொடுத்தான். அப்புறம் என்ன, அவளைக் காதலித்தே தீருவது என்று கங்கணம் கட்டிக்கொண்டான். அவள் போக்கு – நீக்குகளை ஆராயத் தருணம் கிடைத்தபோதெல்லாம் அவளையே வளைய வரலானான்.

தனது பல நாட்கள் குறி தப்பாது அவளை மாம்பலம் ஸ்டேஷனில் பிடித்தான். ''காதலிக்க நேரம் இல்லை' என்று எவரோ படத்துக்குத் தலைப்புச் சூட்டினாரே, அது எத்தனை பெரிய தவறு! எனக்குக் காதலிக்க எத்தனை நேரம் இருக்கிறது!'' என்று சட்டைக் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு அவள் அமர்ந்திருந்த முதல் வகுப்புப் பயணிகள் அறையில் போய் நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு அமர்ந்தான். பல நாட்களாக அவனை எதிர்பார்த்தவள் போல் அவள் தனியே அமர்ந்திருந்தாள்! எந்த நாளும் இல்லாத திருநாளாகக் கசகசவென்று கூட்டம் வழிந்து காட்சி தரும் அவ்வறை அன்று அவர்கள் இருவருக்கும் என்றே ஒழித்து விட்டாற் போலிருந்தது. காதலிக்க இதுவே தருணம் என்று அந்த அழகியை வைத்த கண் வாங்காமல், இமை கொட்டவும் மறந்து பார்த்தான். அவளோ பட்டாம் பூச்சி போல் படபடவென்று இமைகளைக் கொட்டினாள்.

'அடடா! காதலுக்கு அழகு கண்ணடித்தல் அல்லவா! இதை மறந்து போனேனே!' தனது அநுபவக் குறைவை எண்ணி உதட்டைக் கடித்துக் கொண்டவன் அவளுக்கு இணையாகக் கண்களைக் கொட்டினான்.

'தூ!' – அவன் மீது காறித் துப்பாத தோஷமாக அவள் விருட்டென்று எழுந்

தான். எழுந்த வேகத்தில் அவன் அணிந்திருந்த விலை மலிவான ஹவாய் காலணியின் காது அறுந்து கொண்டது. ஆத்திரத்துடன் அவன் அதைக் கையில் எடுத்தபொழுது கரும்பாயிரம் அங்கு இல்லை!

கண்ணாடிக் காதலில் யாருடைய கண்ணெறியோ பட்டு விட்டது என்று முடிவுக்கு வந்தவன், மோதலில் பிறக்கும் காதலே சரியென்று முடிவுக்கு வந்தான். அந்த மோதலுக்காகச் சைக்கிள் விடப் பழகிக் கொண்டான்.

திரைக் கதைக்குத்தான் காதலிக்க அதே பெண் வேண்டும். காதலுக்குக் காதல் கதாநாயகியை மாற்றினால் நஷ்டத்தில் வந்தல்லவா முடியும்? ஆனால் நம் காதலுக்கு இன்னொரு பெண்ணே நல்லது. முந்தையப் பெண்ணிடமே போய் வாலாட்டினால், அவள் தன் அறுந்த செருப்பை இன்னும் பத்திரமாக வைத்துக் கொண்டிருக்க மாட்டாள் என்பது என்ன நிச்சயம்?

எனவே, சல்வார்-கமீஸ் அணிந்து, பின் தலையை 'பாப்' செய்து கொண்ட நவநாகரிக நங்கையாக ஒருத்தியைத் தேர்ந்தெடுத்தான். அவள் 'டிரிங், டிரிங்' என்று மணி அடித்துக் கொண்டு வேகமாக சைக்கிளில் வரும் காட்சி, திருப்பங்களில் ஒடித்து அநாயாசமாகத் திருப்பும் அழகு எல்லாமே அவனுக்குக் கண்கொள்ளாக் காட்சியாகத்தான் இருந்தது. அதைத் தானும் சைக்கிள் விட்டுக் கொண்டு அநுபவிக்க வேணும் என்று ஆசைப்பட்டான். 'நாளை வாத்தியங்கள் கற்றுக் கொள்ள ஒரு கையால் தலையில் குட்டிக் கொள்ள வேண்டும், இன்னொரு கையால் வயிற்றைத் தடவிக் கொள்ள வேண்டும்' என்று அந்தக் காலத்தில் பயிற்சி தருவார்களாம். அதுபோலக் கற்றுக்குட்டியான அவனும் அப்படிச் செய்ய முன்வந்தபோது அவன் சைக்கிள் பாம்பாக வளைந்தது. அவன் மேல் மோதாமல் இருக்க வேண்டுமே என்ற பயத்தில் அவளும் முடிந்த அளவு வளைந்து கொடுத்தாள். ஆனால் அவர்கள் இருவருக்கும் காதல் பிறந்ததோ என்னவோ, இரண்டு சைக்கிள்களுக்கும் காதல் பிறந்து விட்டது. ஒன்றை யொன்று 'டணார்' என்று மோதிக் கொண்டு பின்னிப் பிணைந்தன.

தூசியைத் தட்டிக் கொண்டவன் ''ஸாரி!'' என்றான்.

''நோ ஸாரி! புது 'சல்வார்-கமீஸ்' கிழிந்ததற்குப் பணத்தை வைத்துவிட்டு நட. இல்லாவிட்டால் இந்த வாடகைச் சைக்கிளை என் வீட்டுக்கு வந்து எடுத்துப் போ!'' என்று சீறியது சல்வார்-கமீஸ்.

'மோதலில் காதல் பிறக்கும் என்ற சினிமாக் கணக்குத் தப்பு. கனல்தான் பிறக்கும். அதோடு கணிசமாகக் கை நஷ்டமும் பட வேண்டியிருக்கும்' என்பதைக் கண்கூடாகக் கண்டவன் கேட்ட தொகையைக் கொடுத்து விட்டு, வாடகைச் சைக்கிளைத் தள்ளிக் கொண்டே நடந்தான். 'அதன் ரிப்பேர்ச் செலவுக்கு எத்தனை தண்டம் அழ வேண்டியிருக்குமோ?' என்ற கவலை அவனை நிஜமாகவே அழவைத்து விட்டது!

இதற்காக அவன் அயர்ந்துவிட வில்லை. காதலுக்கு உள்ள சக்தியே தனி என்பதை ஐந்தாம் நாளே அவன் உணர்ந்தான். அதெப்படி அவ்வளவு கணக்காகச் சொல்லுகிறீர்கள் என்று கேட்டால், டெய்லர்ஸ் ரோடு பஸ் நிற்குமிடத்தில் கையில் டம்பப் பையுடனும் கண்களில் கூலிங் கிளாசுடனும் நின்று கொண்டிருந்த காரிகையை அவன்



கவிதைக்கு ஓர் அட்டைப்படம்



இளமை வளம்பெல்லாம் எய்திநல்ல காட்சிதந்தாய் ;
பளபளத்து மின்னி மின்னிப் பகலவனின் பொற்கதிரில்
என்னென்ன கற்பனைகள் என்னகத்தே கூட்டுவித்தாய் !
கன்னற்களை தெவிட்டக் கனியின்பம் தரு தருவே !
ஆண்டுதோறும் எழிலிளமை அடைகின்ற தந்திரத்தை
ஈண்டெனக்குக் கூறுவையோ ? இதயம் நிறை காதலனே ?

— பெ. தூரன் ('மின்னல் பூ' என்ற நூலில்)
வண்ணப்படம் : ஆர். கே. கோயல்

பார்த்தது ஐந்தாம் நாள்தான். அடுத்த கணமே பஞ்சபாணன் என்னும் மலர் வில்லோன் அவன் உள்ளத்தைத் துளைத்து விளையாடினான்.

'கண்ணடி, மோதல் இவற்றைக் காட்டிடும் ஒரு பெண்ணின் மனத்தை ஈர்க்கக் கூடியது அநுதாபம்தான். அதனால்தான் வில்லனைச் சிருஷ்டித்துக் காதலனோடு பொருதச் செய்து, திரைப் படங்களிலே பெண் உள்ளத்தைக் கனிய வைக்கிறார்கள். சரியான உத்தி இது; யுக்தியும் இது. அதற்கு இந்த டெய்லர்ஸ் ரோடில் என்ன வாய்ப்பிருக்கிறது?' என்று குமுறியவனாய்த் தலை நிமிர்ந்தான். அவன் அவளை நோக்க, அவள் அவனை நோக்கினாள். அவனுக்கு உடல் புல்லரித்தது.

காதலுக்குக் கண் இல்லை; கூலிங் கிளாஸ்தான் உண்டு. அதன் வழியே குளுமையாகப் பார்க்கிறது என்று நம்பியவன், அவள் மீதிருந்த பார்வையை எடுக்கவில்லை. அவள் பார்வையும் நோக்கிய திசையை விட்டு நகரவில்லை. அது பஸ் வரும் வழியை அல்லவா வழிமேல் விழி வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தது! ஆறரை மணிப் படத்துக்கு மவுண்ட்ரோடு போய்ச் சேர வேண்டுமே என்ற துடிப்பில்!

அவள் எதிர்பார்த்த பஸ் வந்தது. கூட்டம் வழிய. அவள் எப்படியோ முண்டியடித்துக் கொண்டு ஏறினாள். அவனும் அவளைப் பின் பற்றினான். இருவரையும் பின்பற்றினான் இன்னொரு வெறுங்காலன்.

பஸ் கண்டக்டர் விசில் கொடுக்கக் கூடாதோ? இன்னும் நாலு பேர் வந்து எப்படியாவது ஏறிக் கொண்டால், 'இன்ஸென்டிவ்' அதிகமாகக் கிடைக்குமே என்ற நைப்பாசையில், நாக்கைத் தொட்டுத் தொட்டு மெதுவாகப் பயணச் சீட்டுகளை வழங்கலானான்.

வெறுங் காலன் வெறுங் கையோடு ஏறவில்லை என்பது "ஐயோ! என் பர்ஸ்!" என்று அவள் கிரீச்சிட்ட பிறகுதான் தெரிய வந்தது. டிக்கட் வாங்க அவள் தன் டம்பப் பையைத் திறந்து பர்ஸை எடுக்க முனைந்த பொழுதுதான் பர்ஸ் போன பரிதாபம் தெரிய வந்தது. பிளாஸ்டிக் டம்பப் பையைப் பிளேடைக் கொண்டு எப்படிப் பதமாகக் கிழித்திருந்தான்!

"கண்டக்டர்! பர்ஸை எடுத்தவன் எனக்குப் பின்னால்ஏறிய அந்த வெறுங்காலன்தான். இறங்கி விட்டான். ஒரு நிமிஷம் நிறுத்து. ஒரு கை பார்த்துவிட்டு வர்றேன்!" அந்தப் பெண்ணின் பரிவு தனக்குக் கட்டாயம் கிடைக்கப் போகிறது என்ற நம்பிக்கையில், தனக்கு வில்லனாக வந்த அந்த ஜேப்படிக்காரனை மனத்துள் வாழ்த்தினான்.

அவனுக்கு ஒத்தாசையாக யாருமே இறங்கவில்லை.

"பர்ஸில் எத்தனை ரூபாய் அம்மா இருந்தது?"

"பஸ்ஸுக்குச் சில்லறை என்றால் நான் தருகிறேன்!"

இதுபோன்ற பரிந்துரை நல்கிக்கொண்டே நின்றார்கள். அதுமட்டுமல்ல. இறங்கிய கரும்பாயிரத்தையும் நிதானமாக நடந்து சென்ற வெறுங் காலனையும் சினிமா ஷூட்டிங் பார்ப்பது போல, அல்லது திரைப் படம் பார்ப்பது போல ரசனையோடு பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

"டாய், விட்டேனா பார்!" பெண்ணின் மனத்தில் இடம் பிடிக்கப் போகும் ஆசையில் உரக்கவே கூவினான் கரும்பாயிரம்.

திரும்பிய வெறுங்காலன், "இதோ பாரு. வாத்தியாரே! நம்மகிட்டே உன் வேலையை வச்சுக்காதே! அத்தனை பேருக்கும் இல்லாத அக்கறை உனக்கு என்ன வந்தது? பேசாமப் போ! இல்லே, இந்தப் பிளேடு உன்னையே பதம் பார்த்துவிடும்!" என்றான்.

அவன் முகத்தில் வெடித்த கொடுமையைப் பார்த்த கரும்பாயிரம், காதலை மறந்து பின் அடைந்தான்.

"என் பர்ஸிலே அப்படி ஒன்றும் அதிகப் பணம் இல்லை. விடுங்க!" என்றாள் அந்தப் பெண்.

"நீ டப்பா, பஸ்ஸை!" என்று கூறித் தோற்றிக் கொள்ள ஓடியவனை அந்தரத்தில் விட்டு விட்டு பஸ் பறந்து விட்டது! திரைப் படத்தில் காதலுக்குக் கை கொடுக்கும் வில்லன் நிஜ வாழ்க்கையில் உயிருக்குத்தான் உலை வைப்பான் போலும்!

இப்படி முடிவுக்கு வந்தாலும் கரும்பாயிரத்துக்குத் தோல்வியைக் கவ்வ மனம் இல்லை. போதாக்குறைக்கு 'ராபர்ட் ப்ரூஸும் சிலந்தியும்' கதை வேறு நினைவு வந்து வெற்றி உறுதி என்று பறைசாற்றியது!

எனவே, இசைக்கு இசையாத காதல் இல்லை என்ற முடிவுக்கு வந்தவன், பாட்டால்

ஒருத்தியை மயக்கியே தீருவது என்ற முடிவுக்கு வந்தான்.

முன்னிரவுக் காலம். தெரு விளக்குகளுக்கும் இது எப்படியோ தெரிந்திருந்தது. 'நாம் ஊருக்கு வெளிச்சம் போடுவானேன்?' என்று அவை உறக்கத்தில் ஆழ்ந்தன. மாம்பலம் ஸ்டேஷனில் இறங்கியவன் கண்ணம்மாப் பேட்டை வழியாகக் காவேரி நகர் போய் விடலாம் என்று நடக்கலானான்.

எதிரே வந்த சைக்கிள் வெளிச்சத்தில் இளமங்கை ஒருத்தி 'விசுக், விசுக்' என்று நடந்து மேட்லி ரோட்டைக் கடப்பது தெரிந்தது. 'இசைக் காதலுக்கு இதுவே சரியான தருணம்' என்று 'போல் ராதா போல்! ஸங்கம் ஹோகா கி நஹீன்' பாட்டைச் சீழ்க்கை ஒலியில் பாடிக்கொண்டே நெருங்கினான். தன்னை ஓர் ஆடவன் தொடருகிறான் என்று அவள் நடையில் வேகம் கூடவே கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போய் விடுமோ என்று இவன் எட்டை எட்டிப் போட, இசையும் ஒத்துப் பாடித் தாளம் போட்டது. 'யாரோ கயவன்' என்ற எண்ணத்தில் அந்தப் பெண் பஸ் நிலையத்துக்குள் நுழைந்து 'தப்பினோம் பிழைத்தோம்' என்று பெருமூச்சு விட்டாள். கரும்பாயிரமோ கையில் அகப்பட்ட புறு கடுலிப் பறந்து விட்டதே என்று ஏக்க மூச்சு விட்டான்!

* * *

"சுந்தரி!"

கதவைத் திறந்தான், அவனது மனைவி திரிபுரசுந்தரி. ஆனால், அப்பொழுது அவள் சுந்தரியாக இல்லை. ஆத்திரமும் அழுகையும் பிடிடக் காளியாகக் காட்சி தந்தாள்.

"'நேரத்துக்கு வீட்டுக்கு வாருங்கள், நேரத்துக்கு வீட்டுக்கு வாருங்கள்!' என்று எத்தனை தடவை படித்துப் படித்துச் சொல்லியிருக்கிறேன், உங்க ...ட்டம்! நீங்கள் கேட்டால் தானே?"

"என்ன? என்ன நடந்து விட்டது? எதற்காக இப்படிச் சீறுகிறாய்?"

"என்ன நடந்து விட்டதா? முப்பாத்தம்மன் கோவிலுக்குப் போய்விட்டு அப்படியே காய்கறி வாங்கி வருவோம்னு மாம்பலம் ஸ்டேஷன் பக்கமா வந்தேன். சமயம் பார்த்துப் பாழாய்ப் போற தெரு விளக்கு அணைந்து தொலைந்திருந்தது. எவனோ காலிப் பயல், 'போல் ராதா போல், ஸங்கம் ஹோகா கி நஹீன்!'னு சீட்டியிலே பாடிக் கொண்டு என்னைப் பின்தொடர்ந்தான். எனக்குப் பிராணனே போயிடும் போலாகிவிட்டது! நீங்களும் கூட வந்திருந்தால் இந்தத் துணிச்சல் எவனுக்காவது வந்திருக்குமா?"

கரும்பாயிரம் வெலவெலத்துப் போனாலும், "அப்படி அவன் கிட்ட வந்திருந்தா நீ என்ன பண்ணியிருப்பே?" என்று ஒப்புக்குக் கேட்டு வைத்தான்.

"என்ன பண்ணியிருப்பேனா? கால் செருப்பைக் கழற்றிக் கொண்டு அவன் கன்னத்திலே கொ... ...ருப்பேன்!" என்றாள் திரிபுரசுந்தரி.

க...யிரம் கன்னத்தைத் தடவிக் கொ... ...ான்.



கடவுளுக்கு ஒரு கடிதம்

"இங்கிலாந்துக்கும், வெஸ்ட் இண்டீஸுக்கும் இடையே நடக்கும் டெஸ்ட் மாட்சைப் பார்க்க எனக்கு ஆசையாய் இருக்கிறது. எனக்கு 25 பவுன் கொடுங்கள்" என்று கடிதம் எழுதித் தபால் பெட்டியில் போட்டான் ஒரு சிறுவன். உறையின் மேல் 'கடவுளுக்கு' என்று எழுதினான்.

இதுமாதிரியான கடிதங்கள் பிரதம மந்திரியின் அனுமதியின்பேரில் நிதிமந்திரி அலுவலகத்துக்கு அனுப்பப்படும்.

நிதித்துறை அதிகாரிகள் கடிதத்தைத் தங்கள் பொரிகடன் வர்த்தக இலாகாவுக்கு அனுப்பி வைத்தார்கள். பையனின் ஆர்வத்தைப் பாராட்டி 20 பவுன் அன்பளிப்பாக அனுப்பியது வர்த்தக இலாகா!

சில நாட்கள் கழித்துப் பைய...மிருந்து கடவுளுக்கு என்ற முகவரிக்கு மற்றொரு கடிதம் வந்தது. வாசகம்: நீங்கள் பணம் அனுப்பியதற்கு மிகவும் நன்றி. ஆனால் இனி வர்த்தக இலாகா வழியே அனுப்ப வேண்டாம். அவர்கள் வழக்கமான 20 சத விகிதம் கமிஷனை எடுத்துக்கொண்டு இருபது பவுன்தான் அனுப்பி யிருக்கிறார்கள்!

ஆதாரம்: லண்டன் டைம்ஸ்

தகவல்: கோ. கிருஷ்ணஸ்வாமி



தண்ணீர்த் தந்தி

பல் சுளுக்குமளவுக்குச் சிரிக்க வைக்க ஒரு கற்பனை நாவிதழ்.



புது முறைக் கல்வியில் நடைமுறைச் சிக்கல்கள்!

அடுத்த இதழில்...

சிறுகதை: அவள் பார்த்த நாடகம்!

குவாலியர் ரேயானின் மகத்தான 26 ஆண்டு காலப் பணி



தன்வலிமை பெறும் கனவை நனவாக்கி வரும் பணி.

ரேயான் துணிகள், ஸ்டேபிள் இழை, ரேயான்-கிரேடு பல்ப் (கூழ்), ரேயான் ஸ்டேபிள் நூலிழைத் தொழிற்சாலைகளுக்கான எந்திர சாதனங்கள் ஆகிய எல்லாவற்றையும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்வதற்கென குவாலியர் ரேயான் செய்துவரும் முயற்சிகள், நாடு சுதந்திரம் எய்திய காலிலேயே தொடங்கிவிட்டன.

மூங்கில் மற்றும் இதர கெட்டி மரங்களிலிருந்து கரை திறனுள்ள ரேயான்-ரகக் கூழ் தயாரிப்பு, மற்றும் ரேயான், பல்ப், இவை சார்ந்த தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கான நுட்பவினைமான எந்திர சாதனங்களின் உற்பத்தி முதலியவற்றிலே குவாலியர் ரேயான்முன்னோடியாக விளங்குவதனால், ரேயான் தொழிலிலே நம் நாடு தன்வலிமை பெற வழியமைந்துள்ளது.

இன்று, குவாலியர் ரேயானின் ஸ்டேபிள் நூலிழை உற்பத்தியளவு, 520 லட்சம் பேருக்கு ஆடை வழங்கப் போதுமானதாக உள்ளது. மரக் கூழ் உற்பத்தியோ, ஆண்டு தோறும் ஒரு லட்சம் டன்களுக்கு மேல்; இது செல்லுலோஸ் இழையளவிலே கணக்கிட்டால், 5.2 லட்சம் பருத்தி பேல்களுக்கு ஈடாகும்.

கடந்த பத்தாண்டுகளில், குவாலியர் ரேயான் நம் நாட்டின் பொக்கிஷத்திற்கு, வரிகளும் தீர்வைகளுமாக ரூ. 90 கோடி செலுத்தியுள்ளதோடு, அதே காலத்தில் ரூ. 360 கோடி அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தியுள்ளது. இதை நோக்கும்போது, தன்வலிமை வாய்ந்த பொருளாதார அமைப்புக்கு குவாலியர் ரேயான் செலுத்திவரும் மகத்தான பணியின் பெருமை தெளிவாக விளங்கும்.

குவாலியர் ரேயான்—
தேச முன்னேற்றமே முதன்மை எனக் கருதுவோர்.

தி குவாலியர் ரேய்யான் ஸில்க் மானுபாக் (வீவிங்.) கோ. லிட்., பிர்லாகிராம், நாக்தா (ம.பி.)

Sobhagya GR 74-2-Tam.

சிவகாமியின் சபதம்

இருபத்தோராம் அத்தியாயம்

புலிகேசியின் கலை மோகம்

புலிகேசிச் சக்கரவர்த்தி வாதாபியில் இல்லை—அஜந்தாவுக்குப் போயிருக்கிறார் என்று குண்டோதரன் கூறிய செய்தி அங்கிருந்த நால்வருக்கும் வியப்பையும் குதூகலத்தையும் அளித்தது என்பது அவர்கள் வாயிலிருந்து வந்த விநோத மான சப்தங்களிலிருந்து தெரிய வந்தது.

"அஹஹா !"

"ஓஹ்ஹோ !"

"ஹேஹேஹே !"

"சே சே சே !"

என்றெல்லாம் அர்த்தமில்லாத ஓசைகளை வெளியிட்ட பிறகு, ஏககாலத்தில் நால்வரும் குண்டோதரனைப் பார்த்து, "நிஜந்தானா ?" "உண்மையா ?", "அஜந்தாவுக்கா போயிருக்கிறான்?", "புலிகேசிக்கு அஜந்தாவில் என்ன வேலை ?" என்று சரமாரியாகக் கேள்விகளைப் பொழிந்தார்கள்.

அப்போது மாமல்லர், "இப்படி எல்லோருமாகக் குண்டோதரனைத் துளைத்தால், அவன் எப்படி மறுமொழி சொல்லுவான் ? கொஞ்சம் சும்மா இருங்கள். குண்டோதரா! உன் பிரயாணத்தைப் பற்றிய விவரங்களை ஆதியோடந்தமாகச் சொல்லு!" என்றார்.

குண்டோதரன் சக்கரவர்த்தியைப் பணிந்துவிட்டுக் கூறினான்: "பல்லவேந்திரா! இந்த ஏழை சந்தேகமறத் தெரிந்து கொண்டு வந்த உண்மையைத்தான் கூறினேன். புலிகேசிச் சக்கரவர்த்தி அஜந்தாவுக்குத்தான் போயிருக்



அமரர் கல்கி



கிறார். யாரோ சீனாவிலிருந்து ஒரு யாத்திரீகன் வந்திருக்கிறானாம். அவன் பெயர் என் வாயில் நுழையவில்லை. 'ஹியூன் சங்' என்று சொன்னார்கள். அவன் உத்தர தேசத்தில் கன்யாகுப்ஜம் காசி, கயா முதலிய க்ஷேத்திரங்களை யெல்லாம் பார்த்துவிட்டு வந்தானாம். கன்யாகுப்ஜத்தில் ஹர்ஷ சக்கரவர்த்தியின் ஆட்சி மகிமையைப் பற்றி அவன் வர்ணித்தானாம். ஹர்ஷ சக்கரவர்த்திக்குத் தான் குறைந்து போய்விடவில்லை என்று காட்டுவதற்காக வாதாபிச் சக்கரவர்த்தி அந்த யாத்திரிகனைத் தாமே நேரில் அழைத்துக் கொண்டு அஜந்தாவின் சிற்ப சித்திர அதிசயங்களைக் காட்டுவதற்காகப் போயிருக்கிறாராம்! பிரபு! இப்போதெல்லாம் புலிகேசிச் சக்கரவர்த்திக்குக் கலைகளிலே ரொம்ப மோகமாம்! வாதாபியில் உள்ள பாறைகளையெல்லாம் குடைந்து மாமல்லபுரத்துச் சிற்பங்களைப் போல் அமைத்துக் கொண்டிருக்கிறாராம்! நமது தொண்டை மண்டலத்திலிருந்து கை கால்களை வெட்டாமல் சிறைப் பிடித்துக் கொண்டு போன சிற்பிகள் சிலர் அந்தப் பாறைகளில் வேலை செய்வதை நானே பார்த்தேன். ஆனால், ஒரு வேடிக்கையைக் கேளுங்கள்: அந்தச் சீன யாத்திரிகன் ஹியூன் சங்கைப் புலிகேசி மேற்படி சிற்பப் பாறைகளுக்கு அழைத்துச் சென்று காட்டியபோது, 'இந்தப் பாறைச் சிற்பங்களைப் பார்த்துவிட்டுத்தான் காஞ்சி மகேந்திர பல்லவன் மாமல்லபுரத்தில் இதே மாதிரி செய்யப் பிரயத்தனப்பட்டான்! அவனுக்கு நல்ல புத்தி கற்பித்துவிட்டு வந்தேன்!' என்றானாம். இதைப் பற்றிக் கேட்டபோது எனக்கு என்னவாயிருந்தது, தெரியுமா? இரத்தம் கொதித்தது! வாதாபி நாற்சந்தியில் உள்ள ஜய ஸ்தம்பத்தில் காஞ்சி மகேந்திர பல்லவரை வாதாபிப் புலிகேசி புறங்கண்டதாக எழுதியிருக்கும் பொய்யும் இன்னும் அப்படியேதான் இருக்கிறது. பிரபு! இதற்கெல்லாம் காலம் இன்னும் மூன்று மாதந்தானே என்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு திரும்பி வந்தேன். வாதாபியில் யுத்த ஏற்பாடுகள் ஒன்றுமே நடக்கவில்லை. இந்த வருஷம் நம்முடைய படையெடுப்பை அவர்கள் எதிர்பார்க்கவே இல்லையாம்! வாதாபிச் சைனியம் வடக்கே நர்மதைக் கரையிலும் கிழக்கே வேங்கியிலுமாகச் சிதறிக் கிடக்கிறது!''

இவ்விதம் குண்டோதரன் சொல்லிச் சற்று நிறுத்தியதும், மாமல்லர் பரஞ்சோதியைப் பார்த்து, ''சேனாதிபதி! பார்த்தீரா! நம் சத்ருக்னனுடைய யுக்தி இவ்வளவு நன்றாகப் பலிக்கும் என்று நாம்கூட எதிர்பார்க்கவில்லையல்லவா?'' என்றார்.

சத்ருக்னன் அப்போது பணிவான குரலில், ''பல்லவேந்திரா! அடியேனுடைய யுக்தி என்று ஏன் சொல்லுகிறீர்கள்? தாங்களும் சேனாதிபதியும் சேர்ந்து தீர்மானித்ததைத்தானே நான் நிறைவேற்றினேன்!'' என்றான்.

அதற்குச் சேனாதிபதி பரஞ்சோதி, ''சத்ருக்னர் சொல்வது உண்மைதான்! எல்லாம் மகேந்திர பல்லவரிடம் நாம் மூவரும் கற்றுக் கொண்டதுதானே? இந்த யுத்தத்திலே நாம் ஜயம் பெற்றோ





மானால் அதனுடைய பெருமை முழுவதும் விசித்திர சித்தருக்கே சேர வேண்டியது!'' என்றார்.

''சேனாதிபதி! 'யுத்தத்திலே ஜயம் பெற்றோமானால்' என்று நீங்கள் சொல்வதை நான் ஆட்சேபிக்கிறேன். ஜயத்தைப் பற்றி என்ன சந்தேகம் இருக்கிறது? ஆனால், எந்த 'யுக்தி'யைப் பற்றி நீங்கள் எல்லோரும் பேசுகிறீர்கள் என்பது எனக்கு விளங்கவில்லை. தயவு செய்து சொன்னால் தேவலை!'' என்றான் ஆதித்தவர்மன்.

''அப்படிக் கேள், தம்பி! 'அதைச் சொன்னால் மகேந்திர பல்லவர் எங்களுக்கு அளித்த பயிற்சி இப்போது எவ்வளவு தூரம் பயன்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்வாய். சென்ற ஒன்பது வருஷமாக நானும் சேனாதிபதியும் இந்தப் படையெடுப்புக்காக ஆயத்தம் செய்து வந்தபோது, சத்ருக்னனுடைய ஒற்றர் படையும் மிகத் திறமையாக வேலை செய்து வந்தது. நம் ஒற்றப் படையி ல சிலர் சத்ருக்னனுடைய தூண்டுதலின் பேரில் நம் யுத்த ரகசியங்களை வாதாபிச் சக்கரவர்த்திக்கு விற்பனை செய்யத் தொடங்கினார்கள். முதலில் சில காலம் உண்மையான தகவல்களையே அனுப்பிக் கொண்டிருந்தபடியால் புலிகேசிக்கு நம்பிக்கை ஏற்பட்டது. மூன்று வருஷத்துக்கு முன்னால், 'இந்த வருஷம் பல்லவ சைனியம் வாதாபியின் மேல் படையெடுத்து வரப் போகிறது' என்று செய்தி போயிற்று. புலிகேசி அதை நம்பிப் பெரிய ஆயத்தங்கள் செய்திருந்தான். ஆனால் பல்லவ சைனியம் வராமல் ஏமாந்தான். இப்படியே மூன்று வருஷம் ஏமாந்த பிறகு புலிகேசி கோபம் கொண்டு பழைய ஒற்றர்களையெல்லாம் தள்ளிவிடச் செய்தான். புதிய ஒற்றர்கள் இந்த வருஷத்தில், வாதாபி மேல் படையெடுக்கும் உத்தேசமே இங்கு இல்லை என்றும், மானவன்மனுக்கு இலங்கையைப் பிடித்துக் கொடுப்பதற்காகவே பல்லவ சைனியம் சேகரிக்கப்படுகிறதென்றும் செய்தி அனுப்பினார்கள். புலிகேசி மேற்படி செய்தியைப் பூரணமாய் நம்பிவிட்டான் என்று முன்னமே தெரிந்து கொண்டோம். துங்கபத்திரை நதிக் கரையிலிருந்த சளுக்க சைன்யத்தை நர்மதைக்கும் வேங்கிக்கும் பகிர்ந்து அனுப்பிவிட்டதாகவும் அறிந்தோம். இப்போது குண்டோதரன் சொல்வதிலிருந்து, புலிகேசியே அஜந்தாவுக்குப் போயிருக்கிறான் என்று தெரிகிறது. சத்ருக்னனின் யுக்தி பலித்திருக்கிறது அல்லவா?''

இப்படி மாமல்லர் கூறி முடித்ததும், ''பல்லவேந்திரா! இலங்கை இளவரசர் இந்த வகையிலும் நமக்குப் பேருதவி செய்திருப்பதாகத் தெரிகிறதே! மானவன்மர் காஞ்சியில் வந்து இருந்ததனால்தானே புலிகேசியின் கண்ணில் சத்ருக்னன் இவ்வளவு நன்றாக மண்ணைத் தூவ முடிந்தது!'' என்றான் ஆதித்தவர்மன்.

''சமணர்களால் மனம் குழம்பிப் போயிருந்த குமாரப் பாண்டியனை மதுரைக்குத் திருப்பி அனுப்பிவிட்டுப் பாண்டிய சைனியத்தைப் போருக்கு அழைத்துக் கொண்டு வருகிறாரே, அந்த உதவிதான் சாமான்யப்பட்டதா?'' என்றான் சத்ருக்னன்.

அப்போது மாமல்லர் கடுமையான குரலில், ''மானவன்மன் என்னதான் நமக்கு உதவி செய்திருக்கட்டும்; அவன் என்னை ஏமாற்றிய காரியத்தை என்னால் மறக்கவே முடியாது; மன்னிக்கவும் முடியாது!'' என்றார்.

''பல்லவேந்திரா! இது என்ன? தங்களை இலங்கை இளவரசர் எந்த விஷயத்தில் ஏமாற்றினார்?'' என்று சேனாதிபதி கேட்டார்.

''மானவன்மன் நம்மோடு வாதாபிக்கு வரக் கூடாது என்பதற்கு ஒரு முக்கியமான காரணம் அவனுக்கு நான் சொன்னேன். போர்க் களத்தில் அவன் ஒரு வேளை வீரசொர்க்கம் போகும்படி நேர்ந்து விட்டால், இலங்கை இராஜ வம்சம் சந்ததி அற்றுப் போய்விடும்; ஆகையால் அவன் வரக்கூடாது என்று



ராமு: சேது ரொம்ப மோசம். பெரிய செலவாளியாகி விட்டான். எப்பொழுது பார்த்தாலும் பணமில்லை, பணமில்லையென்று மூக்கால் அழுகிறான்!

சோமு: ஏன், உன்னிடம் வந்து கடன் கேட்டுவிட்டானோ?

ராமு: இல்லை. நான்தான் அவனைக் கடன் கேட்டுப் பார்த்தேன்! - சிஜயம்

சொல்லியிருந்தேன். இந்த விஷயத்திலே தான் மானவன்மன் என்னை ஏமாற்றி விட்டான்!'' என்றார் சக்கரவர்த்தி.

"இதில் ஏமாற்றுவதற்கு என்ன இருக்கிறது?'' என்றான் ஆதித்த வர்மன்.

''நாம் புறப்பட்டு வந்த ஒரு வாரத்துக்குள் இலங்கை இராஜ வம்சத்துக்குச் சந்ததி ஏற்பட்டுவிட்டது! மானவன்மனுடைய மனைவி நாம் புறப்படும் போது பத்து மாதக் கர்ப்பிணியாம். நாம் புறப்பட்ட ஐந்தாம் நாள் அவளுக்கு ஆண் குழந்தை பிறந்ததாம்! இந்த விஷயத்தில் சத்ருக்னன்கூட எனக்கு உண்மையைத் தெரியப்படுத்தாமல் இருந்துவிட்டான்!'' என்று மாமல்லர் கூறுவதற்குள்ளே சேனாதிபதி உள்பட எல்லாரும் 'கொல்' என்று சிரித்தார்கள்.

இதற்கிடையில், "ஓஹோ! இப்போது தெரிந்தது!'' என்றான் குண்டோதரன்.

"உனக்கு என்ன தெரிந்தது இப்போது புதிதாக?'' என்று மாமல்லர் கேட்டார்.

''பிரபு! அதோ அந்த அரச மாத்தில் நான் ஏறி இருந்தபோது தெற்கே ஒரு பெரிய புழுதிப் படலம் தெரிந்தது. ஏதோ படை திரண்டு வருவதுபோல் தோன்றியது. 'எந்தச் சைனியம் இப்படிச் சக்கரவர்த்திக்குப் பின்னால் வருகிறது?' என்று யோசித்தேன். தாங்கள் பேசிக் கொள்வதிலிருந்து இலங்கை இளவரசர்தான் பாண்டிய சைனியத்துடன் அவசரமாக வருகிறார் என்று தெரிந்தது'' என்றான் குண்டோதரன்.

"ஓஹோ! அதற்குள் வந்துவிட்டானா?'' என்று மாமல்லர் கூறியபோது நிலா வெளிச்சத்தில் அவருடைய முக மலர்ச்சி நன்றாகத் தெரிந்தது. பிறகு அவர் பரஞ்சோதியைப் பார்த்து, ''சேனாதிபதி! ஆகக்கூடி, நீங்கள் எல்லாரும் என்னதான் சொல்கிறீர்கள்? மானவன்மனுடைய தவற்றை மன்னித்து அவனையும் நம்மோடு அழைத்துப் போக வேண்டும் என்று சொல்கிறீர்களா?'' என்று கேட்டார்.

''ஆம், பிரபு! அழைத்துப் போக வேண்டியதுதான்!'' என்று சேனாதிபதி கூறிய குரலில் ஓரளவு தயக்கம் இருக்கத்தான் செய்தது.

"அப்படியானால் ஒன்று செய்யுங்கள்: நீங்கள் மூவரும் கொஞ்சம் முன்னால் நதியைக் கடந்து சென்று இன்றிரவு சைனியம் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனியுங்கள். நானும் குண்டோதரனும் இங்கேயே



இருந்து மானவன்மனை அழைத்து வருகிறோம். குண்டோதரனிடம் நான் கேட்க வேண்டிய சில விஷயங்களும் இருக்கின்றன'' என்று மாமல்லர் கூறவும், குறிப்பறியும் ஆற்றல் வாய்ந்த அறிவாளிகளாகிய மற்ற மூவரும் உடனே கிளம்பிச் சென்று, நதியில் அவர்களுக்காகக் காத்திருந்த படகில் ஏறிக்கொண்டார்கள்.

அவர்கள் சென்றதும் மாமல்லர் குண்டோதரனை ஏறிட்டுப் பார்த்தார்.

மெல்லிய குரலில் குண்டோதரன், ''பல்லவேந்திரா! வாதாபியில் ஆயனரின் குமாரியைப் பார்த்தேன். சௌக்கியமாயிருக்கிறார். நம்முடைய வரவை இரவும் பகலும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்'' என்றான்.

''அந்தப் பிரதகியின் சௌக்கியத்துக்கு என்ன குறைவு? சௌக்கியத்தையும் சாந்தத்தையும் இழந்து தவிப்பவன் நான் அல்லவா?'' என்று நரசிம்ம வர்மர் முணுமுணுத்தார்.

இருபத்திரண்டாம் அத்தியாயம்

பவளமல்லி மலர்ந்தது

வாதாபி மாளிகையில் சிவகாமி சௌக்கியமாகத்தான் இருந்தாள்.

அதாவது அவளுடைய தேகம் சௌக்கியமாக இருந்தது.

ஆனால், அவளுடைய உள்ளமோ ஒரு கணமேனும் சாந்தி காணாமல் அமைதி இன்றி அலைந்து கொண்டிருந்தது.

வருஷங்கள் ஒன்றன் பின் ஒன்றாய் வந்து போய்க் கொண்டிருந்தன.

ஒவ்வொரு வருஷமும் வசந்தம், வேனில் முதலிய பருவ காலங்கள் வந்து போய்க் கொண்டிருந்தன.



''மணி இன்னும் இரண்டு வாரங்கள் வரையில் ஆஸ்பத்திரியில்தான் இருப்பாள்.''
''ஏன் அது உனக்கு எப்படித் தெரியும்? டாக்டரைப் பார்த்தாயா?''
''இல்லை. மணியைக் கவனித்துக் கொள்ளும் நர்ஸைப் பார்த்தேன்!'' - விஜயம்



வருஷங்களையும், பருவ காலங்களையும் கணக்கிடுவதற்குச் சிவகாமி ஒரு வழி கண்டுபிடித்திருந்தாள்.

அவள் வசித்த மாளிகையின் பின் முற்றத்தில் கிணற்றின் அருகில் ஒரு பவள மல்லிகை மரம் இருந்தது.

சிவகாமி வாதாபிக்கு வந்த வருஷத்திலே அந்தப் பவளமல்லிச் செடியை அவள் தன் கையாலேயே கிணற்றின் அருகில் நட்டாள்.

நாகநந்தி அடிகள் அஜந்தா மலைப் பிராந்தியத்தைப் பற்றி வர்ணனை செய்தபோது, அந்தப் பிரதேசத்தில் ஆவணி, புரட்டாசி மாதங்களில் கணக்கில்லாத பாரிஜாத மரங்கள் புஷ்பித்துக் குலுங்கும் என்றும், அந்த நறுமலர்களின் இனிய மணம் நெடுந்தூரம் காற்றிலே பரவி அந்தப் பக்கம் வருவோருக்கெல்லாம் இன்ப போதையை உண்டாக்கும் என்றும் சொன்னார். அதைக் கேட்ட சிவகாமி அந்தச் செடிகளில் ஒன்றைத் தனக்காகக் கொண்டு தர வேண்டும் என்று வேண்டிக்கொண்டாள்.

அவளுடைய வேண்டுகோளைக் கட்டளையாக மதித்த புத்த பிக்ஷு சீக்கிரத்தில் அஜந்தா மலைப் பிராந்தியத்திலிருந்து பவள மல்லிச் செடி ஒன்று தருவித்துக் கொடுத்தார்.

அந்தச் செடியைச் சிவகாமி நட்டுக் கண்ணும் கருத்துமாய்ப் பாதுகாத்து வந்தாள். கண்ணீருடன் தண்ணீரும் விட்டு வளர்த்து வந்தாள்.

அந்தப் பவளமல்லிச் செடியில் முதன் முதலில் இளந் தளிர் விட்டபோது சிவகாமியின் உள்ளம் துள்ளிக் குதித்தது. புதிய கிளை ஒன்று கிளம்பியபோது துயரத்தால் வெம்பிய அவள் உள்ளம் குதூகலத்தினால் பொங்கியது. முதன் முதலில் அந்தச் செடியிலே மொட்டு அரும்பியபோதும் அது பூவாக மலர்ந்தபோதும் சிவகாமி சிறிது நேரம் தன் துயரங்களையெல்லாம் மறந்து, ஆனந்தக் கடலில் மிதந்தாள். கிளி மூக்கின் வடிவமான அதன் அழகிய இதழ்களையும், செம்பவள நிறம் கொண்ட காம்பையும் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தாள்.

நேரம் ஆக ஆக, சூரியன் வான மார்க்கத்தில் ஏற ஏற, அந்த மெல்லிதழ் மலர் வர வர வாடிச் சுருங்கிக் கடைசியில் கருகி உதிர்ந்தபோது தாற்காலிகமாகக் குளிர்ந்து தளிர்த்திருந்த அவளுடைய இருதயமும் வாடிக் கருகித் தீய்ந்தது.

செடி நன்றாக வேரூன்றிக் கிளைத்துத் தழைத்த பிறகு அதைக் கவலையுடன் பராமரிக்கும் வேலை சிவகாமிக்கு இல்லாமல் போயிற்று. அந்தச் செடியைக் கொண்டு பருவங்களையும் வருஷங்களையும் சிவகாமி கணக்கிட்டு வரத் தொடங்கினாள்.

மனிதர்களின் எலும்புவரை குளிரச் செய்த பனிக் காலத்தில் அந்தப் பவள மல்லிகை மரத்தின் இலைகள் எல்லாம் காய்ந்து உலரத் தொடங்கும். இளவேனிற் காலத்தில் புதிய இளந் தளிர்கள் துளிர்க்கத் தொடங்கும். முதுவேனிற் காலத்தில் இலைகள் முற்றுவதோடு மொட்டுக்களும் அரும்ப ஆரம்பிக்கும். உக்கிரமான மேல் காற்றோடு மழையும் கொட்டும், ஆனி ஆடி மாதங்களில் அந்தப் பவளமல்லிச் செடி பேயாட்டம் ஆடிப் படாத பாடு படும். அதைப் பார்க்கவும் சகிக்காமல் சிவகாமி வீட்டுக்குள்ளேயே பித்துப் பிடித்தவள் போல் உட்கார்ந்திருப்பாள். ஆவணி புரட்டாசி மாதங்களில் அந்தப் பவள மல்லிகைச் செடி பச்சைப் பசேலென்ற இலைகளை அடியோடு மறைத்து விடுவதற்குப் போட்டி போடும் மலர்கள் குலுங்கப் பெற்று விளங்கும். அந்தக் காலங்களில் சிவகாமி முற்றத்தின் படிக்கட்டின் மீது உட்கார்ந்து அந்தச் செடியை வெகுநேரம் பார்த்துக்கொண்டிருப்பாள். நவராத்திரியின் போதும் விஜயதசமி அன்றைக்கும் தமிழகத்தின் ஆலயங்களில் விக்கிரகத்துக்குப் பவளமல்லி மலர்களைக் கொண்டு புஷ்பப் பாவாடை அலங்காரம் செய்வார்கள் என்பதை நினைவுகூர்வாள். அதோடு தான் வாதாபிக்கு வந்து ஒரு விஜயதசமி ஆயிற்று, இரண்டு விஜயதசமி ஆயிற்று என்றும் கணக்கிடுவாள்.

இவ்வாறு கணக்கிட்டு வந்ததில், சிவகாமி வாதாபி நகரத்துக்கு வந்து இப்போது ஒன்பது வருஷங்கள் ஆகிவிட்டன. (தொடரும்)

''சிங்கத்தின் வாயிலே நான் தலையை விடற ஸ்பெஷல் காட்சி இன்னிக்கு வேண்டாம் சார்!''

''ஏம்பா?''

''சிங்கம் இன்னிக்கு அடிக்கடி தும்முது!''



-உஷா

நூற்றைம்பது ரூபாய்

ப. தமிழினியன்

விடிந்தால் ஐந்தாம் தேதி.

அரிசிக் கடைக்காரருக்குத் தவணை சொல்லப்பட்ட சங்கடமான தினம். போன மாதம் விநியோகித்த அரிசிக்குப் பணம் கொடுத்தாக வேண்டும். தவறினால் —

முழு நீளப் பேரேடு சகிதமாய் வந்துவிடுவார், ஆசாமி. கொடுவாள் மீசையை வருடிக்கொடுத்த வண்ணம், 'பழைய பாக்கி இன்னும் வர வில்லையே...' என்பார், கட்டைக் குரலில். என் நாணயம், நம்பிக்கை எல்லாம் காற்றிலே பறக்கும். தன்மானப் புலிகளுக்கு இவை வேதனை தரக்கூடிய விவகாரங்கள். ஆயினும் அதைக்கூட சகித்துக் கொள்ளலாம். ஆனால், மைதிலி!

அவளது நினைவுதான் இப்போது என்னைப் பூதாகாரமாகப் பய முறுத்துகிறது.

அகத்துக்காரி, ஆனந்தம் வர்ஷிக்க வேண்டிய கற்பகம், மாறாக, அச்சத்தின் விளைநிலமாகிவிட்டாள் எனில் என்ன காரணம்?

நடந்தது இதுதான்.

சென்ற வாரம் ஓர் அதிகாலை. சொட்டுச் சொட்டாக வடியும் குழாய் நீரில் உடம்பைக் காட்டிவிட்டு வெளியே வந்தேன். தங்கை சோபனா நின்று கொண்டிருந்தாள்.

''அண்ணா....!''

''வா...வா! எப்போது வந்தாய்?''

''இந்து நிமிஷமாச்சு.''

''என்ன விசேஷம்?''

''எங்கள் கல்லூரியில் அகில இந்திய சுற்றுப்பயணம் ஒன்று ஏற் பாடு செய்திருக்கிறார்கள். காஷ்மீர், ஆக்ரா, தாஜ்மகால்.... எல்லா இடங்களும் பார்க்கலாம்.. பிரயாணம் போர்டிங், லாட்ஜிங் எல்லாமே குறைந்த கட்டணம். தலைக்கு நூற் றைம்பது ரூபாய்தான். ரொம்ப மலிவு... இல்லையா அண்ணா?''

''நிச்சயமாய்.''



''அப்பாவிடம் பணம் கேட்டேன். முணு முணுக்கிறார். நீங்கள்தான் எனக்குக் கொடுத்து உதவ வேண்டும் அண்ணா!''

திடுக்கிட்டேன், நான். பிரச்னை நேரடித் தாக்குதலில் திரும்பி விட்டதே!

மணமானதும் (எல்லோரையும் போல்) தனிக் குடித்தனம் வைத்துக் கொண்டவன் நான். நாலு வருஷமாகிறது. இதுவரையில் என் தங்கையோ பிறரோ என்னிடம் உதவி கோரியதோ, நான் கொடுத்ததோ இல்லை. அந்த 'ரிக்கார்டை'த் தகர்த்து விட்டாள்,என் தங்கை.

குமாஸ்தா உத்தியோகத்தில் இருப்பவனுக்கு நூற்றி ஐம்பது ரூபாய் என்பது அதிக பட்சம்தான். என்றாலும்,' கூடப்பிறந்தவள் கேட்கும் போது என்ன செய்வது? கொடுக்க விழைந்தது. உள்ளம்.ஆனால்...

எப்போதுமே அடுக்களையில் புகுந்து கொண்டிருக்கும் மைதிலி அப்போது பார்த்து என் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள்.

சோபனாவுக்கு நான் பணம் தருவதாக உடன்படப் போய், மைதிலிக்கு அது பிடிக்காமல் மனத்தில் ஏதேனும் நினைத்துக்கொண்டால்...?

நண்பர்களின் குடும்பக் கதைகளைத்தான் நாள்தோறும் கேள்விப்படுகிறோமே. கணவன் தன் பெற்றோருக்காகவோ, உடன் பிறந்தோருக்காகவோ ஒரு துரும்பைத் தந்தால் கூட மனைவியாகப்பட்டவளின் இதயத்தில் அது எறும்பாகக் கடித்து விடுகிறதே! அதையொட்டி எத்தனை பூசல்! டானா... பணால்... என மோதித் தகர்படும் பாத்திரங்களின் அவதிதான் எத்தனை!



நிம்மதி நிர்மூலமாகி,இல்லமா, துயர வெள்ளமா எனப் புலம்பி, அப்பப்பா! வேண்டாம் சாமி!

என் பதிலை ஆவலுடன் எதிர்பார்த்து நின்ற சோபனாவை நோக்கி 'கோழி'ச் சிரிப்பு சிரித்தேன். ''போயும் போயும் இந்த மாசத்தில்தானா நீ என்னிடம் பணம் கேட்க வேண்டும்?''

''ஏன் அண்ணா?''

''இம்மாதம் எனக்கு ஏகப்பட்ட செலவுகள் இருக்கின்றன, சோபனா. எதையும் நிறுத்த முடியாது. அப்பாவிடமே மறுபடியும் கேட்டுப்பாரேன்.''

''சரி அண்ணா!'' தங்கை போய்விட்டாள், ஏமாற்றம் நிறைந்த முகத்துடன்.

ஆனால்—

முதல் தேதி சம்பளம் வாங்கியதுதான் தாமதம். அரிசிக்குத் தரவேண்டிய பணம் நூற்றைம்பதையும் கொண்டு போய் உறையூரிலிருக்கும் என் தங்கையிடம் கொடுத்த பிறகுதான் எனக்கு நிம்மதியே பிறந்தது.

மைதிலிக்குத் தெரியாமல் நான் புரிந்த மகத்தான சாதனை இது. அதன் விளைவுதான், அரிசிக்காரருக்குச் சொல்லப்பட்ட தவணை. சொன்னதோடு நான் சும்மா இருந்துவிடவில்லை. ஆபீஸ் ஸ்டெனோ ராஜாமணியின் பாஸ் புத்தகத்தை எப்போதோ நான் பார்த்த ஞாபகம். அவனிடம், ''அப்பா ஆபத்பாந்தவா! அரிசி பாக்கி இம்மாதம் கொடுக்க முடியவில்லை. நூற்றைம்பது ரூபாய் கொடுத்து உதவினால் ரொம்பப் புண்ணியம். போனஸில் திருப்பித் தருவேன்'' என்று முகாரி பாடினேன்.

'பையன்' நல்ல 'மூடி'ல் இருந்தானோ என்னவோ! உடனே தருவதாக ஒப்புக் கொண்டான்.

சந்தோஷித்தேன், நான்.

ஆனால் பாவி, இன்றைக்குப் பார்த்து ஆபீசுக்கே வரவில்லை. (ஒருவேளை வரமாட்டோம் என்ற தைரியத்தில்தான் வாக்களித்தானோ!)

பாதிக் கயிற்றில் அறுந்த ஊஞ்சல் ... மாதிரி பரிதவித்தேன் நான்.

திடுதிப்பென்று போய் யாரிடம் பணம் கேட்க முடியும்? ஒன்று இரண்டா? நூற்று ஐம்பது ஆயிற்றே!

அரிசிக்காரரிடம் மேலும் ஓர் ஐந்து நாள் தவணை கேட்கலாம். அவர் மனம் இரங்கி ஒப்புக்கொண்டாலும் ஒப்புக் கொள்வார். ஆனால், அதில் இன்னொரு சங்கடம் இருந்தது. பழைய பாக்கி தீராத வரையில் புதுச் சரக்கு அனுப்ப மாட்டார், அவர். வீட்டிலோ...

'அரிசிக்காரர் இன்னும் இம்மாதத்துக்கு அரிசி அனுப்பவில்லையே ஏன்?' என்று மைதிலி வினா எழுப்பும்போதெல்லாம், 'பவர் கட் சமயம் இல்லையா! அதனால் நெல் அரைவையில் தாமதமாகியிருக்கும். அரைத்ததும் அனுப்பி வைப்பார்' என்று சமாளித்து வந்தேன், நான்.

எனவே, இன்னும் இரண்டொரு நாளில் அரிசி வராது போனால் — ஒன்று:, மைதிலிக்கு

என் வேஷம் வெட்ட வெளிச்சமாகிவிடும்; இரண்டாவது: வயிற்றுக்குப் 'பூவா' கிடைக்காது. ஆமாம்: பழைய அரிசி இருப்பு இன்றோ நாளையோ தீரப் போகிறது.

'இந்தப் பயங்கர நிலையை எப்படிச் சமாளிப்பது? கந்தா.... கடம்பா.... கருணைக் கடலே... நீதாண்டா அப்பனே இதற்கொரு முடிவு சொல்ல வேண்டும்!'

"காப்பி ஆறிப் போகிறது.''

மைதிலி என் நினைவைக் கலைத்தாள்.

அப்போதுதான் என்னைக் கவனித்தேன். அலுவல் முடிந்து வீடு திரும்பிய நான் இன்னும் ஆடைகளைக்கூட மாற்றிக் கொள்ளவில்லை. வேர்த்த முகத்தைக் கைக்குட்டையால் துடைத்த வண்ணம், காப்பி டம்ளரைக் கையில் எடுத்தேன்.

''மத்தியானம் ராஜாமணி வந்தார்.''

தொண்டையில் இறங்கிய காப்பி, அடைப்பதைப் போல் இருந்தது எனக்கு. ''இங்கேயா... வந்தானா... என்ன சொன்னான்?''

''நீங்கள் அவரிடம் நூற்றைம்பது ரூபாய் கைமாற்று கேட்டிருந்தீர்களாம்...''

''ஆ...ஆ...மா...ம்.''

''இந்தாருங்கள்.''

புத்தம் புது பத்து ரூபாய் நோட்டுக்கள். பதினைந்து நோட்டையும் எண்ணிப் பார்த்த எனக்கு உள்ளூற உதைப்பு. ''வேறு ஏதாவது சொன்னானா?''

''இல்லை.''

சும்மா சொல்லக் கூடாது. ராஜாமணி அசாத்திய புத்திசாலிதான். பெண்டுகளிடம் எதையும் உடைத்துச் சொல்லக் கூடாது என்ற பொன் மொழியை அட்சர சுத்தமாகப் புரிந்து கொண்டிருக்கிறான். இல்லாவிட்டால்... பணம் கொடுத்த கையோடு, 'அரிசிக்காகக் கேட்டிருந்தேன்' என்று விஷயத்தையும் அவன் சொல்லியிருந்தால்? இந்நேரம் பாம்புப் புற்றில் கை விட்டதுபோல் ஆகியிருக்குமே என் நிலைமை!

அது போகட்டும்!

நூற்றைம்பது ரூபாய் நான் கடன் வாங்க வேண்டிய அவசியம்?

மைதிலிக்குத் தக்க முகாந்திரம் வேண்டுமே!

அதொன்றும் எனக்குப் பிரமாதமில்லை.

அற்புதமான பொய் அரை நொடியில் தயாராயிற்று.

''அதாவது மைதிலி!.... எங்கள் ஆபீசில் துரை என்று ஒரு பியூன் இருக்கிறான். அவன் தங்கைக்கு வளை காப்பு வருகிறதாம். சடங்கை நிறைவேற்றப் பணம் வேண்டும் என்று கேட்டான். என்னிடம் ஏது பணம்? இல்லாவிட்டால் வேறு யாரிடமாவது வாங்கிக் கொடுங்கள் சார் என்று கெஞ்சினான். பாவமாக இருந்தது. அவனுக்காக ராஜாமணியிடம் கேட்டிருந்தேன். அதைத்தான் உன்னிடம் கொடுத்து விட்டுப் போயிருக்கிறான்.''

''ஓஹோ....''

''துரை இன்னிக்கு ராத்திரியே ஏதோ கடைச் சாமான்கள் வாங்க வேண்டும் என்றான். மலைக் கோவிலில்தான் அவன் வீடு. கறிகாய் வாங்கிக் கொண்டு அப்படியே இந்தப் பணத்தையும் அவனிடம் கொடுத்து விட்டு வருகிறேன்.''

வெற்றிப் புன்னகையுடன் வெளிக் கிளம்பினேன் நான்.

மறு நாள் அலுவலகத்தில் —

''உன் உதவிக்கு ஒரு கும்பிடு. உன் சமயோசிதத்துக்கு ஓராயிரம் கும்பிடு'' என்றேன்.

''கிண்டல் பண்ணாதே ராகவா!'' என்று அசட்டையாகச் சிரித்தான், ராஜாமணி. ''உனக்குத் தரவேண்டும் என்றுதான் பணம் சேகரித்து வைத்திருந்தேன். ஆனால் இடையே முந்தாநாள் அப்பாவுக்கு உடல்நிலை சரியில்லை. டாக்ஸியில் ஏற்றி நர்சிங் ஹோமுக்குக் கொண்டு போய்... டாக்டருக்கும் மருந்துக்குமாக உனக்கு வைத்திருந்த பணம் முழுதும் அதில் காலியாகி விட்டது. இந்த விஷயம் தெரிந்தால் நீ வேறு எங்கேயாவது பணத்துக்கு முயற்சி செய்யலாம் இல்லையா? ஆகவேதான் உன் வீட்டுக்கு வந்து மனைவியிடம் சொல்லிவிட்டுப் போனேன்.''

''அப்படியானால் அந்தப் பணம் நீ தந்தது இல்லையா?''

''என்னடா உளறுகிறாய்?''

இரண்டு பேருமே விழி பிதுங்கினோம்.

வீட்டுக்குள் நுழைந்தேன்.

மைதிலியிடம் கேட்க எனக்குத் தைரியம் இல்லை. அதை உணர்ந்தவளாகத்தானோ என்னவோ, ''ராஜாமணி இன்று ஆபீசுக்கு வந்தாரா?'' என்று அவளே கேட்டுவிட்டாள்.

கையும் காலும் என்னை அறியாமல் நடுங்க ஆரம்பித்தன.

''வந்தானே... அரிசிப் பணம்... நூற்றைம்பது ரூபாய்... சொன்னான்... ராஜாமணியிடம்....நீ எப்படி?'' — இதற்கு மேல் உளற முடியவில்லை என்னால்.

''ராஜாமணி வந்து தகவல் சொன்னதும் எல்லாவற்றையும் நானே ஊகித்துக்கொண்டேன். உடனே ஸ்டேட்டைக் கழற்றிப் பாங்கில் வைத்துவிட்டுப் பணம் வாங்கி வைத்தேன்.''

''அப்படியா! மைதிலி, என்னை...''

''மன்னிக்கத்தான் வேண்டும். ஆனால் அது நீங்கள் செய்திருக்கும் தப்புக்காக இல்லை.''

''என்ன சொல்கிறாய்?''


மைதிலி தொடர்ந்தாள். ''கொடுப்பதும், கொள்வதும் நிறைந்த கருணையம் போன்றது குடும்பம். நான் 'இதைப் புரிந்து கொண்டது போலவே நீங்களும் என்னைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். தவறிவிட்டீர்களே! அந்தக் குற்றத்துக்குத்தான் என் மன்னிப்பு. இன்னொன்றும் சொல்கிறேன். நேற்று வந்த ஆரியபட்டாவைத் தெரிந்து கொள்வதை விட அருகில் இருக்கும் மனைவியின் குணம்சத்தைத் தெரிந்துகொள்வதுதான் முக்கியம். அதுதான் பெருமையும் கூட.''


''மைதிலி...!'' தழுதழுத்தேன் நான்.

''காப்பியைக் குடியுங்கள்'' என்றாள் அவள் — அமைதி தவழும் புன்னகையுடன்.

✖✖✖✖✖✖✖✖✖✖✖✖✖✖✖✖✖✖✖✖✖✖✖✖✖✖✖✖✖✖✖✖✖✖✖✖✖✖

பால்காரர் ஓலம்: பசு வதைக்குத் தடை விதிக்கணும் என்று சொல்றீங்களே,
இந்தப் பசு உதைக்கு ஒரு தடை விதிக்கக் கூடாதா? —கோ.ரெ.




இந்த மர்ம நாவலை நீங்கள் படித்து வரும்போதே ரூபாய் 500/= பரிசு பெறும்
வாய்ப்பையும் அடைகிறீர்கள்
கதை முடிவதற்கு இன்னும் நாலு அத்தியாயங்களே பாக்கி இருக்கும்போது அடுத்த பத்து நாட்களுக்குள் கதையின் முடிவை ஊகித்துச் சொல்லுமாறு நேயர்களைக் கேட்போம். ரேகா சந்திரநாத் எம்மிடம் எழுதித் தந்திருக்கும் முடிவினை ஊகித்து எழுதுகிறவருக்கு ரூ. 500 பரிசு வழங்கப்படும். ரேகா சந்திரநாத் போலவே அதே நடையைக் கையாண்டு எழுதத் தேவையில்லை. கதையின் முடிவு இன்னது என்று ஊகித்துச் சுருக்கமாய்க் கூறினால் போதும்.
ஒருவருக்கு மேல் சரியான விடை எழுதியிருந்தால் பரிசுத் தொகை பகிர்ந்து அளிக்கப்படும். யார் கண்டது: முழுப் பரிசையும் நீங்களே கூடத் தட்டிக் கொண்டு போகலாம் !
ரேகா சந்திரநாத்
எழுதும்
சுவரில் இருவிழிகள்
திரில் தொடர்கதை
கல்கி
ஆகஸ்டு 3
சிறப்பிதழில் ஆரம்பம்

விளையாட்டாக...

'நாளை மாலைக்குள் ஐயாயிரம் ரூபாயைத் தபால் நிலையத்துக்கு அருகில் உள்ள குப்பைத் தொட்டியில் போட்டுவிட வேண்டும். இல்லையேல் உன் உயிர் உனக்கு இல்லை என்பதை அறி.'

'' என்ன, எழுதினாயா ? இல்லை, இல்லை! டைப் அடித்தாயா?—நிஷா! அவன் சரியாக அடித்திருக்கிறானா, பார் ! தொடை நடுங்கி எங்கேயாவது தப்புந் தப்பாக அடித்து வைத்திருக்கப் போகிறான்!'' .

'' டேய், வேண்டாமடா இந்த விளையாட்டு! விளையாட்டு வினையாகும்னு சொல்லுவாங்கடா! நச்சரவுடன் விளையாடுவதாக முடிந்தால், நமக்கு ஆபத்தடா!'' — அஜயன் கெஞ்சினான்.

விக்கிரமன் எதையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. ''உன்னை நான் யோசனை கேட்கவில்லை. சொன்னதைச் செய்துவிட்டாயோ, இல்லையோ ? பாக்கியை நான் கவனிக்கக்கிறேன். நீ பேசாமல் இரு!'' என்று அடக்கினான்.

''எல்லாம் சரி. ஆனால் ஒரு பூஜ்யம்தான் அதிகமாக அடித்துவிட்டாள் !'' என்றாள் நிஷா.

''பலே, பலே! இந்தப் பயந்தாங்கொள்ளிக்குக்கூடத் துணிச்சல் இருக்கே. அந்தக் கஞ்சப் பயல் ஜுவெல்லரிடம் ஐம்பதினாயிரம் கறக்கிறதுதான் சரி !''

கல்லூரி மாணவர்களான மூவரும் சேர்ந்து விளையாடிய விளையாட்டு மறு நாள் மாலை கைமேல் பலன் தந்தது. ஆமாம், தபாலாபீஸ் குப்பைத் தொட்டியில் புத்தம் புதிய ஐம்பதினாயிரம் ரூபாய் நோட்டுக்கள் கிடந்தன.

''இப்போ என்னடா சொல்றே ?''

''என்னத்தைச் சொல்றது ? விளையாட்டு வினையாகாமல் இருக்கணுமென்னு கவலைப் படறேன்! — அதனாலே பேசாமல் இருப்பீக்

சினிமாக் கதை-1



கொடுத்து விடு. இல்லே, நீயே அந்தப் பணம் பூராவையும் எடுத்துக்கோ !''

அதெப்படி? உனக்குப் பாதி, எனக்குப் பாதிதான் நியாயம். அந்தப் பாதியிலே உன் வாழ்க்கைத் துணையாக வரப் போகிற நிஷாவுக்குப் பங்கு உண்டு. என் பாதியிலே என் ஷீரீனுக்கு !''

''யார்டா அது ஷீரீன்? இதுவரை நீ சொல்லவே இல்லையே!''

''உனக்கு நிஷா எப்படியோ, அப்படி எனக்கு ஷீரீன்! புரிந்ததா?''

மறு நாள் காலை செய்தித் தாள்களில் அந்தப் பயங்கரச் செய்தி வெளியாகியிருந்தது: ''ஜானகிதாஸ் ஜுவெல்லர் படுகொலை செய்யப்பட்டார் ! அவரது கடையிலிருந்து விலை உயர்ந்த மாலை ஒன்று களவு போயிருக்கிறது. முதல் நாள் ஐம்பதினாயிரம் ரூபாய் தரும்படியாக மிரட்டல் கடிதம் ஒன்றும் வந்திருந்தது. போலீசார் புலன் விசாரித்து வருகின்றனர் !''

அதைப் படித்த அஜயனுக்கு ஸப்தநாடியும் ஒடுங்கிவிட்டது. போலீசார் எப்படியும் தங்களை வலை வீசிப் பிடித்துவிடுவார்கள், கொலைக் குற்றமே சாத்திவிடுவார்கள் என்று நிர்மானித்துவிட்டான். ''டேய், விக்ரம்! உன் பேச்சைக் கேட்டுக் கெட்டுப் போனேனடா!'' என்று அழாத குறையாகக் கூறினான்.

''டேய், பித்துக்குளி! போலீஸ் சரியான தடயம் இல்லாமல் எப்படியடா பிடிக்கும் ? முன் யோசனையுடன் கையெழுத்தில் எழுதாமல், டைப் அடிக்கச் சொன்னேனே, என் புத்தியை மெச்சடா !''

'' எப்படி மெச்சறது ? இன்னின்ன டைப்ரைட்டரின் எழுத்து இப்படி இப்படி இருக்கும்னு போலீசுக்குத் தெரியாதாக்கும்! எப்படியும் கண்டு பிடிக்க வில்லையென்றால் அது ஒரு போலீசாடா ! எனக்குத் 'திக், திக்' என்கிறது!''

அவனுடைய 'திக் திக்' ஒரு நாள் மெய்யாகவே ஆகிவிட்டது. ஜானகிதாஸின் மர்மக் கொலை குறித்துப் போலீசார் இவ்விருவரையும் தேடுகின்றனர் என்ற குறிப்போடு, அஜயன் — நிஷாவின் படம் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது.

''ஏன்டா, பழி! இப்போ என்னடா சொல்றே ? என்னைக் கெடுத்துக் காட்டிக் கொடுத்துவிட்டு நீ ஷீரீனுடன் குஷியாக இருக்கப் போறே! அப்படித்தானே?'' என்று எரிந்து விழுந்தான் அஜயன்.

''டேய்! இந்த விக்கிரமனை மட்டும் அப்படி நினைக்காதேடா ! என் உயிரைக் கொடுத்தாவது உண்மைக் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க முயல்வேனடா! உனக்கு ஒரு தீங்கும் நேராமல் பார்த்துக் கொள்வது என் பொறுப்பு ! டைப்ரைட்டருக்கு மோட்சம் கொடுத்து விடுவோம். அது இருந்த இடம் தெரியாமல் புல் முளைக்க வைத்துவிட்டால், போலீசுக்கு என்ன தடயம் கிடைத்து விடுமாம் ?''

''நிஷா ! என்ன சொல்றே நீ! என்ன சொன்னாலும் விக்கிரமன் கெட்டிக்காரன் தானே ? எதையும் 'லைட்'டாக எடுத்துக் கொண்டு விடுகிறான். நல்ல விளையாட்டுப் பிள்ளை !''

''அவருக்கு என்ன சுலபமாகச் சொல்லி விட்டுப் போய்விட்டார்! அங்கு ஷீரினோடு உல்லாசமாகச் சல்லாபித்துக் கொண்டிருப்பார் ! இங்கே நமக்கு வயத்திலே புளியைக் கரைக்கிறது. நொடிக்கு நொடி பயந்து செத்துக் கொண்டிருக்கோம் !'' நிஷாவின் சொற்களில் அச்சமும் ஆதங்கமும் பிணைந்து ஒலித்தன.

''அதை விடு. ஒரு வேடிக்கையைக் கேளு! நம் படத்தைப் பார்த்துவிட்டு எங்கம்மா எங்க அப்பாகிட்டே என்ன சொன்னாள், தெரியுமா ? 'என்ன அழகான ஜோடி ! பெண் எத்தனை நன்றாக இருக்கிறாள்! நம் மகன் நமக்கு வேலை வைக்காமல் பெண்டாட்டி தேடிக் கொண்டுவிட்டான். சீக்கிரமாகக் கல்யாணத்தைப் பண்ணி வையுங்க. வீட்டுக்கு மருமகளை அழைச்சுக்கிட்டு வரணும்னு எனக்கு ஆசையாயிருக்கு!' என்றாள். அப்பா அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு, 'அடி, படிக்கத் தெரியாத மண்டு! தனக்குப் பெண்டாட்டியா தேடிண்டிருக்கான் ? இவன் படம் எதுக்காக வந்திருக்குன்னு தெரியுமா, உனக்கு?' என்றார். 'உங்களுக்கு எதைப் பார்த்தாலும் குத்தமாகத்தான் தெரியும். குழந்தைகள் காதலிச்சுக் கல்யாணம் செய்து கொண்டால் என்னவாம்? அந்தக்காலத்திலே நீங்களும் நானும் இப்படிக் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கலேயென்னு உங்களுக்குப் பொறாமை!' என்றாள் அம்மா.

'ஆமாம், பொறாமை! அப்படிக் காதலிச்சுக் கல்யாணம் செய்து கொள்ளுகிற வசதி

கல்லூரி மாணவர்களின் அட்டகாசத்துடன் விளையாட்டாகத் தொடங்கும் ''கேம் கேம் மே'' என்ற இந்த இந்திப் படத்தின் நகைச்சுவையைக் குற்றத்துறை விழுங்கி விடுகிறது. அதேபோலக் கதாநாயகனாக வரும் ரிஷிகபூரை உபகதாநாயகனாக வரும் ராகேஷ் ரோஷன் மேவி விடுகிறார். அவரது நடிப்பும் முதன் முறையாக நன்றாக அமைந்திருக்கிறது என்று சொல்லக்கூடிய அளவுக்கு உயர்ந்திருக்கிறது.

இஃப்தெகாருக்கும் போலீஸ்கார நடிப்பு கைவந்த நடிப்பு. அதைப் பயன்படுத்திக் கொண்டு அவரைக் கருநாகம் என்னும் வில்லனாகச் சித்திரித்துக் காட்டியிருப்பது மட்டுமே புதிய முறை. இந்தப் புதுமைப் பிரமை மேலோங்கி அவருக்குப் பெருமை தருகிறது.

குறைந்த பாகத்திலும் நிறைந்து விளங்கும் நடிகை அருணா ஈராணி, பேச்சுக் குறைந்த போலீஸ்காரர் சத்யேன் கப்பு இருவரும் கூட உயிர் குடிக்கும் இந்தக் கதைக்கு உயிரூட்ட முயல்கிறார்கள்!





டைரக்டர்: கதாநாயகியை அலாக்காகத் தூக்கணும்; இருபது அடி ஆழக் கிணத்திலே குதிக்கணும்: இந்த ரெண்டு சீனிலே எதுக்கு உங்களுக்கு 'டூப்' போடலாம்? சொல்லுங்க.

ஹீரோ நடிகர்: கதாநாயகியைத் தூக்கற சீனுக்கு டூப் போடுங்க. கிணத்துலே நானே குதிக்கிறேன்!



எனக்குக் கிடைத்திருந்தால் போயும் போயும் உன்னையா பார்த்துக் கல்யாணம் செய்து கொள்வேன்?'

'சீ! போறதே உங்கள் புத்தி! இப்படியெல்லாம் அசட்டுப் பிசட்டுன்னு பேசாதீங்க!' அம்மா மோவாயைத் தோள் பட்டையில் இடித்துக் கொண்ட அழகு இருக்கே...."

"அந்த அழகு இருக்கட்டும். ஃபோனிலே யாரு, பாருங்க!"

"என்ன, விக்கிரமனைக் கொலை செய்து விட்டார்களா? ஏன், ஏன்?" நிஷா கேட்டாள்.

"உண்மைக் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கப் போய் இந்தக் கதி! நமக்கு இந்த விளையாட்டு வேண்டாமடா என்று அன்றைக்கே சொன்னேன்! கேட்டானா? இப்போ உயிருக்கே அல்லவா உலை வைச்சுட்டாங்க! 'உயிரைக் கொடுத்தாவது உண்மைக் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க முயல்வேனடா' என்று சொன்னவன் நிசமாகவே உயிரைக் கொடுத்துவிட்டானே!.. ஐயோ, அந்த டைப்ரைட்டர்....!"

"பாவம், வீரேன்!" பெண் உள்ளம் அங்கலாய்த்தது. "இனி நாம்தான் அந்த டைப்ரைட்டரை மறைச்சாகணும். ஆனால் எந்தப் பக்கம் பார்த்தாலும் போலீஸ் நம்மையே சுற்றி வட்டமிடறதாகத் தோணுகிறது. அதுவும் அந்த மீசைக்கார முழியன் இருக்கிறானே, அவன் விழியைப் பார்த்தால் உயிர் போய் உயிர் வருகிறது!"

"ஊரில் தலையைக் கொடுத்தபின் உலக்கைக்குப் பயந்தால் ஆகுமா? நாம் ஒரு தப்புத் தண்டாச் செய்யலே. விளையாட்டாகப் பணம் கேட்டு எழுதி மிரட்டியதைத் தவிர! அந்தப் பணத்தையும் சல்லி பாக்கியில்லாமல் தலையைச் சுத்திப் போலீஸ் ஸ்டேஷனிலேயே எறிந்துவிட்டேன்! அந்த டைப்ரைட்டருக்கும் ஒரு முடிவு கட்டிவிட்டால், அப்புறம் விளையாட்டுக்குக்கூட இந்த மாதிரிக் காரியங்களில் இறங்கமாட்டேன்!" என்றான் அஜயன்.

"டைப்ரைட்டரை மறைக்க நாம் போன பொழுது அந்தப் போலீஸ்காரர் தூரத்திலேயே அப்போ, நாம் மரத்தில் ஏறி ஒளிந்து கொண்டோமே! அப்போ வந்த பாம்பை நினைத்தால்..... பாம்பைக் கண்டால் "படையும் நடுங்கும் என்பாங்க! ஆனால் ஒரு கையில் டைப்ரைட்டர் பெட்டியைப் பிடிச்சுகிட்டு, இன்னொரு கையால் என் வாயைப் பொத்திக்கிட்டு நீங்களும்தான் எப்படிச் சமாளிச்சீங்க!"

"அதுதான் ஆம்பிளைகளுக்கு அடையாளம்."

"எது? பெண்ணின் வாயைப் பொத்துறதா?"

"இல்லே! பாம்பு நம் மேலே ஊர்ந்து போச்சே! அப்போ நான் கொஞ்சமாவது பயந்தேனா?"

"அது போகட்டும், வீரேன் இன்றைக்கு ஆறு மணிக்கு உங்களை வரச் சொல்லியிருக்கிறானே, எதற்கு?"


"குற்றவாளிகளைப் பற்றி அவனுக்கு ஏதோ தடயம் கிடைத்திருக்கிறதாம். உண்மைக்

கண்மணிப் பாப்பாவுக்கு மிகச் சிறந்ததென
நீங்கள் கண்டுகொண்ட பவுடர்...



உங்களுக்கும் மிகச் சிறந்ததே





ஜான்ஸன்ஸ் பேபி பவுடர், உங்கள் அருமையறிந்து உருவாக்கிய அருமையான செல்வம். வேறெந்தப் பவுடரிலும் நீங்கள் அனுபவித்தறியாத சொகுசான இன்பம். மலர் மாரி பொழிந்து உடலாரத் தழுவும் மென்மை—உலகில் உன்னதமான இயற்கை நறுமணமேந்தி வரும் மென்மை.

இளந்தளிர் மேனிக்கென்றே ஈடிலாத் தூய்மையும் மென்மையுமே உருவான படைப்பு: ஜான்ஸன்ஸ்* பேபி பவுடர். அதனால்தான் 75 ஆண்டுகளாகப் பாப்பா உலகின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்குகிறது. அதனால் தான் உங்களுக்கும் இதுவே உகந்த பவுடர்.

ஜான்ஸன்ஸ்* பேபி பவுடர்

அருமைப் பாப்பாக்களின் ஆசை இதுவே:
நீங்களும் உபயோகியுங்கள் ஜான்ஸன்ஸ் பேபி பவுடர்.

ஹிப்பி!

கற்காலத்தவர் ஹிப்பி,
தற்காலத்தவர் ஹிப்பி !

தொங்கும் முடிகள்,
தொளதொள உடைகள் ;
சிக்கும் எனினும்
சிறு நடைகள் !

பக்கம் நேராய்ப்
பார்க்கும் சேரா ;
தக்கிப் பாம்போல்
தலைக்கிரு பாரா !

குறுகுறு தாடி ;
கோணல் பாடி ;
பசிவேண் டாத
பட்டுக்கூத் தாடி !

டைட்டும் பாண்டு,
டாம்பீக பூட்ஸ் ;
குட்டும் கலருமாய்
ஒயில்டிரஸ் ஜீன்ஸ் !

பட்டைவார் பெல்ட்டு,
படியாத ரோப்பு ;
எட்டெட்டிக் கல்லாய்
என்னென்ன மேக்கப்பு

வேஷங்கள் பலவாய்
வேடிக்கைக் கோறுவாய் ;
பேஷன்கள நிலவப்
பெண்கள்ஆண் உலவ !

பார்க்கு பீச்சு
பட்டணம் எல்லாம் ;
ஆக்கு பைடாய்
ஆளுக்கொரு சைடாய் !

மேடைக்கு வராத
மெல்லான காமெடி ;
ஆடிப் பாட
அவரவர் தாம்ரெடி !

— தமிழ்முகன்



குற்றவாளிகளைக் காட்டிக் கொடுத்து நாம் தப்பலாம் என்கிறான்!''

''விளையாட்டாக ஒரு காரியம் செய்யப் போய், அது உங்கள் நண்பனின் உயிரையே குடித்துவிட்டது! அப்படியும் நாம் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு தான் வளைய வரவேண்டியிருக்கிறது. இவ்வளவு துயரத்திலும் ஷெரீன் நமக்கு உதவ முன் வருகிறானே, அவன் நல்ல மனத்தை என்ன சொல்வது ?''

''அவன் துயரம் தீர நாம் பிரார்த்திப்போம் !''

''ஷெரீன்! எங்கள் பிரார்த்தனை இப்படியா பலிக்க வேண்டும்? எந்தப் பாவி உன்னை இப்படிக் குத்திக் கொன்றான்? அவன் நன்று இருப்பானா ?'' புலம்பித் தள்ளினான் அஜயன்.

''டேய்! என்ன விளையாடறியா ? இது என்ன நாடகம்? குத்திக் கொல்வதையும் கொன்றுவிட்டு யார் கண்ணில் மண்ணைத் தூவப் பார்க்கிறாய்? நீ செய்த கொலை ஒன்றா, இரண்டா ? — மூன்று! ஜானகிதாஸ், விக்ரம், ஷெரீன்! அந்த மாலையை எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய்? உண்மையைச் சொல்லி விடு !''

எதிரே நிற்கும் போலீஸ் அதிகாரியைப் பார்த்த அஜயன் ஆற்றாமை தீர அழுது விட்டான். ''நான் ஒரு பாவமும் அறியேன், சார் ! அந்தக் கடிதம் ஒன்று டைப் செய்ததைத் தவிர ! அதற்காக என் உயிர் நண்பனை இழந்தேன்; ஷெரீனோ காதலனை இழந்ததோடு தன் உயிரையுமே இழந்தான்!''

''இந்த வீண் பேச்சு எதற்கு? நட, காவல் நிலையத்துக்கு!''

''என் சார், இந்தப் பாழடைந்த கோயிலா, போலீஸ் நிலையம்? இங்கு எதற்கு சார் அழைத்து வந்திருக்கிறீர்கள்?''

'' உன் மனத்தை மாற்றிக் குற்றத்தை ஒப்புக் கொள்ள வைக்க. இல்லையென்றால் உன் உயிரைக் குடிக்க!''

'' ஒரு நிரபராதியின் உயிரைக் குடித்து உங்களுக்கு என்ன சார் வரப் போகிறது?''

''அது இந்தக் கருநாகத்துக்கு மட்டும்தான் தெரியும் !''

''ஆம், அஜய்! இந்தக் கருநாகத்துக்கு மட்டும்தான் தெரியும். மூன்று பேருடைய உயிரைக் குடித்த கருநாகம் இதுதான் என்பது எனக்குத் தெரியும் என்பது இதற்குத் தெரியாது!''

குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தால் அஜயனை நிழலாகத் தொடர்ந்த கொடுவாள் மீசை போலீஸ் அதிகாரி நின்று கொண்டிருந்தார். அவரைக் கண்டதும் போலிப் போலீஸ் உருவில் இருந்த கருநாகம் வாலை ஆட்டியது. வகையாக மாட்டிக் கொண்ட கருநாகத்தின் வாலை ஒட்ட அறுக்க அவருக்கா தெரியாது ?

இனி இதுபோன்ற விளையாட்டுக்களில் இறங்குவதில்லை என்ற முடிவுக்கு வந்த இரு இளம் உள்ளங்கள் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டன. அப்பொழுது அவற்றின் விழிகள் விளையாடிய விளையாட்டை என்ன முயன்றும் அவற்றால் தடுக்க முடியவில்லை.

— அக்ஷயம்

ஆடும் சுதந்திரமோ?



நெருக்கடி நிலை ஒன்றும் கலைத்துறைக்குக் இடையாது! பரத நாட்டியம் பயின்று அரங்கேறும் சுதந்திரம் பாரதப் புண்ணிய பூமியில் ஏராளமாய் இருக்கிறது. அடாடா, எப்பேர்ப்பட்ட பாக்கியசாலிகள் நாம்!

ஆடிட்டரின் மகள் அரங்கேறினாள் என்றால் கணக்குப் பிசகாது என்று நம்பலாம். நாட்டிய கலாலயா மாணவி குமாரி மீனாட்சி நம்பிக்கை மோசம் பண்ணவில்லை.

பெரி தியாகராஜ் அண்டு கம்பெனியைச் சேர்ந்த திரு ஒய். சத்தியமூர்த்தியின் மகள் மீனாட்சி.

கலாக்ஷேத்ரா டைரக்டர் சங்கரமேனன் தலைமை வகித்தார். நீதிபதி கைலாசம் வருகை தந்து சிறப்பித்தார். கலைப் பிரதிநிதியும் நீதிப் பிரதிநிதியும் அருகருகே இருந்து வாழ்த்தியாயிற்று. மீனாட்சி மிளிரக் கேட்பானேன்!

*



திருமதி இந்திரா ஆட்டி வைத்தால் ஆட வேண்டியதுதானே!

'இது ஏதடா வம்பு இந்தச் செய்தி சென்சார் ஆயிற்றோ இல்லையோ?' என்று கவலைப் படத் தொடங்காதீர்கள்! இது திருமதி இந்திரா ராஜன்! நாட்டிய ஆசிரியை! இவரது மாணவி குமாரி ஜெயதேவி உடம்பை அதிகமாக அலட்டிக் கொள்ளவில்லை. ஆனாலும் ரசிகர்களைக் கவரும் நுணுக்கங்களைத் தெரிந்து வைத்திருக்கிறார். எடுத்துக்காட்டு, அன்று, அவர் அபிநயித்த 'கிருஷ்ணா நீ பேகனே', 'பதறி வருகுது' ஆகியன.

*



காவேரி நீர்ப் பிரச்னை எப்படியோ; காவேரி கோபாலன் விஷயத்தில் பிரச்னையே இல்லை. புஷ்பாஞ்சலி என்ற முதல் நடனத்திலேயே ரசிகர்களைக் கவர்ந்து விட்டார். அப்புறம் எல்லாவற்றுக்குமே 'ஜே'தான் ....—கண்ணை மூடிக் கொண்டு அல்ல! திரு எம். டி. வெங்கடேஷ் அவர்களின் மாணவி குமாரி காவேரி.

□

படங்கள் : மேலிருந்து கீழாக

- குமாரி ஜெயதேவி
- குமாரி மீனாட்சி
- குமாரி காவேரி

51. இசைக்கு இசைந்த நடை..

இசையினை அமுதாய் உண்டால்
இதயத்தில் இசை உண்டாகும்
இதயத்தில் இசை உண்டானால்
எழுத்திலும் இசை உண்டாகும்



பொன்னியின் புதல்வர்

சுந்தா

செம்மங்குடி சீனிவாசய்யரின் புகழ் ஆரோகணத்தை, தொடக்க காலம் முதல் கவனித்தும், பாராட்டியும் வந்தவர் கல்கி. எத்தனையோ தடவை அவருடைய சங்கீதக் கச்சேரிகளைப் பற்றி அவர் விமரிசனம் எழுதினார்; ஆரம்ப காலக் கச்சேரிகளில், தாம் கண்ட குணங்களைப் புகழ்ந்து சொன்னதோடு, குற்றம் குறைகளையும் கூசாமல் எடுத்துச் சொன்னார். சாரீர இனிமை, வித்துவத் திறமை, உருப்படிகளைத் தேர்ந்தெடுக்கும் ஆற்றல் ஆகிய நல்ல அம்சங்களைக் கொண்டிருந்தும், சாகித்தியங்களை மட்டும் பொருளுணர்ந்து உணர்ச்சியுடன் அவர் பாடுவதில்லை என்று பரிகாசமாகவே சுட்டிக்காட்டினார். பின்னர் அவருடைய கலை மாசற்ற மாணிக்கமாய், நிலையாக இசை உலகில் ஜொலித்ததைக் கண்டு, கலப்பற்ற புகழ் மொழிகளை அவர்மீது பொழியலானார்.

அச்சிலருக்கு ஜனாதிபதியின் விருது கிடைத்த சமயத்தில், ''இசைக் கலையின் தவப் புதல்வர்'' என மகுடம் சூட்டிப் பாராட்டுரை ஒன்றைக் கல்கி எழுதினார். அதை அவர் எழுதுகையில், முன்பு தாம் கர்நாடகமாய்க் கலை அரங்குகளில் உலவத் தொடங்கிய காலத்தை இயல்பாகவே நினைத்துக் கொண்டார்:

... சோழ நாட்டில் பல நூறு ஆண்டுகளாக வும் பரம்பரையாகவும் வளர்ந்து வந்த கர்நாடக சங்கீதத்துக்கு, இன்று செம்மங்குடி சீனிவாசய்யர் தலைசிறந்த வாரிசு உரிமை பெற்று விளங்குகிறார்.... முன்னோர்கள் பழமையாகக் கையாண்டு போஷித்த கன ராகங்களை செம்மங்குடி சீனிவாசய்யர் ஆலாபனம் செய்யத் தொடங்கி விட்டாரானால், ஆயிரம் பதினாயிரம் ஜனங்களுக்கு மத்தியில் இருந்த போதிலும், தாமும் நாதமும் தம்புராவுமாகத் தனித்த ஏகாந்த நிலைக்குப் போய்விடுகிறார். வானத்தில் பறந்து வட்டமிடுகிறார்; வையத்தில இறங்கியும் சஞ்சரிக்கிறார்....

முற் பிறப்பில் இறைவனுக்குக் குடம் குடமாகத் தேன் அபிஷேகம் செய்தவர்கள் இப்பிறப்பில் இனிய சாரீர சம்பத்தை அடைகிறார்கள் என்று பெரியோர்கள் சொல்வதுண்டு. சங்கீத கலாநிதி செம்மங்குடி சீனிவாசய்யர் பூர்வ ஜன்மத்தில் குடம் குடமாகத் தேனபிஷேகம் செய்திருப்பார் என்று சொல்லமுடியாது. இரண்டு இரண்டு குடமாக இரண்டு கையிலும் எடுத்துக் கொண்டு போய் இறைவனுடைய திருமேனியில் தேனைக் கொட்டி அபிஷேகம் செய்திருப்பார் என்று நம்பவேண்டியிருக்கிறது. ஏனெனில், இயற்கையிலேயே இரட்டை நாதம் உள்ள சாரீர சம்பத்தையல்லவா செம்மங்குடி சீனிவாசய்யரிடம் நாம் காண்கிறோம்....

அந்தச் சம்பத்தைப் பெறுவதற்கு இவர் முற்பிறப்பில் என்ன தவம் செய்தாரோ? அல்லது இசைக் கலை தேவிதான் என்ன தவம் செய்து இவரைப் பெற்றாரோ?....

இத்தகைய எண்ணங்கள் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னால், செம்மங்குடி சீனிவாசய்யரின் கச்சேரியை முதன் முதலாகக் கேட்டபோது என் மனத்தில் எழுந்தன. அந்தக் கச்சேரியில் அவர் அன்று ஆலாபனம் செய்த கரகரப்ரியா, ஷண்முகப்ரியா, நாட்ட

○ "ஆம், ஐயா, ஆமாம்! ஸர் ஸி. வி. ராமன் ஒரு முதல்தர, அற்புதமான சங்கீதக் கச்சேரிதான் செய்தார்!"



குறிஞ்சி ராகங்களும், 'பக்கல நிலபடி', 'மரி வேர', 'மானஸ ஸஞ்சரரே' கீர்த்தனங்களும் இன்னும் என் ஞாபகத்தில் இருக்கின்றன.

(கல்கி இதழ் 1-3-53)

அத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் கல்கியின் ஞாபகத்தில் நின்ற அந்தக் கச்சேரி, 1933ல் நடந்தது.

அதைக் கேட்டுவிட்டு அவர் எழுதிய விமரிசனம் இப்படித் தொடங்கிற்று :

நான் தஞ்சை ஜில்லாக்காரன். அந்த விஷயத்தில் கொஞ்சம் பெருமை உண்டு...

ஒரு காலத்தில் சங்கீதக் கலையில் தஞ்சாவூர் ஜில்லா முதன்மை ஸ்தானம் வகித்திருந்த தென்பது அனைவரும் அறிந்த விஷயம்.

கர்நாடக சங்கீதத்துக்குப் புத்துயிர் அளித்த ஸ்ரீ தியாகராஜர் தஞ்சை ஜில்லாவில் வாழ்ந்தார். மகா வைத்தியநாதய்யரைப் போன்ற வேறொரு சங்கீத வித்வான் இது வரையில் தோன்றியதில்லை என்று எல்லோரும் ஒப்புக் கொள்கிறார்கள். தமிழ் நாட்டில் காலட்சேபக் கலைக்கு முதன் முதலாகப் பெருமை அளித்தவர் கிருஷ்ண பாகவதர். திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யரின் பிடிலைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

- "செம்மங்குடி பூர்வ ஜென்மத்தில் இரண்டு இரண்டு குடமாக இரண்டு கையிலும் எடுத்துக் கொண்டு போய் இறைவனுடைய திருமேனியில் தேனைக் கொட்டி அபிஷேகித்திருப்பார் என்று நம்ப வேண்டியிருக்கிறது."
- "....மேல் ஸ்தாயியில் வட்டமிட்டு நின்று, சங்கதிகளைப் பொழிந்து கடைசியில் பஞ்சமத்தைத் தொடும்போது யாருக்கும் புளகாங்கிதம் உண்டாகாமல் இருக்க முடியாது."
- மதுரமும் கம்பீரமும் பொருந்திய சாரீரம், அசாதாரண லய-ஞானம், அழுத்தமான கமகப் பிடிகள், தெளிவான சாஹித்ய உச்சரிப்பு இவை பட்டம்மாள் பாட்டில் விசேஷ அம்சங்கள்.

(மாலி கார்ட்டூன்கள்: நன்றி - ஆ. வி.)







இப்படி எல்லாம் பெருமை வாய்ந்த தஞ்சை ஜில்லா இப்போது சங்கீதத் துறையில் பெரிதும் பின்னடைந்திருப்பதைக் குறித்துச் சில சமயம் நான் வருத்தப்பட்டதுண்டு. ஆனால் சென்ற செப்டம்பர் 24ந் தேதி 5 மணியோடு இந்த வருத்தம் மறைந்துவிட்டது. (சௌந்தரிய மஹாலில்) செம்மங்குடி சீனிவாசய்யர் "பக்கல நிலபடி" என்னும் கீர்த்தனத்தில் பல்லவியும் அநுபல்லவியும் பாடினாரோ இல்லையோ, "சரி, சங்கீதத்தில் தஞ்சை ஜில்லா இன்னும் முன்னணியில் தான் இருக்கிறது" என்று தீர்மானித்துக் கொண்டேன்.

தமது ஜில்லாவின் பெருமை பற்றி இன்னோர் இடத்தில் —

தஞ்சாவூர் மாவட்டத்தினிடம் தரும் பைத் தூக்கித் தற்பெருமை அடித்துக்

கொள்ளும் இயல்பு இருக்கலாம். ஆனால் தஞ்சை ஜில்லாவின் கலை வளத்தைப் பற்றி மட்டும் அவர்கள் தற்பெருமை அடித்துக் கொள்கிறார்கள் என்றோ, மிகைப்படுத்திச் சொல்கிறார்கள் என்றோ குற்றம் சாட்ட முடியாது. மிகைப்படுத்திச் சொல்வதற்கு இடமே இல்லை. எவ்வளவு அதிகமாய்ப் புகழ்ந்தாலும் தற்பெருமை பேசினாலும், அவை உண்மைக்குச் சற்று குறைவாகத்தான் இருக்கும்.

(கல்கி இதழ் 3-5-53)

பழைமைப் பண்பாட்டில் வேர் கொண்டு வளர்ந்த கலைகளில் மட்டுமின்றி, நவீன விஞ்ஞானத் துறையிலும் சி. வி. ராமன் மூலம் தமது மாவட்டம் சிறப்புற்றது குறித்தும் கல்கிக்கு மட்டில்லாப் பெருமை. தஞ்சாவூர் கிராமம் ஒன்றில் பிறந்து வளர்ந்த அந்த விஞ்ஞானி, 1930ல் ஒளி சம்பந்தமான ''ராமன் விளைவு'' என்ற கண்டுபிடிப்புக்காக நோபெல் பரிசு பெற்றது முதல், அவரைக் காண வேண்டும் என்று கல்கி ஆசைப்பட்டுக் கொண்டிருந்தார். அந்த ஆசை, 1933 இறுதியில், சென்னை சங்கீத வித்வத் சபை மகாநாட்டை சி.வி.ராமன் தொடக்கி வைத்ததைப் பார்க்கச் சென்ற போது நிறைவேறியது. அவரைப் பார்த்ததால் உண்டான மகிழ்ச்சியுடன், அவர் இசைத் தேனைப் பருகியவர் என்பதை அவருடைய பேச்சிலிருந்து அறிந்ததால் அடைந்த பூரிப்பும் சேர்ந்து கொண்டது. விஞ்ஞான உண்மைகளை இசைத் தேனில் குழைத்தளித்த விருந்தாய் இருந்ததாம் அவர் பேச்சு :

'...ஸர் சி. வி. ராமன் எழுந்து நின்று பேசத் தொடங்கினார். அப்புறம் இதர விஷயம் எல்லாம் மறந்து போய்விட்டது. உலகத்தையே மறந்துவிட்டேன் என்று சொல்லலாம். வர்ணங்களிலும், கீதங்களிலும் உள்ளம் லயம் அடைந்தது.

ஆம், ஐயா, ஆமாம்! ஸர் சி. வி. ராமன் ஒரு முதல் தர, அற்புதமான சங்கீதக் கச்சேரி தான் செய்தார். சென்னையில் இந்தப் பத்து தினங்களிலும் நடைபெறும் சங்கீதப் பெரு விழாவில் ஸர் சி. வி. ராமனுடைய பிரசங்கத்தைவிடச் சிறந்த கச்சேரி ஒன்று நடைபெறக் கூடும் என்று நான் நினைக்கவில்லை. அந்தப் பிரசங்கத்திலே வர்ணங்களும் கீதங்களும் தவழ்ந்து விளையாடின. ''விரிபோணி'' முதலியன வர்ணங்கள் அல்ல — புஷ்பங்களின் வர்ணங்கள்; பட்டுப் பூச்சிகளின் வர்ணங்கள். அவ்வாறே, ''மந்தர தாருரே'' முதலியன கீதங்கள் அல்ல — சூரியோதயத்தில் புள்ளினம் பாடும் கீதங்கள்; யுத்த களத்திலே பீரங்கிகளும் துப்பாக்கிகளும் பாடும் கீதங்கள்; பிறகு நாதப் பிரம்மத்தின் ஆதியந்தமற்ற ஆனந்த கீதம். இவ்வளவையும் அவருடைய உபந்நியாசத்திலே பார்த்தோம்; கேட்டோம்.

பிரசங்கம் முடிந்ததும், ஸர் சி. வி. ராமன் நம்முடைய தமிழ் நாட்டில் (அதுவும்

தேக தத்துவும் சம்பந்தப்படாத காதல் இருக்க முடியாது என்று கூறும் கதைகள் இன்று எழுதப்படுகின்றன.

காதல் என்பது உடலுறவு மட்டுமே என்று கூடக் கதைகளில் கூறும் துணிவு இன்று ஏற்பட்டுள்ளது.

ஆழ்ந்த காதல் வயப்பட்ட அனுபவம் உள்ளவர்கள் மேற்படி கூற்று முற்றிலும் தவறு என அறிவார்கள். நீங்கள் தூய காதல் வயப்பட்டுத் திருமணம் புரிந்து கொண்டவரானால் அந்த அனுபவம் பற்றி கல்கியில் அரைப் பக்கத்துக்கு மேற்படாத அளவில் எழுதுங்கள். பிரசுரமாகும் கடிதங்களுக்குப் பரிசு உண்டு.

முடிவு தேதி ஜூலை 31. கடிதப் போக்குவரத்துக் கிடையாது. ஏற்கப்படாத கட்டுரைகளைத் திருப்பி அனுப்ப இயலாது. உறையின்மேல் 'காதல் என்றால்...' எனக் குறிப்பிடவும்.

ஆசிரியர், கல்கி, சென்னை-31.

காதல் என்றால்....





வண்ணத்துப் பூச்சி உங்கள் தனிப்பட்ட ஆர்டர்களை ஏற்றுக்கொள்கிறது!

கோ-ஆப்டெக்ஸ் முதன்முறையாக அறிமுகப்படுத்தும் இணையற்ற திட்டம்!

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைதோறும் கோ-ஆப்டெக்ஸ் கலைவல்லுநர் உங்கள் தனிப்பட்ட ஆர்டர்களை ஏற்றுக்கொண்டு, உங்கள் விருப்பத்திற்கேற்ற உங்கள் டிசைன் புடவைகளை குறிப்பிட்ட காலத்தில் உங்களுக்கு வழங்குவார்.

ஓர் அரிய சந்தர்ப்பம். இத்திட்டம் கீழ்க்கண்ட வண்ணத்துப் பூச்சியின் ஒரே சிறப்பு விற்பனை நிலையத்தில் மட்டுமே!

வானவில் சில்க் பேலஸ்
(ஆபட்ஸ்பரி அருகில், தேனாம்பேட்டை)
தொலைபேசி: 444236

கோ-ஆப்டெக்ஸ்

CO 3200.C



ARMS-HC-18-140 TAM

தஞ்சாவூரில்) பிறந்தவர் என்று ஞாபகம் வந்ததோ என்னவோ, வெளியில் போனவுடனே என்னுடைய உயரத்தை அளந்து கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தேன். அந்தப் பெருமையினால் ஓர் அங்குலமாவது நான் உயர்ந்திருக்க வேண்டும் என்று தோன்றிற்று.

(ஆ. வி. 31-12-33)

இயற்கையின் வர்ணங்களை இசை வண்ணங்களில் விஞ்ஞானி ஒருவர் கண்டு சொன்னதைப் பற்றி, இலக்கியக் கலைஞர் ஒருவர் கொடுத்துள்ள வர்ணனை இது. இதைத் தொடர்ந்து, இவ்விருவரும் செய்த இசை வர்ணனை ஒன்றைப் பார்ப்போம்.

ஒரு சமயம் எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் கச்சேரி ஒன்றைச் ஸி. வி. ராமன் கேட்டுவிட்டு, ''அவரே பாட்டாக உருகி நாதவெள்ளமாகப் பெருகிவிடுகிறார்'' என்று வர்ணித்தார். அந்த வர்ணனை அப்படியே கல்கியின் உள்மனத்தில் நினைவுப் புனலாகத் தேங்கி நின்றது. அந்த வர்ணனைக்கு உரியவரின் இரண்டு இசைத் தட்டுக்களைப் பின்னர் அவர் கேட்டபோது அந்த நினைவுப் புனல் எழுச்சியிலே பொங்கி ஓடிற்று :

ஸ்ரீமதி எம். எஸ்ஸின் 'நாரத* கான' இசைத் தட்டுக்களைக் கேட்ட போது, ஸர் ஸி. வி. ராமன் சொன்னது எனக்கு நினைவு வந்தது. முக்கியமாக, ''அக்னி என்று அறியாயோ'' என்னும் ராக மாலிகையில் நாதப் பிரவாகம் பொங்கிப் பொழிகின்றது. மலைச் சுனையிலிருந்து கிளம்பும் அருவி சில இடங்களில் மத யானையின் நடையில் கம்பீரமாய்ப் போகிறது ; சில இடங்களில் ஓடுவதே தெரியாமல் நிதானமாய்ப் போகின்றது ; திடீரென்று ஓரிடத்தில் ஆகாச கங்கையைப் போல் அதிவேகமாய்க் கொட்டுகின்றது ; கொட்டும்போது கோடி கோடி நீர்த் துளிகள் சூரிய கிரணங்களில் பளீர் பளீர் என்று ஒளி வீசுகின்றன. இந்த ராகமாலிகையில் ராகத்தின் கம்பீர நடை, நாதப்ரணவ மயமான கார்வை, சங்கதிகளின் கலகலப் பொழிவு— எல்லாவற்றையும் காண்கிறோம். மலை அருவியானது ஒரு முடுக்கு வரையில் வந்து திடீரென்று இன்னொரு பக்கம் திரும்பி வரும் காட்சி வெகு ஆனந்தமானது ; ஒரு ராகத்திலிருந்து இன்னொரு ராகத்துக்குத் திரும்பும் போது அந்த இன்பக் காட்சி நினைவு வருகிறது.

(கல்கி இதழ் 1-9-41)

இதிலே கல்கி, கான இன்பத்தைக் காட்சி இன்பமாக மாற்றித் தாமும் அனுபவித்து நம்மையும் அவ்விதமே அனுபவிக்கச் செய்திருக்கிறார். இந்த அனுபவத்தைச் சாத்தியமாக்கிய எம். எஸ்ஸின் குரலை, ஒரு சந்தர்ப்பத்தில் கல்கி, மோகன சக்தி வாய்ந்த குரல் என்றும், அந்த மோகனம் கந்தர்வர், வித்யாதரர்களுக்கு உரிய மோகனம் என்றும் வர்ணித்தார். அத்தகைய குரல், கவிஞர் ஒருவர் இயற்றிய கீர்த்தனம் ஒன்றை இசைக்கையில், எவ்விதக் காட்சிகளையும் ஒலி ஜாலங்களையும் மனத்திலே தோற்றுவிக்கிறது என்பதை, ஏற்றதொரு இசை நடையில் கல்கி வர்ணிப்பதைப் பார்ப்போம் : அத்துடன் ஒரு ரஸிகர் என்ற முறையில் சங்கீதக் கச்சேரியின் அம்சங்களை அவர் எப்படி வர்ணிப்பார் என்பதற்குச் சில வாக்கியங்களையும் பார்ப்போம்.


நீலக் கடற்கரையின் ஓரத்திலே, சோலை சூழ்ந்த பிரதேசத்திலே வாழ்வோர், அதிகாலையில் துயில் நீங்கி எழும்போது, கடல் அலைகளின் ஓங்கார ஒலி முழக்கத்தைக் கேட்பார்கள். பிறகு புள்ளினங்களின் மதுர கீதம் அவர்கள் செவியில் ஒலிக்க ஆரம்பிக்கும். முதலில், ஒவ்வொரு குரலாகக் கேட்ட பட்சிகளின் கானம், விரைவில் பலப் பல குரல்களிலிருந்து ஏககாலத்தில் திரண்டு எழும் அற்புத கோஷ்டி கானமாக மாறும். இந்தப் புள்ளினங்களின் கீதப் பிரவாகத்துக்குத் இலயமான சுருதி கொடுப்பது போலிருக்கும், 'வெள்ளலைக் கைகளைக்' கொட்டி முழக்கும் சமுத்திரத்தின் ஓசை. இதையெல்லாம் பல காலம் நன்கு கேட்டு அனுபவித்து ரஸித்த இசைக் கவி — ஸ்வாமி சுத்தானந்த பாரதியார் — ஒரு தமிழ்க் கீர்த்தனத்தில் பின்வருமாறு தமது ஆனந்தத்தை வெளியிடுகிறார் :

பலபல என்னுங்காலை
பாடும் புள்ளோசை போலும்
பாற்கடல் உள்ளம் விம்மி
ஆர்க்கும் கர்ஜனை போலும்.

பூர்வி கல்யாணி ராகத்தில் ''ஜங்கார சுருதி செய்குவாய்'' என்று ஆரம்பிக்கும் கீர்த்தனத்தில், சரணத்தில் முதல் இரண்டு அடிகள் மேற்கண்டவை. இந்த வரிகளை வைத்துக் கொண்டு ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி.... கோகலே மண்டபத்தில் நடந்த கச்சேரியில் நிரவல் செய்தார். அச்சமயம் பலப் பல புள்ளினங்களின் இனிய குரல்கள் ஒலிப்பதையும், கடலலைகள் ஆர்த்து முழங்குவதையும் சபையோர் செவி நிறையக் கேட்டு அனுபவித்தார்கள். எம். எஸ்ஸின் கான முழக்கத்துடன் சபையோரின் 'ஹா ஹா'கார முழக்கமும், கரகோஷ முழக்கமும் சேர்ந்து கொண்டன. ஒரே ஆனந்தக் களிப்பாயிருந்தது.....

ராக ஆலாபனத்தில் கரகர்ப்ரியா மிக உயர்வாய் இருந்தது. சங்கராபரணம் பிரமாதமாயிருந்தது ; தடவைக்குத் தடவை இந்த ராகத்தை எம். எஸ். ஆலாபனம் செய்வது பிரமாதமாகிக் கொண்டுதான் வருகிறது. இந்த ஆலாபனத்தின் போது ஒரு சமயம் ஒரு சுழட்டல் பூர்த்தியாவதற்குள் மூன்று தடவை கரகோஷம் வந்தது என்றால், ஆலாபனம் எவ்

உலக ரிகார்ட் : மொரடாபாத் ஜெயில் வசிக்கும் ஜே. பி. லெக்ரே 365 நாட்கள் ஒரே பிளேடை உபயோகித்து முகக்ஷவரம் செய்து கொண்டார். - 'இல்லஸ்ட்ரேட் வீக்லி'-கோ.கி.



வளவு உயர்தரமாயிருந்திருக்கும் என்று ஊகிக்கலாம். இடையிடையே கார்வை கொடுத்துக் கொண்டு மேலே படிப்படியாகச் சென்று, மேல் ஸ்தாயியில் வட்டமிட்டு நின்று, சங்கதிகளைப் பொழிந்து, கடைசியில் பஞ்சமத்தைத் தொடும் போது யாருக்கும் புளகாங்கிதம் உண்டாகாமல் இருக்க முடியாது....

(கல்கி இதழ் 1-10-42)

சுத்தானந்தரின் பாடலைப் போலவே, கல்கியின் பாடல்கள் சிலவற்றையும், இன்னிசையில் எம். எஸ். குழைந்து இசைத் தட்டுக்களில் பதித்துத் தந்துள்ளார். அந்தப் பாடல்களைப் பற்றியும், கல்கியின் வேறு பாடல்களைப் பற்றியும் பின்னர் ''பாடலாசிரியர்'' என்ற அத்தியாயத்தில் விவரம் காணலாம்.

கல்கியின் பாடல்களை முதன் முதலாகக் கச்சேரிகளிலும் இசைத் தட்டுக்களிலும் பாடிப் பரப்பியவர் டி.கே. பட்டம்மாள். அவர் பின்னர் அடைந்த இசைப் புகழின் அறிகுறிகளை அடிநாட்களில் கல்கி எவ்வாறு கண்டு அறிவித்தார் என்பதை, அந்தக் காலத்து ''ஆடல் பாடல்'' விமரிசனம் ஒன்று புலப்படுத்துகிறது:

அகாடமி, காங்கிரஸ் காட்சி இரண்டிலும், இளம் பாடகர்கள் பலர் இம்முறை கச்சேரி செய்தனர். அவர்களில் எல்லாம் மிகச் சிறந்த பெயர் வாங்கியவர் ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள்.

சென்ற மாதத்தில் முதன் முதலாக ஜகந்நாத பக்த சபையில் இவருடைய கச்சேரி கேட்டேன். ''இவ்வளவு நன்றாகப் பாடுகிறாரே; இதுவரை நாம் கேட்டதில்லையே'' என்று வியப்பு உண்டாயிற்று. முன்னணி வித்வான்களைப் போல் சவுக்க காலத்தில் பெரிய பெரிய தீக்ஷிதர் கீர்த்தனங்களை எல்லாம் அழுத்தமாகவும் பிடிப்புடனும் பாடுகிறார். வித்வத்துடன் குரல் இனிமையும் சேர்ந்திருக்கிறது. அதனால் கச்சேரி செய்யும் போது விகாரப்படுத்திக் கொள்ளாமல் புன்னகை தவழும் முகத்துடன் பாடுதல் சாத்தியமாய் இருக்கிறது.... வருங் காலத்தில் இவருடைய பெயர் பெரிதும் பிரசித்தி அடையும் என்று எதிர்பார்க்கிறேன். (ஆ. வி. 12-1-36)

அப்படியே அவர் பிரசித்தி அடைந்தார், வெகுவேகமாக. முன்னே கண்ட குறிப்புக்குப் பிறகு, பட்டம்மாளின் கச்சேரிகள் பலவற்றைக் கல்கி கேட்டு அவ்வப்போது விமரிசனம் எழுதிக் கொண்டே இருந்தார். சுமார் ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு, புகழின் மேல் மட்டத்தை அவர் எட்டியிருந்தபோது அவருடைய படத்தைத் தமது சொந்தப் பத்திரிகையின் அட்டையில் கல்கி வெளியிட்டு, அவருடைய அத்தகைய புகழுக்குக் காரணமான அம்சங்களைப் பட்டை தீட்டிக் காட்டினாற்போல் எடுத்துச் சொன்னார்:

கர்நாடக சங்கீத வித்தை மிக அருமையான வித்தை. அந்த வித்தையில் தேர்ச்சி அடைதல் எளிய காரியமன்று. அதற்கு இயற்கையோடு பிறந்த இசை உணர்ச்சி வேண்டும். இடைவிடாத உழைப்பும் பயிற்சியும் வேண்டும். இப்படி அரிதில் பெற்ற வித்தை நன்கு சோபிப்பதற்கு இனிய சாரீரம் வேண்டும். இந்த மூன்று அம்சங்களும் நன்கு பொருந்திய பாக்கியசாலி, கான ஸரஸ்வதி டி. கே. பட்டம்மாள். மதுரமும் கம்பீரமும் பொருந்திய சாரீரம், அசாதாரண லய ஞானம், அழுத்தமான கமகப் பிடிகள், தெளிவான சாஹித்ய உச்சரிப்பு — இவை ஸ்ரீமதி பட்டம்மாளின் பாட்டில் விசேஷ அம்சங்கள்.

சவுக்க கால தீக்ஷிதர் கிருதிகளைப் பூரண ராக பாவத்துடன் பாடுவதிலும், அபூர்வ லய வேலைப்பாடுகள் பொருந்திய பல்லவிகள் பாடுவதிலும் பெயர் பெற்றவர். தமிழிசை இயக்கத்தின் முன்னணியில் நிற்பவர். ஸ்ரீமதி பட்டம்மாளின் கச்சேரிகளில் சாதாரணமாக எப்போதுமே தமிழ்ப் பாடல்கள் நிறைய இருக்கும். அவருக்கே தனி உரிமையான துக்கடாக்களில் கரகோஷம் நிச்சயம் உண்டு.

(கல்கி இதழ் 28-1-45)

சங்கீத பரிபாஷையிலேயே சொல்வதென்றால், அநாவசியமான சங்கதிகளோ பிர்க்காக்களோ இல்லாத கன கச்சிதமான வர்ணனை இது.

சங்கீதக் கச்சேரிகளை ரசிகர்கள் விரும்பிக் கேட்பதுபோல், தமது விமரிசனங்களையும் வாசகர்கள் விரும்பிப் படிக்க வேண்டும் என்பதற்காக, அவற்றின் உத்தியையும் நடையையும் கல்கி மாற்றிக் கொண்டே இருந்தார். இதற்கு ஓர் உதாரணம், ஒரு சமயம் ஆறு மாத இடைவேளைக்குப் பிறகு கச்சேரி ஒன்றைக் கேட்டுவிட்டு அவர் எழுதிய புதுவிதமான விமரிசனம் :

பழைய சிநேகிதர்களைச் சந்திப்பதற்கு மயிலாப்பூர் ரஸிக ரஞ்சனி சபை தகுந்த இடம் என்று கண்டிருக்கிறேன். ஆறு மாதத்துக்கு முன்பு பிரிந்த சிநேகிதர்களையெல்லாம் அந்தச் சபையில் மறுபடியும் சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. தோடி, பைரவி, சங்கராபரணம், காம்போதி, கரகரப்ரியா முதலிய சிநேகிதர்களைத்தான் குறிப்பிடுகிறேன்.

நமது தென்னாட்டுச் சங்கீதத்தில் இந்த அற்புதத்தைக் காண்கிறோம். ஒவ்வொரு ராகத்துக்கும் ஒரு தனிப்பட்ட ஸ்வரூபம் இருக்கிறது. அழகான வடிவம்; அற்புதமான தோற்றம். கேட்டுப் பழகப் பழக, அந்தந்த

ராகங்களுடன் தோழமை பூண்டுவிடுகிறோம். கொஞ்ச நாளைக்கு ஒரு ராகத்தைக் கேட்காம லிருந்து பிறகு கேட்டால், ஏதோ வெகு நாள் பிரிந்திருந்த பழைய சிநேகிதரைப் பார்ப்பது போலக் குதூகலம் அடைகின்றோம்...

கர்நாடக ராகங்களைப் பாடுவதற்கு நல்ல சாரீரம்தான் வேண்டும் என்பது அத்தியா வசியமில்லை. ராகத்தின் ஸ்வரூபம் மட்டும் சரியாயிருந்தால் போதும்.; கட்டை சாரீரம் உள்ளவர் பாடிக்கூட நமக்குப் பரவசம் உண் டாக்கிவிடலாம்.....

கர்நாடக சங்கீதத்தின் மேற்கூறிய விசேஷ குணத்தினால்தான், சென்ற ஞாயிற்றுக்கிழமை மயிலாப்பூர் ரஸிக ரஞ்சனி சபையில் நடந்த ஸ்ரீ அரியக்குடி ராமானுஜ அய்யங்காரின் கச்சேரியைக் கடைசி வரையில் கேட்க முடிந் தது. இதே சபையில் அய்யங்கார் ஆடி மாதத் தில் காவேரியில் வரும் புது வெள்ளத்தைப் போல் அலை மோதும் சங்கீதக் கச்சேரி செய்த தைப் பல தடவை கேட்டிருக்கிறேன். இன் றைக்கும் ''தனயுனி ப்ரோவ'' என்னும் பைரவி கீர்த்தனம் வரையில் அப்படித்தான் கச்சேரி வந்து கொண்டிருந்தது. அது முடிந்ததும் எதனாலோ தொண்டை பாறை யாய்க் கட்டிவிட்டது. அதனாலென்ன மோசம்? கச்சேரி நின்றுவிட்டதா? அப்புற மும் இரண்டு மணி நேரம் அய்யங்கார் பாடத் தான் பாடினார். சங்கராபரணத்தை அபூர்வ மாய்க் கையாண்டு பாடியபோது, அவருடைய தொண்டைக்கட்டை யார் கவனித்தார்கள்? வெகுநாளாய்ப் பிரிந்திருந்த சிநேகிதரைக் கண்டு அளவளாவும் போது அவருடைய தலைக் கிராப்பு கோணலாய் இருக்கிறதே என் பதையா கவனித்துக் கொண்டிருப்போம்?

(கல்கி இதழ் 16-8-41)

இறுதியில், நாதஸ்வரப் பேரிசை யில் எழுந்த தோடியுடன் கல்கியின் கற்பனையும் தமிழ் நடையும் இசைந் தோடுவதைக் காண்போம்:

ஆஹா! ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளையின் தோடி ஆலாபனையை முதன் முதலில் கேட்ட போது, அவருடைய கற்பனையை விட்டுத் தள்ளுங்கள் — நம்முடைய மனத்தில் என் னென்ன இன்ப மயமான கற்பனைகள் எல்லாம் உதித்தன!

குழந்தை தாயிடம் கொஞ்சும் குரலைக் கேட்டோம்; அன்னை குழந்தையிடம் கொஞ் சும் குரலைக் கேட்டோம்; ரதியும் மன்மத னும் பேசிக் கொண்ட காதல் மொழிகளைக் கேட்டோம்; முருகன் சிவபெருமான் செவி குளிர மொழிந்த உபதேசத்தைக் கேட்டோம்; கலைமகள் கவிஞனுக்கு அருளிய ஆசி மொழி களைக் கேட்டோம்; நாத முனிவருடைய தம்புரா சுருதியைக் கேட்டோம்; இராவ ணன் தன் எலும்பை ஒடித்து வீணையாகச் செய்து வாசித்த கானத்தைக் கேட்டோம்; கானப் பறவைகளின் கலகல த்வனியைக் கேட்டோம்; கோலக் குயில்களின் குரல் இனி மையைக் கேட்டோம்.... (கல்கி இதழ் 21-5-50)

(தொடரும்)

மாணவர் மாண்புற

நாட்டின் வருங்காலப் பிரஜைகளான மாணவர்கள் ஒழுக்கம் மிக்கவர்களாக வளர வேண்டும் என்ற சீரிய நோக்குடன் மாணவர் நல மன்றம் ஒன்று ஸ்ரீ காஞ்சி சங்கராசாரிய ஸ்வாமிகளின் அநுக்கிரகத்தோடு தொடங் கப்பட்டுள்ளது.

நான்காவது வகுப்பில் படிக்கும் தொடக் கப் பள்ளி மாணவர்களிலிருந்து கல்லூரிக் கல்வி பெறும் மாணவர்கள் வரை, மாணவர் நல மன்றம், தான் தொடங்கும் விடுதிகளில் தங்கிப் பயில்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும்.

இந்தக் கல்வி ஆண்டிலேயே தமிழ் நாட்டில் சென்னை, திருச்சி நகரங்களிலும், ஆந்திரப் பிரதேசத்தில் திருப்பதியிலும் இவ் விடுதிகள் தொடங்கப்பட விருக்கின்றன. மற்ற இடங்களிலும் தொடங்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

இவற்றில் மாணவர்கள் தங்குவதற்கான வசதிகளோடு சைவ உணவும் வழங்கப் பெறும். இதற்கு மாதக் கட்டணம் உண்டு. தொடக்க இடைநிலைப் பள்ளிச் சிறுவர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 125ம், உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் ரூ. 150ம் கல்லூரி மாணவர்கள் ரூ. 200ம் செலுத்த வேண்டி யிருக்கும்.

இந்த மாணவர் நல விடுதியில் தங்கும் மாணவர்களது வாழ்க்கை பண்பட்டதாக அமையும் என்பதற்கான அறிகுறி இதன் விதிகளிலிருந்தே தெரிய வருகிறது.

இவ்விடுதிகளில் தங்கும் மாணவர்களுக்கு எக்காரியத்தையும் உரிய காலத்தில் செய்யும் பழக்கத்தோடு யோக சாஸ்திரப் பயிற்சியும், வடமொழிக் கல்வியும் அளிக்கப்படும். அதோடு சமயக் கருத்துக்களும் கலாசாரங் களும் படியும் வகையில் அன்றாட நிகழ்ச்சிக் குறிப்புகள் அமைந்து பாரதிய வாழ்வின் பெருமைக்கு அணி சேர்க்கும்.

இது மாணவர்கள் தங்கும் விடுதியாக மட் டும் இராமல், இன்னொரு கல்விக் கூடமாகவே அமைந்து, வாழ்வாங்கு வாழும் வகையைக் காட்டிக் கொடுக்கும். இதன் பணிகளைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறவர்கள், செயலாளர், மாணவர் நல மன்றம், 8, பிர சன்ன விநாயகர் தெரு, புரசை, சென்னை— 600.007 என்ற முகவரியை அணுகவும்.




Incremin
syrup
TONIC APPETITE
STIMULANT



காந்தியக் கிராமம்

அ. நக்கீரன்

ஊர் மக்களால் கட்டப் பெற்ற அருள்மிகு காளி கோயில்



மதுவிலக்கு நடைமுறையில் இருந்தாலும் உரந்தை வட்டாரத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சுதல் குடிசைத் தொழிலாக நடைபெற்று வந்தது. ஆடவரே அன்றிப் பெண்டிரும் இத்தொழிலில் ஈடுபட்டிருந்தனர். தமக்கு 'மாமூல்' வருமானம் வருகிற காரணத்தால் காவல் துறையினரும் இதற்கு ஊக்கம் கொடுத்து வளர்த்து வந்தனர். சில சமயங்களில் பேருக்குச் சில வழக்குத் தொடுப்பதும் உண்டு.

உரந்த நாட்டு வட்டாரத்துக்குத் தம்மை மாற்றும்படி முன்பு வி ''ய காவலர்கள், இப்போது அந்த 'மாமூல்' வருமானம் ஒழிந்தமையால் வேறு இடங்களுக்கு மாற்றல் விரும்பும் அளவுக்கு நிலைமை மாறியுள்ளது.

காவல்துறை, ஊர் அதிகாரிகள், பொது மக்கள் ஆகிய முத்துறையும் இணைந்து இன்று செயல்படுவதால் உரந்தை வட்டத்தில் மது வரக்கன் மாய்ந்தான். தாய்க்குலம் நெஞ்சாரப் போற்றுகின்றது. ஊர்தோறும் மது வொழிப்புக் குழு தொடங்கப்பட்டு, நன்முறையில் செயல்பட்டு வருகின்றன.

இந்த அளவுக்குக் காவல்துறையைத் தூண்டிச் செயல்பட வைத்த 'ஊர் நலன் வளர்ச்சிக் கழக'த்தைப் பற்றிக் கூறுதல், மற்ற ஊர்கள் பின்பற்றி நடக்க ஏதுவாக அமையும்.

உறந்தைராயன் குடிக்காடு தஞ்சை—பட்டுக்கோட்டைப் பெரும் பாட்டையில் அமைந்துள்ள ஒரு சிற்றூர்; உரத்த நாடு ஒன்றியத்தில் உள்ள மிகச் சிறிய ஊராட்சி. பலதரப்பட்ட 600 மக்களைக் கொண்டது. நிலமற்றோர் பலர்.

இங்கு பிறந்த 'ஊர் நலன் வளர்ச்சிக் கழகம்' எந்த அரசியல் கட்சியினையும் சார்ந்ததன்று. கட்சிக்கு அப்பாற்பட்டு நின்று ஊருக்கு நல்லது செய்கிறது.

கடந்த இருபத்தொரு ஆண்டுகளாக எந்த அரசியல் கட்சிக் கொடியும் எங்கள் ஊரில் பறக்கவில்லை. விடுதலை நாள், குடியரசு நாள் ஆகிய இரண்டு நாட்களில் மட்டும் நாட்டுக் கொடி ஏற்றப்படும். தமிழ் நாட்டிலேயே எந்தக் கட்சிக் கொடியும் பறவாத ஊர் எங்கள் ஊராகத்தான் இருக்கும் என்று எண்ணுகின்றேன்.

அரசியல்

சட்ட மன்ற, நாடாளுமன்றத் தேர்தலின் போது நாங்களே கூட்டத்துக்கு ஏற்பாடு செய்து அனைத்துக் கட்சியினரையும் ஒரே மேடையில் பேசச் செய்கின்றோம். இதுவரையில் அவ்வாறே செய்து வந்திருக்கின்றோம். இதனால் ஒருவரையொருவர் திட்டிக் கொள்ளும் நிலை மாறுவதோடு, மக்களும் தெளிவு பெறுகின்றனர்.

இன்னாருக்குத்தான் வாக்களிக்க வேண்டும் என்று நாங்கள் சொல்வதில்லை. அவரவர் விருப்பப்படி வாக்களிக்கலாம். வாக்களிக்கும் உரிமையுள்ளவர்கள் அனைவரையும் வாக்களிக்கச் செய்வது கழகத்தார் கடமை.

1967ல் தெலுங்கன்குடிக்காடு ஊராட்சியிலிருந்து பிரிந்து எங்களுக்குத் தனி ஊராட்சி கண்டோம்.

ஊராட்சி உறுப்பினர்களையும், தலைவரையும் போட்டியில்லாமலே இதுவரை தேர்ந்தெடுத்து வருகின்றோம். இனியும் அப்படியே நடக்கும்.

அரசியல் கட்சியினர் எப்படியாவது இந்த ஊரில் தங்கள் கட்சியினைத் தோற்றுவித்துவிட வேண்டும் என்று உறுதி பூண்டு செயல்பட்டு வருகின்றனர்.

அவர்களுக்கு ஒன்று சொல்வேன். கட்சியுள்ள ஊர்களில் உங்கள் பணியினைச் செய்யுங்கள். கட்சியில்லாத இந்த ஊர் ஒரு



உறந்தைராயன்குடிக்காட்டின் எழில் தோற்றம்.

கீழே: ஊர் நலன் வளர்ச்சிக் கழகத் தொண்டர் படை

மாதிரிக்காகவேனும் இருக்கட்டும். அதன் வளர்ச்சி முறையினைக் கட்சியுள்ள மற்ற ஊர்களோடு ஒப்பிட்டுப் பாருங்கள்.

கல்விப் பணி

ஐந்தாம் வகுப்பு வரை இருந்த தொடக்கப் பள்ளியில் 1960ஆம் ஆண்டில் 6ஆம் வகுப்புத் திறக்கப் பாடுபட்டோம். பின்னர் 1962ஆம் ஆண்டில் உயர்நிலைப்பள்ளியாக் கப்பட்டது.

உயர்நிலைப் பள்ளி கொணரக் குறிப்பிட்ட தொகை கட்டவேண்டும். பெண்கள் தாங்கள் அணிந்திருந்த நகைகளைக் கொடுத்து உதவினர். அவற்றை வங்கியில் வைத்துப் பணம் பெற்றோம். கூட்டுறவுச் சங்கத்தில் எங்கள் பேரிலேயே கடன் பெற்றுத் தனி நபர்களின் கடனையும் சேர்த்துப் பள்ளிக்காகக் கட்டினோம்.

எழுத்தறிவு பெருக முதியோர்க்கு இரவு நேரத்தில் கல்வி கற்பித்தோம். நூல்நிலையம் ஒன்றும் நடத்தப்படுகிறது. ஐந்து வயதுக்குக் குறைந்த குழந்தைகளுக்கெனக் குழந்தைகள் காப்பகம் ஒன்றும் நடத்தப்பட்டு வருகின்றது.

உயர்நிலைப் பள்ளியில் இறுதி வகுப்புத் தேர்வில் முதலெண் பெறும் மாணவருக்குப் பதக்கம் அளிக்கப்படுகிறது.

கல்லூரியில் பயிலும் உள்ளூர் மாணவர்களுக்கு உதவும் பொருட்டுக் 'கல்வி அறக்கட்டளை நிதி' ஒன்று நிறுவியுள்ளோம். உள்ளூரைச் சேர்ந்த வேலை பார்க்கும் நண்பர்கள் மாதம் ஐந்து ரூபாய் வீதம் இந் நிதிக்காக அன்பளிப்பு அளித்து வருகிறார்கள்.

எங்கள் இயக்கத்தில் ஆர்வம் உடைய வெளி மனிதர்களின் நன்கொடையும் உண்டு.

வேளாண்மை

மூன்று குழாய்க் கிணறுகள் அண்மைக் காலத்தில் தோண்டப்பட்டு உள்ளன. கொடிய வறட்சி நிலை ஏற்பட்டுள்ள இந்த ஆண்டில்கூட முப்போகம் பயிரிடப்பட்டுள்ளது. பச்சைக் கம்பளம் விரித்தாற்போன்று ஊரில் பசுமைக் காட்சி தென்படுகின்றது.


வடகாடு ஓடையில் ஏறத்தாழ ரூ. 30,000 செலவில் ஊர் மக்களே உழைப்பு நல்கி மூன்று வாரத்தில் பாலம் ஒன்று கட்டி முடித்தனர். கட்டுவிரலை மூக்கில் சேர்க்காதவரில்லை.

குளங்கள் ஆழப்படுத்தப்பட்டன; குடிநீர்க் கிணறுகள் தோண்டப்பட்டன.

ஊரில் கட்டப்படும் கட்டடங்களும், பாலங்களும் ஊரார் ஒத்துழைப்புடன் கட்டப்படுகின்றன.

விழாக்கள்

பொங்கற் புதுநாளை ஒட்டி வள்ளுவர் விழாக் கொண்டாடுகிறோம். ஊர் இளைஞர்கள் விளையாட்டுப் போட்டியில் தம் திறன் காட்டுவர். நாடகம் மூலம் பொதுமக்கள் நல்லறிவு பெறுவர். பிறந்த குழந்தைகளுக்கு விழாவிலே பெயர் சூட்டப்படுகிறது.



மது ஒழிப்பு

மதுவருந்துதல், சாராயம் காய்ச்சுதல் போன்றவற்றில் ஈடுபட்ட பலர் தொடக்க காலத்தில் ஊ. ந. வ. கழக உறுப்பினராகச் சேர்ந்தனர். பொறுப்பு மிக்க அவர்கள் எங்கள் கழகத்தில் சேர்ந்த பின்னர் தம் தீய பழக்கங்களைக் கைவிட்டனர்.

குடிப்போருக்கும், சாராயம் காய்ச்சுபவர்களுக்கும் நேரில் அறிவுறுத்தியும், பின்னர் எச்சரிக்கையும் செய்வது கழகத்தின் மரபு.

மீறுபவர் மீது நடவடிக்கை எடுத்தோம். கூட்டமாகச் சென்று ஊறல் பானைகளை எடுத்து உடைத்தும், சாராயத்தைக் கீழே ஊற்றியும் எரிப்பதற்குப் பயன்படும் கருவிகளை உடைத்தும் செயல் மேற்கொண்டோம். கட்டுப்படாதவர்களைக் காவல் துறையில் பிடித்துக் கொடுத்தோம். இந்த வட்டாரத்திலேயே கடந்த இருபது ஆண்டுகளாக மது ஒழிப்புப் பணியை நாங்கள்திறம்படச் செய்துவருகிறோம்.

எங்கள் வலையில் பலரும் சிக்கினர். நாட்டாண்மைக்காரர் குடித்த போதும் பிடித்தோம்.

மணியக்காரர் குடித்த போதும் கையும் களவுமாய்ப் பிடித்து மேலிடத்துக்குத் தெரியப்படுத்தினோம்.

காவல் துறையினரையும் நாங்கள் விடவில்லை. பாப்பாநாட்டுக் காவல் நிலையத்தில் பணியாற்றிய ஒருவர் குடித்துவிட்டுச் செல்லும் போது பிடித்தோம். இனிக் குடிப்பதில்லை என எழுதிக் கொடுத்து மன்னிப்புக் கேட்டதன் பேரில் விட்டோம்.

எங்கள் கழக மது ஒழிப்புப் பணியினைப் பாராட்டிக் காவல் துறை பல சான்றுகளை வழங்கி உள்ளது; ஒத்துழைக்கிறது.

சந்தித்த இடர்ப்பாடுகள்

உறங்கிய கொட்டகையில் மண்ணெண்ணெய் ஊற்றித் தீ வைத்தனர்.

முன்னாள் முதல்வர் காமராசர் அவர்கள் சமுதாயக் கூடத்துக்கு நாட்டிய அடிப்படைக் கல்லை உடைத்தெறிந்தனர்.

கழகக் காளையும் செயல் வீரருமான இரா. விரையன் அடித்துக் கொல்லப்பட்டார்.

செல்லும் வழிகளெல்லாம் வழிமறித்துத் தாக்கப்பட்டோம்.

இந்த எதிர்ப்புக்களால் கழக உறுப்பினர்கள் கலங்கவில்லை. மேலும் உறுதி பூண்டு ஒற்றுமையுடன் நற்பணி புரிய எழுச்சி கொண்டனர்.

தொண்டர் படை

தொண்டர் படை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சீருடை அணிந்து அவர்கள் செல்லும் காட்சி கண்கொள்ளாக் காட்சி.

திருமணக் காலங்களில் விருந்து பரிமாறியும், விழாக் காலங்களில் அமைதி நிலைநாட்டியும் ஒழுங்குபடுத்துகின்றனர், கழகத் தொண்டர்கள்.


தீண்டாமை ஒழிப்பு

ஊரின் மக்கள் தொகையில் கால் பகுதியினர் அரிசன மக்கள். அவர்களும் கழகத்தில் உறுப்பினராய் உள்ளனர். சேரியில் நடைபெறும் திருமணங்களில் கழக உறுப்பினர்கள் கலந்து கொள்வதுண்டு.. எல்லோரும் சேர்ந்தே பொதுப் பணிகள் ஆற்றி வருகின்றனர். எங்கள் ஊரைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் அரிசனப் பெண்ணைக் கலப்புத் திருமணம் செய்து கொண்டிருக்கிறார்.

முழு அளவுக்குத் தீண்டாமை ஒழிக்கப்படவில்லையானாலும், மற்ற ஊர்களை விட ஓரளவுக்கேனும் முன்னேறியிருப்பதில் பெருமை கொள்கிறோம்.

உழை – உயர் – உதவு என்பது எங்கள் கழகத்தின் 'இலக்குரை'. பிறர் உழைப்பைச் சுரண்டி வாழாது, 'நித்தியம் உடலுழைப்பு' என்ற காந்தியடிகளின் நோன்புக்கிணங்க அன்றாடம் கடுமையாய் உழைக்க வேண்டும்.

அதனால் உயர்வு பெறவேண்டும்.



ஃபிஜித் தீவுகளில் கடவுள் சிலைகளைக் கோயில்களுக்கு வழங்க சுவாமி ருத்ராணந்தா எடுத்துக் கொண்ட முயற்சிக்குத் தமிழ்ப் பெருமக்கள் பேராதரவு அளித்தனர். இருபத்தைந்து சிலைகள் இப்போது ஃபிஜி செல்கின்றன. இந்தக் கற்சிலைகளை திரு ராமநாதன் செட்டியார் மேற்பார்வையில் தயாரித்து அளித்தவர் திரு மு. சந்தான ஸ்தபதி. மேலும் பத்து கற்சிலைகளை மகாபலிபுரம் திரு கணபதி ஸ்தபதி தயாரிக்கிறார். நடராஜர் வெங்கலச் சிலையை திரு அவிநாசிலிங்கம் செட்டியார் அன்பளிப்பாக வழங்கினார். ஃபிஜித் தீவுகளுக்குச் சிலைகளை அனுப்பும் செலவை பொள்ளாச்சி திரு நா. மகாலிங்கம் ஏற்றுள்ளார்.

ஸ்ரீ முத்துசாமி தீக்ஷிதரின் இருநூறாவது பிறந்த நாளை அமெரிக்காவும் கொண்டாடியது. கலிஃபோர்னியா கலைக் கழகத்தின் தென் இந்திய இசைப் பிரிவு இரு நாட்களில் மொத்தம் பத்து மணி நேரம் நீடித்த நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தது. படத்தில் திரு டி. விசுவநாதன் (குழல்) திரு எல். சுப்பிரமணியம் (வயலின்) ஆகியோரையும் அவர்களது மாணவர்களில் சிலரையும் காணலாம்.





தீவுகள்

இந்திரா பார்த்தசாரதி

15

'**நா**ன் உங்கள் நிலையிலிருந்தால் மோகினியை 'என்றைக்கோ கொன்றிருப்பேன்' என்று ஸ்வர்ணு கூறியதும் கபூர் அதிர்ச்சி அடைந்தார். எவ்வளவு அழுக்கந்திருந்த மாகக் கூறுகிருள் இவள் !

''இப்படியெல்லாம் பேசுவதால் உனக்கு என்ன ஆறுதல்?'' என்று கேட்டார் கபூர்.

''நான் என் கணவனை இழந்து நிற்பதற்கு ஓர் ஆறுதல்; கண்ட கண்ட 'மொரான்' களுடன் சுற்ற வேண்டியிருக்கிறதே என்பதற்கு ஓர் ஆறுதல்; என் கண்கள் இருபத்தி நாலு மணி நேரமும் குடித்துச் சிவந்திருக்கின்றனவே, இதற்கு ஓர் ஆறுதல் ... ஒரு கோழைத் தகப்பனுக்கு விடுதலை கிடைத்ததே என்பது பற்றி ஓர் ஆறுதல்...''

நான் ஒரு கோழையில்லை. கோழையாக இருந்திருக்கலாம். இப்பொழுது இல்லை. மோகினியைக் கேள், அவள் சொல்வாள். ரத்தன்லாலைக் கேள், அவன் சொல்வான். இதை எப்படி உனக்கு விளங்க வைக்க முடியும்? நீ இந்தக் காலத்துப் பெண்.. நீ எப்படி வேண்டுமானாலும் பேசலாம்.' என்னால் பேச முடியாது...

''என்ன பேசாமல் இருக்கிறீர்கள்? நான் இப்படி வெளிப்படையாகப் பேசுகிறேனே என்று கோபமா?''

கபூர் ஒன்றும் கூறாமல் வெளியே சென்றார். ''பாப்பாஜி.'' அவர் திரும்பிப் பார்த்தார். ரூபி அவரிடம் ஓடி வந்தாள். அவருக்கு அந்தக் குழந்தையைத் தூக்கிக் கட்டியணைத்து முத்தமிட வேண்டும் போலிருந்தது. இந்த உலகத்தின் இரக்கமற்ற தன்மையும் கொடூரமும் தெரியாமலே இந்தக் குழந்தை வளர முடியுமா?—ஸ்வர்ணு சொன்னது போல் விஜயா தான் இந்தக் குழந்தைக்குத் தாயாக இருக்க முடியும் ... பணம் இந்தக் குழந்தையைக் கெடுத்துவிடக் கூடாது... கெடுத்துவிடக் கூடாது...''

கபூரின் திமர் அன்புப் பெருக்கில் திக்குமுக்காடினுள் ரூபி.

''உனக்கு என்ன வேண்டும்? வாங்கிக் கொண்டு வருகிறேன், சொல்'' என்ருர் கபூர்.

''ஆன்ட்டி.''

''ஆன்ட்டியா?''

''ஆமாம்... விஜயா ஆன்ட்டி.''

கபூர் புன்னகை செய்துகொண்டே சொன்னார்: ''நிச்சயமாக வாங்கிக் கொண்டு வருகிறேன்.''

ரூபி உள்ளே ஓடிவிட்டாள்.

அவர் ஆஃபீசில் நுழைந்தவுடன் அங்கே விஜயா வரவேற்பு ஹாலில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தார். அவள் அவரைப் பார்த்ததும் எழுந்து வணக்கம் தெரிவித்தாள். அவர். ஒரு தலையசைப்புடன் உள்ளே போய் விட்டார். அவர் ஒரு புன்னகையாவது செய்திருக்கலாம் என்று விஜயாவுக்குத் தோன்றிற்று. ஆஃபீசில் சலுகைகளை எதிர்பார்க்காதே என்று அர்த்தமா? அல்லது தன்னைப் பற்றி வீட்டில் ஒரு பெரிய விவாதம் நிகழ்ந்திருக்குமோ? — ஒருவேளை மோகினி திரும்பி வந்து விட்டாளோ? — அம்மா பயந்தது சரிதானு ? — 'உனக்கு வேலை கொடுத்துட்டான். பிள்ளையைக் கூட்டிண்டு போயிட்டான். இனிமே கல்யாணமாவது கார்த்தியாவது! உங்க இரண்டு பேருக்குள்ளே ஒண்ணும் ஆயிடலையோடி! அப்படி ஆகலேன்னு, கிடைச்சது லாபம்னு வாயை மூடிண்டு, செய்யற வேலைக்குச் சம்பளத்தை வாங்கிண்டு சும்மா இரு... கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டுண்டு அசடா நிக்காதே ... அதோட, இது எப்படி முடியும்...? அவன் பஞ்சாபி... உன் தங்கைகளுக்கெல்லாம் கல்யாணம் ஆக

வேண்டாமா? எல்லாருமே எனக்குப் பஞ்சாபி மாப்பிள்ளையா அமைய முடியுமா? ஊர்ப் பக்கம் போய்த் தலைகாட்ட முடியாது. தெரிஞ்சுக்கோ...' அம்மா இன்னும் ஏதேதோ சொல்லிக் கொண்டே போனாள். அம்மாவுக்கு என் சம்பளம் வேண்டும். அதுதான் முக்கியம். நான் எங்கு வேலை செய்தால் என்ன? கபூர் தம் வாக்குறுதியைக் காப்பாற்றப் போவதில்லை என்றால் அல்லது ராகேஷின் மனம் மாறிவிட்டது என்றால், நான் எதற்காக இந்த ஆஃபீசில் வேலை செய்ய வேண்டும்? இந்த நினைவு வந்ததும் திடீரென்று ஏதோ ஒரு சூனியம் அவளைக் கவ்வுவதுபோலிருந்தது.

அப்பொழுது மணி வந்து அவளிடம் சொன்னான்: ''மிஸ்டர் கபூர் உங்களைக் கூப்பிடுகிறார்.''

அவள் உள்ளே போனாள்.

''நான் சில குறிப்புத் தருகிறேன். எழுதி 'டைப்' அடித்துத் தருகிறாயா?''

தன் மனத்தில் உள்ள சந்தேகங்களை அவரிடம் கேட்கலாமா? அல்லது சொன்ன வேலையை எந்த விதமான மறுப்பும் இல்லாமல் செய்ய வேண்டியதுதானா? கபூர் அவர் எதிரே பிரித்திருந்த பல ஃபைல்களைப் புரட்டிக் கொண்டிருந்தார். இந்தச் சமயத்தில் எப்படிக் கேட்பது? ஆனால் அவர் சொன்னபடி எழுதத் தொடங்கி விட்டால், வேலையை ஒப்புக் கொண்டது போல்தானே? என்ன செய்வது?

கபூர் அவளை நிமிர்ந்து பார்த்தார். ''ஓ... நோட் புக்கும் பென்சிலும் இல்லையா?'' அவர் மேஜையின் பக்கவாட்டத்திலிருந்த மணியை அழுத்தினார். வந்த சப்ராஸியிடம் மணியைக் கூப்பிடச் சொன்னார். மணி வந்து சில விநாடிகள் பேசாமல் நின்றான். அவன் முகத்தில் எந்தவிதமான உணர்ச்சியும் இல்லை. நான் இங்கு வேலை செய்ய வந்திருப்பது இவனுக்குப் பிடிக்கவில்லையோ என்று தோன்றிற்று விஜயாவுக்கு. ராகேஷ் என்னுடன் சிநேகிதமா யிருப்பது பற்றிப் பொறாமையாயிருக்கலாம். நான் இனிமேல் வேலைக்கு வர மாட்டேன் என்று நேற்று ராகேஷ் ஃபோன் செய்த பிறகு மறுபடியும் இன்று நான் வந்திருப்பது இவனுக்கு ஆச்சரியமாக இருந்திருக்கும்.

கபூர் திடீரென்று நினைவு வந்தவராய், ஃபைல்களிலிருந்து பார்வையை விலக்கி மணியிடம் சொன்னார்: ''ஒரு நோட்புக்கும் பென்சிலும் கொண்டு வந்து இவளிடம் கொடு.''

அவன் கொண்டு வந்து கொடுத்தான்.

அவர் 'டிக்டேட்' செய்யத் தொடங்கினார்.

அப்பொழுது டெலிஃபோன் ஒலித்தது. ''டாமிட்'' என்று கோபத்துடன் சொல்லிக் கொண்டே 'ரிஸீவரை' எடுத்தார்.

''எஸ்...கபூர் ஸ்பீக்கிங்.''

அவர் முகம் திடீரென்று மாறியது. வெறிபிடித்தது போல் அவளுக்குப்பட்டது.



"நீ போ ... இன்னும் கொஞ்ச நேரம் கழித்து வா" என்றார் அவர் விஜயாவிடம், டெலிஃபோன் வாயை ஒரு கையால் மூடிக் கொண்டே.

விஜயாவைப் பார்த்ததும், மணி ஒருவிதமான தயக்கத்துடன் புன்னகை செய்துவிட்டு மறுபடியும் தான் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தில் ஆழ்ந்து விட்டான். அவளை அவன் உட்காரக்கூடச் சொல்லவில்லை. டிக்டேஷன் இதற்குள் முடிந்து விட்டதா என்று கூடக் கேட்கவில்லை. விஜயா அங்கு காலியாயிருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள்.

திடீரென்று நினைவு வந்தவன்போல், "டைப் செய்யணுமா?" என்று கேட்டான் மணி.

"இல்லே... கொஞ்ச நேரம் கழிச்சு 'வா'ன்னார்... ஏன் என்பேரிலே உங்களுக்கு ஏதாவது கோபமா? இப்படி 'கோல்டா' இருக்கீங்களே...?"

அவன் எதிர்பார்த்தபடி இந்த வார்த்தைகள் அவன் தன்னைச் சுற்றி எழுப்பிக் கொண்டிருந்த பனித் திரையை விலக்கி அவன் முகத்தைப் பிரகாசமடையச் செய்தது.

"நோ நோ... என்ன கோபம்? ஆமாம்... நீங்கள் மறுபடியும் வேலைக்கு வர மாட்டீங்கன்னு ராகேஷ் சொன்னார், நீங்க எப்படி இப்போ....?"

"மிஸ்டர் கபூர், நான் வந்தாகணும்னு வற்புறுத்திச் சொன்னதினாலே..."

"ஐ ஸீ..."

"நீங்க எப்போ ஊருக்குப் போகப் போறீங்க?"

"இன்னும் நிச்சயமாத் தெரியலே...போகலாமா வேண்டாமான்னு யோசிச்சுக்கிட்டிருந்தேன்.... இப்போ போய்த் தான் ஆகணும் போலிருக்குது."

"ஏன்?"

" 'ஸப்ஸ்டிட்யூட்' வந்தாச்சு.. நீ போன்னு மிஸ்டர் கபூர் சொல்ல மாட்டாரா?"

"நோ நோ...நான் உங்களுக்கு 'ஸப்ஸ்டிட்யூட்' இல்லே... நீங்க ஊருக்குப் போகப் போறதாச் சொன்னதினாலே, உங்க வேலையை





வாங்குபவர்: எனக்கு இரண்டு ஹார்மோனியங்கள் வேண்டும்.

கடைக்காரர்: ஆகா! எடுத்துக் கொள்ளுங்கள். இன்னும் என்ன வேண்டும்?

வாங்குபவர்: பணம் அடுத்த மாதச் சம்பளத்தில் தான் தருவேன். என்ன சொல்லுகிறீர்கள்?

கடைக்காரர்: (சிறிது யோசித்து): கடன் வேண்டுமா?

வாங்குபவர்: நீங்கள் பணத்தைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்பட வேண்டாம். நான் கொடுக்க வேண்டிய பணத்துக்கு ஈடாக ஒரு ஹார்மோனியத்தை இங்கேயே வைத்துவிட்டுப் போகிறேன்.

—விஜயம்

என்னைச் செய்யச் சொல்லியிருக்கிறார் மிஸ்டர் கபூர்... நீங்க ஊருக்குப் போகலேன்னு உங்க வேலையை நீங்க செய்யலாம். ஐ ஆம் ஸாரி, டு யு திங்க் ஐ ஹாவ் டிஸ்ப்ளேஸ்ட் யூ?''

''நான் சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன். மிஸ்டர் கபூர்கிட்டே நான் இன்னும் சொல்லல்லே, ஊருக்குப் போகிறதைப் பத்தி இப்போ யோசிச்சுக்கிட்டிருக்கேன்னு.. நான் அப்புறம் சொல்லிக்கிறேன்... நீங்க இப்போ டிக்டேஷன் எடுத்துக்குங்க..... ஆமாம், ஏன் வந்துட்டீங்க?''

''ஃபோனிலே பேசிண்டிருக்கார்.''

''ஆமாம்... வந்து...'' என்று ஏதோ சொல்ல வாயெடுத்தவன் பேசாமலிருந்து விட்டான்.

''என்ன சொல்லுங்க...''

அவன் தன் நாற்காலியிலிருந்து எழுந்து அவளருகே நின்று கொண்டு கீழ்க் குரலில் கேட்டான்: ''மிஸஸ் கபூருக்கும் கபூருக்கும் நேத்து ராத்திரி பெரிய சண்டையா? வம்பு பேசறேன்னு நினைக்காதீங்க... மிஸஸ் கபூர் நேத்து ராத்திரி இங்கே ரொம்ப நேரம் இருந்தாங்க. எனக்குத் தர்ம சங்கடமாப் போச்சுது. மிஸ்டர் கபூர் சாயந்திரம் சுமார் ஆறரை மணிக்கு மந்திரியைப் பார்த்துட்டு ஆஃபீசுக்கு வந்தார். அப்போ அவர்கிட்டே மிஸஸ் கபூர் அவருக்காகக் காத்துக்கிட்டு ஆஃபீஸ்லே உட்கார்ந்திருக்காங்கன்னேன். ஒண்ணுமே சொல்லல்லே... திரும்பிப் போய் விட்டார்!''

விஜயாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. கபூர், மோகினி வீட்டை விட்டுப் போய்விட்டாள் என்று சொன்னாரே தவிர, இதைப் பற்றி ஏன் சொல்லவில்லை? அப்படியானால், கபூர் நேரே வீட்டுக்குப் போகாமல் எங்கே போயிருப்பார்? ரத்தன்லாலின் சிநேகம் அவரை எங்கே அழைத்துக் கொண்டு போயிருக்க முடியும்? மோகினி, திரும்பி வந்திருக்கக் கூடும்... வீட்டில் எவ்வளவு பெரிய சண்டையோ?—

''சொல்ல விருப்பமில்லாட்டா சொல்ல வேணும்'' என்றான் மணி.

''எனக்கு ஒன்றும் தெரியாது. நான் என் வீட்டிலிருந்து வரேன். மத்தவங்களுடைய குடும்பச் சண்டையைப் பத்தியும் எனக்குக் கவலையில்லே...'' என்றாள் விஜயா.

மணி அவளைப் பார்த்துவிட்டுப் புன்னகை செய்தான்.

''எதுக்குச் சிரிக்கிறீங்க?'' என்று கேட்டாள் விஜயா.

'' 'மத்தவங்க'ன்னு அப்படி உங்களால் சொல்ல முடியுமா?'' என்று கேட்டான் மணி.

''என்ன சொல்றீங்க நீங்க?''

''மிஸ்டர் கபூர் வீட்டு மருமகளாகப் போறீங்கன்னு எல்லாரும் சொல்லிக்கிறாங்க.''

''அப்படியே 'மருமகளா'ப் போறேன்னு வைச்சுண்டாலும் எங்க வீட்டு விவகாரத்தை ஆஃபீஸ்லே 'டிஸ்கஸ்' பண்ணுவேன்னு எதிர் பார்த்தீங்களா?''

மணி ஒரு விநாடி அவளை உற்றுப் பார்த்தான். பிறகு தன்னிடத்துக்குப் போய் உட்கார்ந்து மறுபடியும் தான் முன்பு படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினான். அவளைப் பார்த்தால் அவனுக்குப் பரிதாபமாக இருந்தது. அவள் கோபம் குழந்தைத்தனமாக இருப்பதாக அவனுக்குப் பட்டது. 'இண்டர்-காம்' ஒலித்தது. மணி எடுத்தான். ''எஸ் ஸார்'' என்றான். பிறகு ஓர் இயந்திர ரீதியான குரலில், ''உங்களை மிஸ்டர் கபூர் கூப்பிடுகிறார்'' என்றான் விஜயாவிடம் ஆங்கிலத்தில்.

விஜயா எழுந்து உள்ளே போனாள்.

''நான் இப்பொழுது அவசரமாக வெளியே போகிறேன். டாக்டர் சாட்டர்ஜி என்பவர் ஃபோன் செய்தால், நான் கட்டாயம் இன்று பிற்பகல் கூட்டத்துக்கு வந்துசேர்ந்து விடுவேன் என்று சொல்...'' என்றார் கபூர் அவளைப் பார்த்ததும்.

''உங்களுக்கு உடல் சரியில்லையா?'' என்று கேட்டாள் விஜயா, அவர் முகம் மிகவும் சோர்ந்திருப்பதைப் பார்த்து.


''உடல் மட்டுமல்ல, எதுவுமே சரியில்லை. உலகத்தில் பணத்தைப் போல் பொல்லாதது எதுவுமே கிடையாது. பணம் இருந்தாலும் கஷ்டம், இல்லா விட்டாலும் கஷ்டம். ஒரு காலத்தில் பணம் இல்லாமல் கஷ்டப்பட்டேன். இப்பொழுது பணத்தை வைத்துக் கொண்டு கஷ்டப்படுகிறேன்'' என்று சொல்லி விட்டு மௌனமாக ஒரு வெட்ட வெளிப் பார்வையுடன் நின்றார் கபூர்.

யாரிடமிருந்து ஃபோன் வந்திருக்கக்கூடும்? எதனாலோ திடீரென்று பாதிக்கப்பட்டவர் போல் இவர் இப்படி நிற்பதற்கு என்ன காரணம்? இவர் ஆஃபீசில் வேலை செய்யும் பெண் என்பதை மறந்து, இவருக்கு மருமகளாகப் போகிறவள் என்ற உரிமையுடன், இவர் இப்படி விரக்தியுடன் பேசுவதற்கு என்ன காரணம் என்று விசாரிப்பதில் என்ன தவறு?— ஆஃபீசில் வேலை செய்யும் பெண்ணிடம் பேசுவதுபோல் இவர் இப்பொழுது பேசவில்லையே?

''மிஸஸ் கபூரைப் பற்றி ஏதாவது தகவல் உண்டா?'' என்று கேட்டாள் விஜயா.

கபூர் அவளை உற்றுப் பார்த்தார். மிகவும் ஆழமான பார்வை. தான் கேட்டது தப்போ? அளவுக்கு மீறிச் சலுகை கொண்டாடுகிறாயே என்ற கண்டிப்போ? — நான் கேட்டிருக்கக் கூடாது.

''எதற்காகக் கேட்கிறாய்?'' என்றார் கபூர்.



உடம்புவலி உங்களைத் தாக்கும்போது
ஸாரிடான் கொண்டு அதைத் தாக்குங்கள்.
உடம்புவலி மற்றும் தலைவலியிலிருந்து ஸாரிடான் மட்டுமே வெறும் நிவாரணத்தைக் காட்டிலும் அதிகப்பலன் தருகிறது. அதன் விசேட கலவை முறை வலியைப் போக்கும்போதே களைப்பை நீக்கிப் புத்துயிரளிக்கிறது. இங்குதான் ரோஷின் சர்வதேச ஆராய்ச்சி உங்களுக்காக செயல்படுகிறது.
HT-RP-8612
உடம்புவலியைப் போக்குகிறது ஒரே ஒரு ஸாரிடான்
ட்ரேட்மார்க்
'ரோஷ்'

"இப்பொழுது வந்த ஃபோன் உங்களை மிகவும் பாதித்திருப்பது போல் தெரிகிறது."

கபூர் பதில் சொல்லவில்லை. பற்களினால் கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டார்.

"நான் ஏதாவது தப்பாகச் சொல்லியிருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள்."

"நான் ஒன்று சொல்கிறேன். செய்கிறாயா...?"

"என்ன?"

"என்னுடன் கிளம்பி வா. கொஞ்சம் பணம் தருகிறேன். நான் சொல்லும் முகவரிக்குச் சென்று அங்குள்ள ஒரு பெண்ணிடம் அதைக் கொடுக்க வேண்டும். இது யாருக்கும் தெரியக் கூடாது... புறப்படு."—

"டாக்டர் சாட்டர்ஜி...."

"உன்னை அந்த ஹோட்டலில் இறக்கிவிட்டு நான் டாக்டர் சாட்டர்ஜியைப் பார்க்கப் போகிறேன்..."

அவர் அவளுடைய சம்மதத்தைக் கூடக் கேட்காமல் அறையை விட்டு வெளியே போனார். அவரை அவள் தொடர்ந்தாள்.

அவர் மணியின் இருப்பிடத்துக்குச் சென்றதும், அவரை எதிர்பாராத அவன், புத்தகத்தை மூடிவிட்டுத் திடீரென்று எழுந்தான். அந்த அறையில் உட்கார்ந்திருந்த மற்றவர்களும் எழுந்தார்கள்.

"மணி...! நான் வெளியே போகிறேன். இவளும் வருகிறாள். ஏதாவது முக்கிய வேலை இருந்தால் டாக்டர் சாட்டர்ஜியின் அலுவலகத்துக்கு ஃபோன் செய்."

மணி தன்னைப் பார்த்துப் புன்னகை செய்வது போல் விஜயாவுக்குத் தோன்றியது.

கார் முன் கதவைத் திறந்து தம் அருகில் அவளை உட்கார அழைத்தார் கபூர். அவருடைய தாடை இறுகியிருந்தது. ஏதோ தீவிர சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

.. யார் இந்தப் பெண்? அவளுக்கு இவர் எதற்காகப் பணம் கொடுக்கிறார்? யாரிடமும் சொல்ல வேண்டாமென்று சொல்கிறார்?— என்ன சிக்கல் இது — ரத்தன் லால் இவரை ஏதோ வம்பில் மாட்டி வைத்திருக்கிறான். அவனைப் பார்த்தால் அப்படிச் செய்யக் கூடியவன் போல்தான் தோன்றுகிறது. இரவு வேளைகளில் இவர் ஏன் வீடு திரும்புவதில்லை என்று இப்பொழுது புரிகிறது. அந்தப் பெண்தான் பணம் வேண்டுமென்று ஃபோன் செய்திருப்பாளோ? பணத்தைப் பற்றி இவருக்குக் கவலை இல்லை. ஆனால் இவர் ஏன் இப்படிச் சோர்ந்து காணப்படுகிறார்?—மிஸஸ் கபூருக்கும் இது தெரிந்து, விவாகரத்து கோருவதற்கு இவருக்கு உரிமை இல்லாமல் போய்விட்டதே என்ற வருத்தமோ? அந்தப் பெண்ணை மிஸஸ் கபூரைக் கூப்பிட்டுச் சொல்வேன் என்று 'பிளாக்மெயில்' செய்கிறாளோ? — அவள் எப்பேர்ப்பட்ட பெண் என்று யாருக்குத் தெரியும்? ஹோட்டலில் இருக்கும் பெண் என்றால் எத்தகைய பெண்ணாய் இருக்க முடியும்? ரத்தன்லால் வேறு இவரை அன்று ஜி. பி. ரோடுக்கு அழைத்துக்கொண்டு போயிருக்கிறான்.... பெரிய சிக்கலாகத்தான் இருக்க வேண்டும்.... இவர் இந்த அளவுக்குப் பாதிக்கப்படுவதற்கு வேறு காரணமே இல்லை.

அவர் 'பார்லிமெண்ட் ஸ்ட்ரீட்'டில் ஒரு 'பாங்க்' எதிரே காரை நிறுத்தினார்.



மருத்துவக் கல்லூரியில் பாடம் நடத்திக் கொண்டிருக்கும் போது பேராசிரியர் மாணவனிடம்: "இந்த மருந்தை எந்த அளவில் நோயாளிக்கு ஊசி மூலம் செலுத்த வேண்டும்?"

"இரண்டு ஸி. ஸி." என்றான் மாணவன்.

இரண்டு நிமிடம் கழித்துஎன்ன நினைத்துக்கொண்டானோ, "ஐ ஆம் ஸாரி ஸார். ஒரே ஒரு ஸி. ஸி. தான்" என்றான்.

.புரபஸர் அமைதியாகச் சொன்னார்: "டூ லேட். உங்க பேஷண்ட் இறந்து போய் ஒரு நிமிடமாகிறது."

—சரஸ்வதி பஞ்சு

"நான் உள்ளே போய்ப் பணம் வாங்கி வருகிறேன். நீ காரில் இரு" என்றார் கபூர்.

பாங்கில் பணம் வாங்கிக் கொண்டு வர வேண்டுமென்றால் நிறையப் பணமாகத்தான் இருக்க வேண்டும். இத்தனை பணமா அந்தப் பெண்ணுக்குத் தரப் போகிறார்? எதற்காக? அவர் செய்வது முட்டாள்தனமாக இருந்தால் அவர் செய்கின்ற காரியத்துக்குத் தானும் உடந்தையாக இருக்க வேண்டுமா? அன்றிரவு போகினி இவரைத் தேடிக் கொண்டு அலைந்தாளே. அந்த முட்டாள்தனத்துக்கு நான் உடந்தையாக இல்லையா? ரத்தன் லாலின் இருப்பிடத்துக்குச் சென்று அவரைத் தேடியது என்ன புத்திசாலித்தனமான காரியம்? ராகேஷிடம் இதைப் பற்றிச் சொன்னால் என்ன? அவர் யாரிடமும் சொல்ல வேண்டாமென்று கேட்டுக் கொண்டிருக்கும்போது, ராகேஷிடம் சொல்வது சரிதானா? யாரிடமும் சொல்லவில்லையென்று நான் ஒரு வாக்குறுதியும் அவருக்கு அளிக்கவில்லையே? என்னுடைய வாக்குறுதிக்காகவும் அவர் காத்திருக்கவில்லை. நான் சொல்ல மாட்டேன் என்று அவ்வளவு நம்பிக்கை அவருக்கு. அந்த நம்பிக்கையை வீண் அடிக்கலாமா?

கபூர் மறுபடியும் காரில் வந்து உட்கார்ந்தார். பையிலிருந்து ஒரு கவரை எடுத்து விஜயாவிடம் நீட்டினார். அவள் சிறிது தயக்கத்துக்குப்பிறகு அதை வாங்கிக்கொண்டாள்.

"இதைச் செய்ய உனக்கு விருப்பமில்லாவிட்டால், நீ தயக்கம் இல்லாமல் சொல்லலாம்" என்றார் கபூர்.

"யார் இந்தப் பெண்?"

கபூர் பதில் கூறாமல் காரை 'ஸ்டார்ட்' செய்தார். கொஞ்ச தூரம் சென்றதும் சொன்னார்: "உன்னை இந்தக் காரியத்துக்காகப் பயன்படுத்துவது எனக்கு வேதனையைத்தான் தருகிறது. இருந்தாலும்...இது ஒரு தவிர்க்க முடியாத நிலைமை. இதுபற்றி நீ ராகேஷிடம் கூட மூச்சு விடக் கூடாது. இதுதான் நான் என் முட்டாள்தனத்துக்குத் தரும் விலை... நான் நேற்றிரவு வீடு திரும்பியிருக்கலாம்.... வீடு திரும்புவதாகத்தான் இருந்தேன். ஆனால்... ஆனால்..."

அவர் மேலே பேசவில்லை.


"சிவப்பு விளக்கு" என்று கத்தினாள் விஜயா.

(தொடரும்)

கணேசனுக்கு வாழ்க்கை .. வெறுத்துப் போகிற கட்டம். அப்படிப்பட்ட சமயத்தில் தான் ஒரு நாள் தற்செயலாகப் பால்கார கோவிந்தன் வந்தான். காலை-பத்து மணிக் காட்சிகளைக் கண்டிராக்டாக எடுத்து நடத்த லாம் என்று ஒரு யோசனையைச் சொன்னான். அவன் ஒரு தியேட்டர் டீ ஸ்டாலுக்குப் பால் சப்ளை செய்து கொண்டிருந்தான்.

''மாடு வாங்கற பணம் ஏழு நூறு இருக்குது. நாமகூட வழி தெரிஞ்சா மார்னிங் ஷோ எடுத்து நடத்தலாம். வாரத்துக்கு நூறு எரநூறு கை மேலே பார்க்கலாம். படிச்சிப் புட்டு வெட்டியாத்தானே சுத்திக்கினு கெடக்கிறே! ஆளுக்குப் பாதி. என்ன சொல்லறே கணேசா நீ?'' என்று கேட்டான்.

அது நல்ல யோசனையாகப்பட்டது. அதே வேலையாக அன்று முதல் சுற்றத் தொடங்கினான் கணேசன். ஒரு தியேட்டர் பாக்கி யில்லாமல் படையெடுத்தான். பட விநியோகம் செய்யும் உள்நாட்டு — வெளி நாட்டுக் கம்பெனிகளை முற்றுகையிட்டுச் சில பேரைச் சிநேகம் பிடித்துக் கொண்டான். முன்பே ஏலக் காட்சிகளை நடத்திக் கையைச்



சுட்டுக் கொண்டவர்களையும் பிறர் கையைச் சுட வைத்தவர்களையும் போய்ப் பேட்டி கண்டான். சிலர் அதைரியப்படுத்தினார்கள்; சிலர் உற்சாகப்படுத்தினார்கள்; வேறு சிலர் பரிகாசம் செய்தார்கள். கணேசன் நம்பிக்கையை இழக்காமல் சுற்றிச் சுற்றி வந்தான். அதன் காரணமாகச் சில உண்மைகளையும் வழிமுறைகளையும் புரிந்து கொண்டான். ஒரு மாதத்துக்குள் சில பட விநியோகக் கம்பெனிப் பிரதிநிதிகள், சில தியேட்டர் சிப்பந்திகள் ஆகியோரைத் திரும்பத் திரும்பச் சந்தித்து நெருங்கிப் பழகினான். தன்னைக் கண்டாலே ஒரு பரிவு உண்டாவது போல் நடந்து கொண்டான். அதற்குமேல் ஒரு முடிவுக்கு வந்து விட்டான். தனிப்பட்ட முறையில் செய்வதைவிட, ஒரு சங்கம், ஸ்தாபனம் என்ற பெயரில் இதை வெற்றிகர மாக, ஆபத்தில் அகப்பட்டுக் கொள்ளாதபடி நடத்தலாம் என்பதைப் புரிந்து கொண்டான். தேவைப்பட்டது துணிச்சலான முயற்சி ஒன்று தான். வந்தால் லாபம். 'இல்லையோ கைநஷ்டம் ஏற்படுவதற்கு வழி இல்லை. முதல் போட்டால்தானே அந்தப் பேச்சுக்கு இடம்?

விட்டிலே அப்ளிகேஷன் போடவும், பாங்கிப் பரீட்சைக்குப் போகவும் வேண்டும் என்று சொல்லிக் கொஞ்சம் பணத்தைச் சம்பாதித்துக் கொண்டு, லெட்டர்-ஹெட் அச்சடிக்கக் கொடுத்தான். வெளிநாட்டுக் கம்பெனி ஒன்று பொதுநலக் காரியங்களுக்குக் கேட்டால் போதிய சலுகை கிடைக்கும் என்று தெரிவித்தபடி, அந்த லெட்டர் ஹெட்டுகளை இரண்டு மூன்றுவிதமாக அச்சிட்டுக் கொண்டான். எல்லாவற்றுக்கும் அவனே ஆர்கனைசர். முதல் கல் விட்டெறிந்ததிலேயே மாங்காய் விழுந்து விட்டது. ஓர் அமெரிக்கப் படக் கம்பெனி பிரபலமான பழைய படம் ஒன்றைக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டு விட்டது. படம் கிடைத்துவிட்டது; தியேட்டர், கையிலே கொஞ்சம் முதல் எல்லாம் வேண்டுமே—

''கோவிந்தா! இதோ பார்த்தியா அருமை யான படம் தர்றேன்னு சொல்றாங்க. அதுக்குக் கொஞ்சம் கையிலே பணம் வேணும்; தியேட்டர் வேணும். முந்திச் சொன்னியே, ஆளுக்குப் பாதின்னு. மார்னிங் ஷோ நடத்தலாமா?'' என்று கேட்டான் கணேசன்.

'' அது அப்பச் சொன்னேன். இப்ப ஏது பணம்! அதான் மாடு வாங்கிட்டேனே. படம் சகாயமாக் கெடைக்குதுன்னு சொன்னு

நீனே தெகிரியமா நடத்திப் பாரேன். நம்ப மொதலியார்கிட்ட கேட்டுத் தியேட்டர் தரச் சொல்றேன். ஆனா அவருகிட்டே கையிலே முன் பணம் வச்சிக்கிட்டுப் பேசணும். பேசினா நிச்சயம் தருவாரு. மாட்டேங்க மாட்டாரு'' என்றான் அவன்.

''முன்பணம்னா எவ்வளவு? எரநூறு, மூந்நூறு ஆகுமா ?''

'' கண்டிசனா ஆவும். எப்பன்னாலும் எடுத்துக்கிட்டு வா. போவோம்.''


இருநூறு—முந்நூறுக்கு எங்கே போவது ? அப்பாவிடம் அவ்வளவு தொகை பெயராது.

ஆசிரியருக்கு இலவசப் பாஸ்களை நேரிலேயே கொண்டு போய்க் கொடுத்து விட்டான்.

மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை. அம்மாவையும் அப்பாவையும் தியேட்டருக்கு வரச் சொல்லிவிட்டு அவன் முன்னதாகப் போனான். ஒன்பது, ஒன்பதரைக்கெல்லாம் பார்த்தால் ஒவ்வொரு கவுண்டர் முன்பும் பெரிய க்யூ வரிசை.

கணேசன் பூரித்துப் போய் நின்றான்.

''ஹவுஸ்ஃபுல் போர்டு மாட்டப் போகிறேன்'' என்றான் முருகேசன்.



பெயர்ந்தாலும் இந்த மாதிரி என்றால் விரட்டியடிப்பார். அம்மாவுக்குத்தான் அவனிடம் அன்பு அதிகம். அவள் அக்கம் பக்கத்தில் பணம் புரட்டிக் கொடுக்கக் கூடியவள்.

'' அஞ்சு பத்துன்னாச் சரி; எரநூறு, மூந்நூறு யாருடா கொடுப்பா ? அதெல்லாம் என்னாலே முடியாது. இந்தா, என் ஒத்தை வடம் சங்கிலியைத் தரேன். நீதான் ஒடனே பணம் வந்துடும்னு சொல்றியே. புரட்டிக் கொடுத்துடு'' என்று அவன் அம்மா சங்கிலியைக் கழற்றிக் கொடுத்தாள்.

அவன் கழற்றிக்கொடுத்த வேளை தியேட்டர் கிடைத்துவிட்டது. போஸ்டர், டிக்கெட் எல்லாம் அச்சாகி வந்துவிட்டன. தியேட்டர் மானேஜர் முருகேசன் கையால் எழுதிய சிலேடு போட்டு உதவுவதாகச் சொல்லிவிட்டான். பத்திரிகைகளில் சினிமாவைப் பத்தி அறிவிப்பும் வந்துவிட்டது. சினிமாப் பகுதி


அது தேனாகக் காதில் ஒலித்தது. கொட்டகைக் கூட்டம் நிரம்பி வழிந்தது. எல்லாம் படித்தவர்கள் கூட்டம். ஆண்—பெண்கள்; கல்லூரி மாணவ மாணவிகள். தியேட்டர் வாசலிலே ஒரு போர்டு. 'வேலையற்ற பட்டதாரி சகாய நிதிக்கு' என்று அதில் அறிவிப்பு எழுதி அழிந்திருந்தது.

அவன் அம்மாவும் அப்பாவும் படம் முடிந்து வெளியில் வந்ததை அவன் பார்த்தான்.

''ஐயையே, இது என்னடா, படம் ? பொம்மனாட்டிகள் எல்லாம் எப்படிடா கூச்சமில்லாமல் இதைப்பார்க்கறது?'' என்று அம்மா படி இறங்கும்போதே கேட்டாள்.

அப்பாவுக்கு ஒரே பெருமை. அவர் அந்த மிதப்பில் அவளை அடக்கினார்.

'' அதெல்லாம் உனக்கு ஒண்ணும் தெரியாது. சும்மா வாயை மூடிண்டு வா. கூச்சமா இருந்தா நீ இங்கேயே இரு. தெரியாமல்தான் இத்தனை பேரு வந்திருக்காங்களோ ?''



"இதுகளுக்கு என்ன தெரியும்? எல்லாம் ரெண்டுங்கெட்டானுகளான்னு வந்திருக்கு. கணேச கல்யாணமாகாதவனாச்சே அவனும் தானே இதையெல்லாம் பார்க்கிறான். அதுக்குச் சொல்றேன்" என்று அம்மா அவர் காதைக் கடித்தாள்.

"சரி, சரி; பார்த்தால் பார்த்துவிட்டுப் போகட்டும். இத்தனை பொண்ணுகளை விழுந்தடிச்சிண்டு பார்க்க வந்திருக்கச்சே, இவனுக்கு என்ன வந்தது — ஆம்பிள்ளைக்கு?" என்று சொல்லிவிட்டார் அவர்.

மறு நாளே அம்மாவின் சங்கிலியை அவன் திருப்பிக் கொடுத்து விட்டான்.

"சங்கிலி வந்துட்டுதா?" என்று கேட்டார் அப்பா.

"கொண்டு வந்து கொடுத்துட்டான். கச்சேரி சாலையிலே ஆபீஸ் ஒண்ணு ஆரம்பிச்சிருக்கானும். வரச் சொல்லியிருக்கான் நம்ம ரெண்டு பேரையும். அதெல்லாம் சரி, ஏதோ செய்துட்டுப் போறான்னு இருந்துடப்படாது. காலாகாலத்துலே ஒரு நல்ல பொண்ணா வந்தா பார்க்க வேண்டியதுதான்" என்றாள் அம்மா.

"புதுசாப் பார்க்கறது என்ன? அந்த நடராஜன் தங்கை ஒருத்தி இருக்காளே — படிச்சப்புட்டு, டைப் எல்லாம் பாஸ் பண்ணிப்புட்டு — மறந்துட்டியா? அந்தப் பொண்ணையே பார்க்கலாம்."

கணேசனின் உதவி நிதிக் காட்சிகள் பல பெயர்களில் பல தியேட்டர்களில் நடைபெற்று வந்தன. ஓர் இடத்தில் லாபம், ஓர் இடத்தில் நஷ்டம். மாதத் தொடக்கத்தில் போட்டால் வசூல் ஆயிற்று. மாதக் கடைசி என்றால் கை நஷ்டம்தான் வந்தது. இருந்தாலும் பாங்கியிலே கொஞ்சம் பணம், ஆபீஸிலே பர்னிச்சர்கள் என்று நாலைந்தாயிரம் லாபத்தில்தான் இருந்தது. கோவிந்தனுக்கே அவனிடம் ஒரு மரியாதை வந்து விட்டது. பார்த்தபோதெல்லாம் ஒரு கும்பிடு போட்டான். யாரோ ஒரு தெரிந்த பையனும், அவனுக்கு வேலை போட்டுக் கொடுக்கும்படியும் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் அம்மாவும் சொல்லிக் கொண்டிருந்தாள்.

"வேணும்னா கூடமாட ஒத்தாசைக்கு யாரையாவது வேலைக்கு வைச்சுக்கயேன்..... ஒண்டியாக் கிடந்து திண்டாடறியே!"

"நான் ஒரு செக்ரட்டரி வைச்சுக்கலாம்னு தான் பார்க்கறேன். எதுக்கும் கொஞ்சம் போகட்டும்" என்றான் கணேசன்.

ஆனால் அவன் சொன்னபோது இருந்த நிலை மாறிவிட்டது. மழைக் காலம் வந்ததும் சேர்ந்தாற்போல் மூன்று நான்கு காட்சிகள் கையைக் கடித்து விட்டன. முதலியார் தியேட்டருக்குப் பாக்கி நின்று விட்டது. முதலியார் ஊரிலிருந்திருந்தால் தியேட்டர் கிடைத்திருக்காது. கடனும் வந்திருக்காது. ஆனால் அவர் வட தேச யாத்திரை போயிருந்தார். முருகேசன் பணம் எங்கும் போய் விடாது என்று தாட்சண்யப்பட்டுத் தியேட்டரைக் கொடுத்துவிட்டான். இப்போது தனியாகத் தவித்தான். அடுத்த

எண்களுக்கும் காலம் வரும்!



வாரம் முதலியார் வந்து விடுவார். அதற்குள் பணத்தைக் கொடுத்துவிட வேண்டும். கணேசனும் எவ்வளவோ முயன்று பார்த்தான். பாங்கி இருப்பு நூறுக்கு இறங்கிவிட்டது. வேறு தியேட்டர்களில் நடத்திய காட்சிகளில் மிச்சம் இல்லே. போட்டி, மழைக் காலம் எல்லாம் சேர்ந்து கொண்டு ஆவனைச் சோதித்து விட்டன.

"மிஸ்டர் கணேசன்! ரெண்டு நாளிலே மொதலியார் வந்துடறாரு!" என்றான் முருகேசன்.

"இங்கள்கிழமை காலையிலே வா. செக் தந்திடறேன்!" என்றான் கணேசன்.

என்ன தைரியத்தில் சொன்னானே, என்ன துணிச்சலில் செக் எழுதிக் கையில் கொடுத்தானே, ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

மணி பன்னிரண்டரைக்கு மேலாகிவிட்டது. கணேசன் இன்று 'லஞ்ச'க்குப் போகவில்லே. அப்படியே என்ன செய்வது என்று தெரியாமல் இடிந்து போய் உட்கார்ந்திருந்தான்.

கணேசன் மணியைப் பார்த்தான். இன்னும் மூன்றே மணி நேரம்தான் இருந்தது. அம்மாவின் நகைகள் அத்தனையும் கொடுத்தால்கூட ஆயிரத்துக்கு மேல் தேறாது. டைப்ரைட்டர் இருக்கிறது. அதற்கு ஆயிரம் கேட்டுப் பார்க்கலாம். வேறு வழியில்லே....

அவன் எழுந்திருக்கப் போகும் சமயத்தில் வெளியே கதவை விரலால் தட்டும் சத்தம் கேட்டது.

'எஸ்.... கம் இன்'' என்றான் கணேசன்.

கையில் டபக்கென்று ஒரு பைலே எடுத்துப் பிரித்துக் கொண்டான்.

வந்தது யார் என்றுகூடப் பாராமல் பைலில் ஆழ்ந்து போனான் கணேசன். ஆனால் ஏதோ மெல்லிய நறுமணம் ஒன்று அவன் குழம்பிய சிந்தையை மேலும் குழப்பிவிட்டது.

வந்தவள் ஒரு பெண். அவளைப் பார்த்ததும் கணேசனுக்கு ஓர் அதிர்ச்சி. பார்த்த முகமாகவும் அழகான முகமாகவும் இருந்தாள் அவள். அடக்கமாகவும் காணப்பட்டாள்.

"செகரட்டரி வேலே இருக்கிறதா உங்க அப்பா சொல்லி வந்திருக்கேன்."

"எங்க அப்பா சொல்லியா! செகரட்டரி வேலேயா?"

"அப்படித்தான் உங்கப்பா எங்க அண்ணன் நடராஜன்கிட்டே சொன்னாராம். டைப்பிங், பைலிங், ஆபீஸ் நிர்வாகம் எல்லாம் தனியாக் கவனிக்கிறாப்பலே ஒரு செகரட்டரி நீங்க பார்த்திண்டிருக்கிறதா உங்க அப்பா ரெண்டு மூணு தடவை சொல்லிப்பிட்டாராம்."

"ரெண்டு மூணு தடவையா? அப்படின்னு ஏன் முந்தியே வரல்லே?"

"என்னவோ வர முடியல்லே....."

"அப்படி உக்காந்துக்கம்மா! சும்மா உட்காரலாம்."

"இருக்கட்டும்; பரவாயில்லே. உங்களுக்கு அவசியமில்லாட்டா நீங்க வேலேக்கு எடுத்துக்க வாண்டாம். எங்க அண்ணன் சொன்னானேன்னுதான் வந்தேன். வீட்டிலே சும்மா இருக்கப் பிடிக்கல்லே."



ஃபிடில் காப்பி !

திருச்சி ஜங்ஷனில் உள்ள ஐ. ஆர். ஆர். சிற்றுண்டி சாலைக்குச் சென்று 'ஃபிடில் காப்பி கொடுங்கள்' என்று கேட்டால் ஒரு 'காப்பி'யில் பாதி அளவு கொடுப்பார்கள். விலையும் பாதிதான்.

ஸ்ரீரங்கம் ரா. ராகவன்

''ஆமாமா, சும்மா எப்படி இருக்கிறது? பிடிக்காதுதான். ஆனால் செகரட்டரி.... எங்கப்பா சொல்லி... அதாவது உங்க அண்ணா மூலமாகச் சொல்லி... எங்கப்பா தனக்கு யாரையோ தெரியும்னு சொல்லின்டிருந்தார்..... ஆனா....''

''நீங்க இது விஷயமா ஒரு முடிவு செய்துக்கல்லே மாதிரி இருக்கு...''

''செகரட்டரி என்னமோ அவசியம்தான். அப்பா சொன்னதினாலே யோசனையா இருக்கு. அவருக்கு என் தலையிலே எப்படியாவது ஒரு பெண்ணைக் கட்டிப்புடணும்னு எண்ணம். அந்த எண்ணத்திலே சொல்லியிருப்பாரோன்னு....''

''எனக்கும் அதே சந்தேகம்தான். எங்க அண்ணாவுக்கும் அதே அபிப்பிராயம்தான். அப்படியிருந்தா நானே வாண்டாம்னு சொல்லிடுவேன். ஆனால் அவன் சொன்னதைப் பார்த்தா யாரோ வயசானவரா இருப்பார்னு நெனச்சு வந்துட்டேன்.''

''புரியறது. அதான் இப்ப எனக்கும் தயக்கம். சின்ன வயசன்னா வேலை பார்க்கக் கூச்சமாத்தான் இருக்கும்.''

''அதெல்லாம் எனக்குப் பயமில்லே. ஆனா....''

''இல்லெயின்னு. என்னாலே அதிகப் பணம் கொடுக்க முடியாதேன்னும் ஒரு யோசனை.....''

''நான் பணத்தைப் பத்தியும் கவலைப் படல்லே..... ஆனா....''

''இரண்டு பேருமே முடிவு இல்லாமே ஆனா, ஆனான்னு சொல்லிக்கொண்டே இருக்கோம்.''

இரண்டு பேரும் சிரித்தார்கள்.

''என்ன சொல்றதுன்னு தெரியல்லே.''

''தைரியமாச் சொல்லலாம்.''

''அப்பா யாரையாவது தலையிலே கட்டிடப் போறார்னு பயமா இருந்தால் அந்தப் பயமும் வேண்டாம்.''

''நான் அந்தப் பயத்தை அப்பவே விட்டு விட்டேன்.''

''அப்படின்னா — புரியல்லியே ?''

''செக்ரட்டரியா வைச்சுக்கிறதுன்னு ஒரு முடிவுக்கு வந்துட்டேன். ஆனா...''

''மறுபடியும் ஆனாவா ?''

கணேசன் சிரித்துக் கொண்டே, ''இந்த மாதிரி ஒரு பொண்ணைத் தலையிலே கட்டுவார்னு நான் எதிர்பார்க்கல்லே. பார்த்திருந்தா கவலைப்பட்டிருக்கவே மாட்டேன். தி திங்.... வி கான் கெட் அன் வெரி வெல் டுகெதர் !'' என்றான்.

''அப்ப ?''

''அதோ அதுதான் உன் இடம். ஆனால் டைப்ரைட்டர் மத்தியானத்துக்கு மேலே இருக்காது. கொஞ்ச நாட்கள் அது வெளியிலே போகப் போறது.''

''தாங்க்ஸ்... அதனால் என்ன? என் பெயர் சோபனா !''

மறுபடியும் வெளியே கதவைத் தட்டும் ஒலி கேட்டது.

''எஸ்.... கம் இன்.....'' என்றாள் சோபனா.

''மிஸ்டர் கணேஷ் !''

''எஸ்... இருக்கார்... உட்காருங்கள். அவர் ஃப்ரீயா இருக்காரான்னு பார்க்கிறேன். உங்க பேரு?'' என்று ஆங்கிலத்தில் பேசினாள் சோபனா.

''நான் ரஜனி பிக்சர்ஸிலேயிருந்து வருகிறேன். பிரதீப்னு பெயர்.'' அவனுக்குத் தமிழே தெரியாது போல் இருந்தது.

தடுப்புக்குப் பின்னால் உட்கார்ந்திருந்த கணேசன் அவனைக் கண்டதும் கையை உதறினான்.

''ஏன், என்ன கையிலே ?''

''கையிலே ஒரு இழவும் இல்லாமே எப்படி பிஸியா இருக்கறது? ஏதானும் ஒரு ஃபைலைக் கொண்டு வரப்படாது? நல்ல வேளை. வந்திருக்கிறவன் வடக்கத்தி ஆள். தமிழ் தெரியாதுன்னு நினைக்கிறேன் !''

சோபனா ஒரு ஃபைலைக் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் பிரதீப்பையும் உள்ளே அனுப்பினாள். இருவரும் கையைக் குலுக்கி அறிமுகம் செய்து கொண்டார்கள்.

''நான் ரஜனியிலிருந்து வருகிறேன். எங்கள் 'வில்லேஜ் கேர்ல்' படம் பற்றிக் கேள்விப்பட்டிருக்கலாம். அதை ஓட்டுவதற்குச் சிட்டியிலே தியேட்டர் கிடைக்கவில்லை. மிஸ்டர் முருகேஷ் உங்கள் பெயரைச் சொன்னார். சிட்டியிலே இரண்டு தடவை மார்னிங் ஷோ நடத்தினால் படத்துக்கு ஒரு டிமாண்டு வரும். யூ மஸ்ட் ஹெல்ப் மீ...''

முருகேசன் பெயரைச் சொன்னதும் கணேசனுக்கு வயிற்றைக் கலக்கியது. மூன்று மணிக்குள் அடகு வைக்கக் கூடப் போக முடியாமல் சங்கடமாக இருக்கிறதே என்று தவித்தான்.

''நீங்கள் தயங்க வேண்டாம். அட்வான்ஸ் ஏதாவது வேணுமானால் நான் கொடுக்கிறேன்.''

''இப்பவே கூடவா ?''

''இப்பவேதான் சொல்கிறேன். தியேட்டர் பப்ளிசிடி, மற்றச் செலவுகள் எல்லாம் நாங்கள் ஏற்கத் தயார். நூறாயிரம் ஆனாலும் கவலையில்லை. அத்துடன் ஒரு பர்சன்டேஜும் உங்களுக்குக் கொடுக்கிறோம். இப்பவே ரெண்டாயிரம் தருகிறேன். பாக்கியை.....''

கணேசனுக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. வாய் குழறியது. ''தாங்ஸ்... சோபனா... மிஸ்டர் பிரதீப்....இந்தப் பணத்துக்கு ஒரு ரசீது.... டோன்ட் ஒர்ரி. மார்னிங் ஷோ என்ன, உயிரையே வேணாலும் கொடுத்து உதவத் தயார்'' என்று ஏதேதோ பேசினான்.

பிரதீப் சிரித்துக் கொண்டான்.

''அது சரி, உங்க ரஜனியிலே மொத்தம் எத்தனை படம் இருக்கு ?''

''ஏழு !''

''மெட்ராஸிலே விநியோக உரிமை யார்கிட்டே இருக்கு?''

''யார்கிட்டேயும் இல்லே. இனிமேல்தான் கொடுக்கணும்.''

ஜனநாயக சேவா சங்கத் தலைவர் ஸ்ரீ A. சுப்பிரமணிய அய்யர் (சுப்ரீம் கோர்ட் அட்வகேட்) குமாரத்தி சௌ. லட்சுமி M. Sc.க்கும், ஸ்ரீ R. சுப்பிரமணியம் புதல்வர் சிரஞ்சீவி. S. சீனிவாசராகவன் M.Sc.க்கும் சமீபத்தில் சென்னை ஐயப்பா கல்யாண மண்டபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. முன்னாள் முதல்வர் ஸ்ரீ M. பக்தவத்சலம் முதலான பிரமுகர்கள் விஜயம் செய்து மணமக்களை வாழ்த்தினர்.



சோர்வா?
பலவீனமா?



சாப்பிடுங்கள்.


வாட்டர்பரீஸ் விட்டமின் டானிக் —
விட்டமின்களும், இரும்புச் சத்தும், தாதுப்பொருட்களும்
அடங்கிய பரிபூரண டானிக்



சில டானிக்குகளில் விட்டமின்கள் மட்டுமே உள்ளன. சிலவற்றில் தாதுச் சத்துக்களோ அல்லது இரும்புச் சத்தோதான் உள்ளன. வாட்டர்பரீஸ் விட்டமின் டானிக் பரிபூரணமானது. அதில் விட்டமின்களும், இரும்புச் சத்தும், தாதுச்சத்துக்களும் சம-சீராக இணைந்துள்ளன—

தினமும் உற்சாகமும், சக்தியும், வலிமையும் கொடுக்கிறது.

விட்டமின்கள் நிரம்பியது



வாட்டர்பரீஸ்

விட்டமின் டானிக்

சுறுசுறுப்பான ஆரோக்கியத்திற்கு
பரிபூரணமான டானிக்

Grant 9 TM

"கொடுக்கணும்னு அந்த உரிமையைச் சோபனா கணேஷ் பிக்சர் டிஸ்ட்ரிப்யூட்டர்சுக்குக் கொடுக்கக் கூடாதா?"

"அது வந்து உங்கள் கம்பெனியா?"

"ஜஸ்ட் ஸ்டார்ட்டெட். இன்னும் லெட்டர் ஹெட்கூடப் போடல்லே. இப்பத்தான் ஆரம்பம்."

"ஐ விஷ் யூ ஆல் குட் லக்!"

"வி நீட் இட் வெரி மச். நாங்களும் வளர வேண்டாமா? எத்தனை நாளைக்கு மார்னிங் ஷோவே நடத்தறது?"

"நல்லதுதான். நான் வுட்லண்ட்ஸிலே தான் தங்கியிருக்கேன். போய்ப் பாக்கிப் பணத்தை அனுப்பி வைக்கிறேன். ரொம்பத் தாங்க்ஸ்." பிரதீப் எழுந்தான். மீண்டும் அவன் பக்கம் திரும்பி, "புது செகரட்டரி, புதுக் கம்பெனி. எல்லாம் அரை மணியிலே ஏற்பாடு செய்துப்புட்டீங்க. உங்க துணிச்சலை நான் முந்தியே பார்த்திருக்கேன். உங்களுக்கு மார்னிங் ஷோ முதல் படம் கொடுத்தவனே நான் தான். இங்கே வரப்போ நீங்க ரெண்டு பேரும் பேசிக் கொண்டிருந்ததை நான் கேட்டேன். நான்கூட இந்த ஊர்க்காரன்தான். கணேசன் மாதிரி மூன்றுக்கு வரத் தவிச்சிண்டிருந்தவன்தான். இப்ப பம்பாயிலே சௌகரியமா இருக்கேன். வரேன். அப்புறம் பாக்கறேன். ஒன்ஸ் எகெய்ன் குட் லக் டு யூ!" என்று கூறி விட்டுப் போனான் பிரதீப்.

வெகு நேரம் வரையில் பிரமை பிடித்தவன் போல் இருந்த கணேசன் இப்போது மணியைப் பார்த்தான்.

"எங்கேயோ டைப்ரைட்டரோட போகணும்னு சொல்லல்லே? நாழியாகல்லியா?" என்றாள் சோபனா.

"நான் அப்படிச் சொல்லலியே. மத்தியானத்துக்கு மேலே இருக்காதுன்னு சொன்னேன். இப்ப அதிலே ஒரு சின்ன மாறுதல். அது இருக்கும். நாமதான் இருக்க மாட்டோம். முதல்லே எங்கேயாவது போய்க் கொஞ்சம் பசியாறிவிட்டு, பாங்கி மூடறதுக்கு முன்னாலே இந்தப் பணத்தைக் கட்டிப்புட்டு வரணும். பாவம், முருகேசன் அதிருஷ்டக்காரன்தான். அதிருஷ்டம் வந்து சித்தே நேரம்தான் ஒரே பக்கம் இருக்கும். அதுக்குள்ளே செய்து முடிச்சுக்க வேண்டியதையெல்லாம் செய்து முடிச்சு ஸ்திரப்படுத்திக் கொண்டு விடணும். அதனாலே நீயும் கொஞ்சம் கூட வரணும். நீ இங்கே தனியா வரல்லே, அதிருஷ்டத்தோடேயும், ஐஸ்வரியத்தோடேயுமே வந்திருக்கே. சொன்னா உனக்குப் புரியாது. நீ இப்ப வெறும் செகரட்டரி மட்டும் இல்லே. பிக்சர் டிஸ்டிரிபியூஷன் கம்பெனியிலே சரிபாதி பார்ட்னர். ஞாபகம் இருக்கட்டும்!" என்றான் கணேசன்.

"இருந்தாலும் உங்களுக்கு அசாத்தியத் துணிச்சல்தான். பார்ட்னர்னு சொன்னா என் சம்மதத்தைக் கேட்க வேண்டாமா?"

"ஊஹும்; சில விஷயங்களுக்கெல்லாம் உன் சம்மதத்தைக் கேட்டிண்டிருக்க முடியாது; ஊகமா எடுத்துக்க வேண்டியதுதான்!" என்று கூறிச் சிரித்தான் கணேசன்.

சோபனாவும் சொகுசாகச் சிரித்தாள்.



"ஆயிரம் ரூபாய் கடன் கேட்கறியே! பிள்ளையை மெடிகல்லே சேர்க்கப் போறியா?"

"இல்லே! நர்ஸரியில் சேர்க்கணும்!"



"மேஜை மேலே இருந்த சாக்பீஸைக் காணோம். எல்லோரும் 'ஆ' காட்டுங்கள்!"



"இன்று என்ன கத்துக்கிட்டே? மாமாவுக்குச் சொல்லு!"

"இடியட், ஃபூல், ப்ளடி, ராஸ்கல், நான்சென்ஸ்..."

ஒருமுறை பெர்னார்ட் ஷா....

'... தம் உருவத்தை ஓவியமாக வரைந்து கொடுக்கும்படி ஓர் ஓவியரைக் கேட்டுக் கொண்டார். ஓவியம் நன்றாக அமைந்தால் நூறு பவுன் தருவதாகவும் வாக்களித்தார். வரைந்து முடிக்கப்பட்ட தம் உருவத்தைக் கண்டு மிகவும் களிப்படைந்த பெர்னார்ட் ஷா இருபது பவுனுக்கு ஒரு செக் வீதம் ஐந்து செக்குகளை எழுதிக் கொடுத்தார். ஓவியர் கேட்டார்: ''ஐந்து தனித் தனி செக்குகளுக்குப் பதிலாக நூறு பவுனுக்கு ஒரே செக்கை எழுதிக் கொடுத்திருக்கலாமே!''

அதற்கு ஷா சொன்ன பதில்: ''என் கையெழுத்தை விலை கொடுத்து வாங்க இப்போது ரசிகர்கள் போட்டி போடுகிறார்கள். என் ஒரு கையெழுத்து இப்போது முப்பது பவுனுக்குப் போகிறது. ஆகவே நீங்கள் இந்த ஐந்து செக்குகளையும் விற்றால் நான் வாக்களித்ததை விட உங்களுக்கு ஐம்பது பவுன்கள் அதிகமாகக் கிடைக்கும். மேலும் என் கையெழுத்துக்காக அந்தச் செக்கை வாங்கும் என் ரசிகர்கள் அதை பாங்கியில் மாற்ற விரும்ப மாட்டார்கள். எனவே 'அக்கவுண்ட்'டில் என் பணமும் அப்படியே இருக்கும்!''



ஆதாரம்: 'காரவன்' - ''ராதா''

மூணு முடிச்சு!

திருவல்லிக்கேணி பைனார்ட்ஸ் சபையார், அரங்கேற்றிய ''மூணு முடிச்சு'' நாடகத்தில் திரைக்கும் நாடகத்துக்கும் ஏற்பட்ட போட்டியில் திரைதான் வெற்றி பெற்றது. மேலும் கீழுமாக ஏறி இறங்கிய திரைதான் அதிக நேரம் நடித்தது!

காட்சிகள் அவ்வளவு சிறியன. நடிகர்கள் பேசி நடித்து மனத்தில் ஓர் உருவ அமைப்பு ஏற்படுவதற்குள் திரை விழுந்து விடுகிறது.

அடுத்த காட்சிக்கான மேடை அமைப்பு செய்வதற்காக எடுத்துக் கொள்ளும் நேரத்தை இட்டு நிரப்பும் பின்னணி வாத்தியக் கோஷ்டியினரின் இசை கர்ண கடூரமாக இருந்து தொலைக்கிறது.

ஆரம்பத்தில் டீ விற்கும் நாயர், அருள் தாஸைப் பற்றிக் கூறும் வாசகங்கள், - பின்னால் அருள்தாஸ் பரிணமிக்கும் குணம்சத்துக்கு முற்றும் மாறுபட்ட தவறான எண்ணத்தை ஏற்படுத்துகின்றன. அந்தத் தவறான அபிப்பிராயத்திலிருந்து விடுபட்டு அருள்தாஸின் குணம்சத்தைப் புரிந்துகொள்ள நேரம் பிடிக்கிறது.

அருள்தாஸ் முரடன்; ஆனால் யோக்கியன். சொன்ன சொல்லைக் காப்பாற்றுபவன்; மனச்சாட்சியுள்ளவன்.

முதல் காட்சியில் டீ விற்கும் நாயரின் பேச்சிலிருந்து, இளைஞர்களுக்கு சினிமாப் பைத்தியம் பிடிக்க வைத்துப் பணம் பறிப்பவன் அருள்தாஸ் என்ற தவறான எண்ணம் உண்டாகிறது.

நகைச்சுவை முக்கியமாகிவிட்டால் கதை போய்விடுகிறது. கதையம்சத்துக்குப் பிராதான்யம் கொடுத்து விட்டால் நகைச்சுவை போய்விடுமோ என்ற அச்சம் போலும்!

சேகர் என்ற படித்த இளைஞனுக்குக் காதலித்துக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற ஆசை. இவ்விஷயத்தில் ரங்காச்சாரி என்ற அயோக்கியனும் அருள்தாஸ் என்ற முரடனும் சேர்ந்து படுத்துகிற பாடு போதாதென்று அவனுடைய சொந்த அசட்டுத்தனமும் சேர்ந்து கொண்டு பல குழப்பங்களை விளைவிக்கிறது!

இதனிடையில் அருள்தாஸ் என்ற முரடனிடம் 'பேபி' என்ற பெண் சொல்லி முடியாத காதல் கொண்டு அவனையே தொடர்கிறாள். இந்தப் பகுதி இயல்பாகவும் நன்றாகவும் இருக்கிறது.

கொலை, சண்டை, போலீஸ் ஸ்டேஷன் காட்சிகள் எல்லாம் வருகின்றன. அசட்டு ஸப் இன்ஸ்பெக்டர் வேறு வருகிறார்.

மொத்தத்தில் ஒரு ''பிடிப்பு'' இல்லாத கதை, காட்சி யமைப்பு, நடிப்பு. எனினும் அருள்தாஸாக நடிக்கும் டைப்பிஸ்ட் கோபுவும் அருள்தாஸையே கல்யாணம் செய்து கொள்வேன் என்று தொடரும் பேபியாக நடிக்கும் விஜயப்பிரியாவும் தத்தம் பகுதிகளைச் செவ்வனே செய்து, ஒரு முடிச்சுக்கு மேல் விழாமல் அவிழ்ந்து கொண்டே வரும் நாடகத்துக்கு இரண்டாவது முடிச்சுப் போட்டுப் பார்த்திருக்கிறார்கள். மூன்றாவது முடிச்சுப் போட்டு இறுக்க அவர்களாலும் முடியவில்லை!

— எஸ். வி. எஸ்.





கல்லானால் கடவுளாகலாம்!

என்னுடைய நண்பர் வலம்புரி சோமநாதன் ஒரு விஷயத்தை எனக்கு ஞாபகப் படுத்தினார்.

வெள்ளைகால் சுப்பிரமணிய முதலியார் எழுதிய 'அகலிகை வெண்பா'வில் ஒரு கட்டம்.

அகலிகை கெடுக்கப்பட்டதும், கணவனான முனிவனால் சாபமிடப்பட்டதும், கல்லாக மாறியதும் எல்லோரும் அறிந்த ஒன்றே. ஆனால் அகலிகை கல்லாக்கப்பட்டதற்கு வெள்ளைகால் முதலியார் ஒரு புதிய காரணத்தைச் சொல்கிறார்.

''அகல்யா, முனிவன் உன்னைக் கல்லாக்கியது கோபத்தால் அல்ல; உன்மீது கொண்ட வெறுப்பினாலுமல்ல; சொல்லப் போனால் அன்புதான் காரணம். நாம் கற்பிழந்துவிட்டோமே என்று தினம் தினம் எண்ணி, நொந்து வெந்து சாகாமல் இருப்பதற்காகவே முனிவன் உன்னைக் கல்லாக்கினான். மனத்தைக் கல்லாக்கிக் கொள்ள உன்னால் முடியாதென்றே உடலையும் சேர்த்துக் கல்லாக்கினான்.''

ஆம்; உண்மைதான்!

''ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஸ்ரீ ராமன் அந்தப் பக்கம் வருவான். அவனது பாததூளி பட்டதும் நீ மீண்டும் பெண்ணாவாய்'' என்று சாப விமோசனத்தையும் முனிவன் ஏன் சொன்னான்?

கொஞ்ச காலம் கல்லாகக் கிடந்தால் மனம் மரத்துப் போவது மட்டுமின்றி நிகழ்ச்சி மறந்தும் போகும். மீண்டும் பெண்ணாகும் போது அவள் புதிய பெண்ணாக எழுவாள்.

—இது புராணக் கதை.

உடலைக் கல்லாக்கிக் கொள்ள முடியாத மனிதர்கள் மனத்தைக் கல்லாக்கிக் கொள்ளப் பழக வேண்டும்.

கல்லினுள் கிடக்கும் தேரைக்கு, வெளி உலகத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது. அது தெரியாததால் அதற்கேதும் கவலை உண்டா?

மண்ணுக்குள் கிடக்கும் 'நாக்குப் பூச்சி' விண்ணிலே பறக்க முடியாது. பறக்கும் குருவியைப் பார்த்து அது வருத்தப்பட்டதுண்டா?

இருக்கிற இடமும், இறைவனால் கொடுக்கப்பட்ட அளவும் 'இவ்வளவுதான்' என்று முடிவு கட்டிக் கொண்டால், போட்டி, பொறாமை, சூழ்ச்சிகள் அற்றுப் போய், மனம் கல்லாகி விடுகிறது. ஆனால், கல்லுக்குள்ளேயும் ஈரம் இருக்கிறது.

''எல்லோரும் சாகவேண்டியவர்கள்தான்'' என்பது எல்லோருக்குமே தெரிகிறது. ஆனால் யாராவது செத்துப்போனால் அவர்கள் ஏன் அழுகிறார்கள்?

ஆம்; கல்லிலே ஈரம் கசிகிறது.

அகலிகை கல்லாகக் கிடந்து மீண்டபோது, நடந்த நிகழ்ச்சியை மறந்துவிட்ட நிலையில்தான் இருந்தாள். ஆனால் முனிவனோ? அதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருந்தான்!

அவனும் கல்லாகிப் போயிருந்தால் சமரசம் செய்வதற்கு ஒரு ராமன் தேவைப்பட்டிருக்க மாட்டான்!

கவலை இல்லாமல் இருக்க எல்லோருமே கல்லாக இருக்க வேண்டும்.

கல்லினுள்ளே ஈரம் கசியத்தான் செய்யும்.

ஆனால் கல்லாக இருப்பதிலே என்ன சுகம் என்று அறிய ஒரு சந்தர்ப்பம் வேண்டாமா?

அப்படி இருந்து விட்டால் நமக்கு ஞாபக சக்தி தேவையில்லை; கோபத்தை அடக்கிக் கொள்வதற்கு மாத்திரைகள் தேவையில்லை; அடிப்பது வெயிலானால் காய்வோம்; பெய்வது மழையானால் குளிர்ச்சியடைவோம்.

கல்லும் கல்லும் ஒருநாளும் மோதிக் கொள்வதில்லை. அதுபோல் ஒரு கல் இன்னொரு கல்லிடம் அன்போ, அனுதாபமோ காட்டுவதில்லை.

நான்கு சுவர்களுக்கு நடுவே நட்டுவைத்த சிலைக்கு நேற்று ஏது, இன்று ஏது, நாளை ஏது?

நாம் கல்லாகிவிடும் அதே நேரத்தில் கோயிலில் சிலையாக இருக்க முயற்சி செய்வோம்.

வாசற்படியாக அமைவதுதான் நமது தலையெழுத்து என்றால், அதையும் வரவேற்போம்.

ஒரே மாதிரி வாழ்க்கை அலுத்துப் போய் விட்டது. புதிய வாழ்க்கைக்குத் திருப்பப் பட்டிருக்கிறோம். எப்போதாவது ஸ்ரீராமன் மறுபடியும் இந்தப் பக்கம் வந்து நம்மை எழுப்புகிற வரையில் நாம் கல்லாகவே இருப்போம்.

வாழ்க்கை இப்படி ஆகிவிட்டதே என்று யாரும் கவலைப்படத் தேவையில்லை.

புதுமைகள் முதலில் பயங்கரமாகத்தான் காட்சி அளிக்கும்.

நான் ஏற்கனவே எழுதியிருக்கிறேன்:

''என்னதான் கோயிலிலே முருகன் சிலை அழகாக இருந்தாலும், மலையில் இருந்து அந்தக் கல்லை எடுப்பதற்கு வெடிதான் வேண்டியிருந்தது!''

வறுமை என்னும் வெயில் அடித்தாலும், வளமான மழை பெய்தாலும், உணர்ச்சிகளற்ற கல்லை அவை என்ன செய்ய முடியும்?

துன்பத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்; இன்பத்தை எதிர்பாருங்கள்.

பிறந்தனவெல்லாம் அழியும், அழிந்தனவெல்லாம் பிறக்கும்.

தொடங்கியதெல்லாம் முடியும்; முடிந்தனவெல்லாம் தொடங்கும்.

தொடங்கி முடியும், முடிந்து தொடங்கும் உலகத்தில் ஒவ்வொருவருக்கும் ஒரு சீஸன் வரும்! கோதாவரியில் தண்ணீர் ஓடும்போது, காவிரி மட்டும் காய்ந்தே கிடக்குமா என்ன?

நல்ல சந்தர்ப்பங்களை எதிர்பார்த்து வரும் சோதனைகளைத் தாங்கிக் கொள்ளுங்கள்.

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran



A fairness cream that works without bleaching



Never before in the world has there been a product that has been able to effect fairness without bleaching. Till now, trying to make the skin fairer has always been a chancy business. Using a bleach to lighten the skin is known to be harmful, particularly if used frequently, owing to its harsh characteristics.

Fair & Lovely is a scientific breakthrough that works two ways

1. It has a vitamin that works from the inside

The vitamin enters the skin as you apply the cream. You can feel it working as you smooth it in . . . gently reversing the spreading of skin-darkening. With regular application through a period of six weeks you will notice the difference. And so will others.

2. It has sun screen agents to protect from outside

Fair & Lovely protects the skin by filtering out those sun rays that cause skin darkening.

Fair & Lovely a fairness cream . . . and more

Use it as a vanishing cream under make-up, at least once a day, twice for best results. Regular use of Fair & Lovely will ensure that you keep your complexion as fair as you want it to be.

Fair & Lovely – the gentle way to a fairer skin

A Quality product of Hindustan Lever

LINTAS.FALOV.6-

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

CLEVITE

RESEARCH HAS PROVED **COPPER-LEAD** TO BE THE RIGHT COMBINATION MATERIAL FOR



HEAVY DUTY

APPLICATIONS

In 50 years working with all materials, CLEVITE research has proved copper-lead to be the right combination material in the world for heavy duty applications.

Where in all cases, the test is in performance spread over many years, CLEVITE copper-lead have proved to be the best heavy duty engine bearings.





BIMETAL BEARINGS LIMITED

(in technical collaboration with Clevite Corporation, Cleveland, Ohio, USA)

2, ARTS COLLEGE ROAD, COIMBATORE - 18

A Unit Company of Amalgamations Group